15 டிசம். '93

ரூ. 3.00

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



## பா.ஜ.க. பாசிச தோல்வியும் மாய்மாலமும்

படிப்பகம்

www.padippakam.com

# ''நக்சல்பாரி பாதையில் சிவப்புப் பூ பூக்கும்''

ரஷ்ய புரட்சி நாள் - நவம்பர் 7 அன்று தடையை மீறி ரஷ்யப் பாட்டாளிகளாலும் முதலாளித்துவவாதிகளின் 'கம்யூனிச தோல்வி' பிரச்சாரத்தை மீறி உலக கம்யூனிச இயக்கங்களாலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நவம். 7-ல் செஞ்சதுக்கத்தில் கூடிய கம்யூனிச ஆதரவாளர்கள் மீது யெல்ட்சினின் படை தாக்குதல் தொடுத்து விரட்டியடித்தது. எனினும் புறநகர்ப் பகுதிகளில் கூடி புரட்சி நாளை அவர்கள் கொண்டாடினர். மக்களின் எழுச்சியால் லெனின் சமாதிக்கும் மலர் அஞ்சலி செலுத்த அனுமதிக்க வேண்டியதாகிவிட்டது.

தமிழ்நாட்டில் பல பகுதிகளில் மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்பினரும் ''நவம்பர் 7''ஐ உற்சாகமுடன் கொண்டாடினர். நாடு மறுகாலனியாகி வருவதற்கு எதிராகவும், இந்து மதவெறி பாசிச அபாயத்திற்கு எதிராகவும் போராடுவதாக இந்நாளில் உறுதியெடுத்துக் கொண்டனர். மதுரையில் பு.மா.இ.மு.வினர் சோலை அழகுபுரம் முக்கிய சாலையில் கம்யூனிசத் தலைவர்கள் படங்களையும், முழக்கங்கள் அடங்கிய தட்டி, பதாகைகளையும் வைத்திருந்தனர். நகரில் பரவலாக சுவரொட்டி இயக்கமும் எடுத்தனர். பதாகையில் ''வசந்தத்தின் இடிமுழக்கமென நக்சல்பாரி புரட்சிப் பாதையில் நவம்பர் புரட்சிப் பூ இங்கும் பூக்கும்'' என்று எழுதி வைக்கப்பட்டிருந்த முழக்கம் பரவலாக மக்களின் கவனத்தை ஈர்த்ததால் போலீசு குறிப்பெடுத்துச் சென்றது. செல்லூர் பகுதியிலும் பு.மா.இ.மு. இதே போல் விழா கொண்டாடியது. சமயநல்லூரில் ம.க.இ.க., ஒலிபெருக்கியில் பாடல் - பேச்சு ஒலிபரப்பு மூலமும் அறைக்கூட்டம் மூலமும் புரட்சி நாளை நினைவுகூர்ந்து கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் சென்றது. ம.க.இ.க. மாநில இணைச் செயலர் கதிரவனும் பு.மா.இ.மு.வைச் சேர்ந்த ரவீந்தரனும் சிறப்புரையாற்றினர். ரஷ்ய, கிழக்க ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சி, 'கம்யூனிசத்தின்' வீழ்ச்சி அல்ல என்று விளக்கிப் பேசினர். மேலும் மாட்டுக்கறி உணவு கூட்டாக சமைத்து சாப்பிட்டும் மகிழ்ந்தனர்.

திருச்சியில் நவம். 7 விழாவும் பு.மா.இ.மு. கிளை தொடக்க விழாவும் இணைந்து நடந்தது. திருவானைக்காவல் மற்றும் துவாக்குடி பகுதிகளில் கிளைகள் தொடங்கப்பட்டன. திருவானைக்காவலில் பொதுக்கூட்டம் மற்றும் கலைநிகழ்ச்சிக்கு போலீசு அடாவடித்தனமாக அனுமதி மறுத்ததால் கொடியேற்றி மட்டும் கிளை தொடங்கப்பட்டது. கொடியேற்றும் நிகழ்ச்சியையும் போலீசு தடுக்கவே, போராடியே நிறைவேற்றப்பட்டது. பு.மா.இ.மு. செயலர் கிறிஸ்டி கொடியேற்றி பேசினார். மற்றும் பிற பிற்போக்கு மத விழாக்களை புறக்கணிக்க வேண்டியதன் அவசியம்பற்றி ஜெகதீசன் விளக்கிப் பேசினார். பிரசுரங்கள் பரவலாக விநியோகிக்கப்பட்டன. மாட்டுக்கறி உணவு சமைத்து மக்களுக்கு விநியோகித்தும் இந்துமத பாரம்பரிய புனிதத்துவமும் முறியடிக்கப்பட்டது. ரமேச என்பவர் திருவானைக்காவல் கிளை அமைப்பாளராகவும், சேகர் துவாக்குடி கிளைச் செயலாளராகவும் அறிமுகம் செய்யப்பட்டனர்.

# தொழிலாளர்மீது அடக்குமுறை மக்கள்மீது கட்டண உயர்வு

மாதச் சம்பளம் ரூ 2500-க்கு மேல் உள்ளவர்களுக்குப் போனசாகக் கிடையாது என்று ஜெயா அரசு அறிவித்ததை எதிர்த்து, கடந்த நவம்பர் மாதத் தொடக்கத்தில் தமிழக அரசுப் போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். இந்த அறிவிப்பின்படி, பல ஆண்டு காலம் உழைத்த மூத்த தொழிலாளர்களுக்கு சல்லிக்காசுகூட போனஸ் கிடைக்காது; 25 ஆயிரம் தொழிலாளர்களுக்கு சராசரியாக 800 ரூபாய் வரை போனஸ் வெட்டப்படும்; கொஞ்சநஞ்சம் போனஸ் வாங்கும் எஞ்சியவர்களுக்கும் அடுத்துவரும் ஆண்டுகளில் அதுக்கூட கிடைக்காது. எனவேதான் இந்த அநீதியை எதிர்த்துத் தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கினர்.

மாத வருமானம் ரூ 2500க்கு மேல் உள்ளவர்களுக்கு போனஸ் வழங்கக்கூடாதென மத்திய அரசு உத்திரவிட்டுள்ளதைக் காட்டி, தமது செயலுக்கு நியாயம் கற்பித்தார் போக்குவரத்து அமைச்சர். ஆனால் பத்தாம் பசலித்தனமான இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த மத்திய அரசே தனது ரயில்வே, தொலைத்தொடர்பு, துறைமுகம் போன்ற துறைகளில் ரூ 2500 என்ற வரம்பை உயர்த்தி போனஸ் வழங்கியுள்ளது. வங்கி ஊழியர்களுக்கு ரூ 4500 வரை போனஸ் வழங்க உத்திரவிட்டுள்ளது. அவ்வளவு ஏன், தமிழக அரசின் புகளூர் காகித ஆலையில் வருமான வரம்பின்றி போனஸ் வழங்க கடந்த ஆண்டு முதல்வர் ஜெயா உத்திரவிட்டுள்ளார். ஆனால் போக்குவரத்து ஊழியர்களுக்கு அரசு போனஸ் தர மறுத்து அடாவடித்தனம் செய்தது.

போலிக் கம்யூனிஸ்டுகள், தி.மு.க. தலைமையிலான மின்துறை ஊழியர்களுக்கும் இதேபோன்ற அநீதி இழைத்து போனஸ் மறுக்கப்படுகிறது. ஆனால் வழக்கம்போல அதை அமைதியாக ஏற்றுக் கொள்ளும்படியே தலைமை போதிக்கிறது. போக்குவரத்துத் தொழிலாளர்களின் போர்க்குணமே அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முக்கிய காரணமாக அமைந்தது. இருந்தாலும் பொது மக்கள் ஆதரவு இல்லாதது இப்போராட்டத்தில் முக்கியமானதொரு குறைதான்.

தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் இரு நாட்களுக்கு மேலாக நீடித்தும், ''லாரி டிரைவர்களையும், பயிற்சி பெறுவோரையும், முன்னாள் இராணுவத்தினரையும் கொண்டு பேருந்துகளை ஓட்டுவேன்; 24 மணி நேரத்தில் வேலைக்கு வரா விட்டால் நடப்பதே வேறு'' என்று கொக்கரித்தார் அமைச்சர்; அதோடு, பணிமனைகளுக்கு அ.தி.மு.க. குண்டர்களை ஏவியும், பத்தாயிரம் தொழிலாளர்களைச் சிறையிலடைத்தும், வெறியாட்டம் போட்டது ஜெயா கும்பல். பயிற்சியற்றவர்கள் பேருந்துகளை ஓட்டியதால் சில கோரமான விபத்துக்களும், சாவுகளும் தொடர்ந்தன. ஏறத்தாழ ஒருவார காலமாக நீடித்த போராட்டம், தமிழக அரசு தற்காலிகமாக ரூ 1000 வழங்குவது, போனசுக்கான வருமான வரம்பு உயர்த்துவது பற்றி மத்திய அரசு அதிகார பூர்வமாக அறிவிப்பு வெளியிட்டதும் வரும் மார்ச் மாதத்தில் போனஸ் வழங்குவது என உடன்பாடு ஏற்பட்ட பிறகு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் மிகச் சாதாரண பொருளாதாரக் கோரிக்கைக்கான போராட்டத்தைத்தான் நடத்தினர். ஆனால் அதைக்கூட சகித்துக் கொள்ள முடியாமல், பாசிச முறையில் அடக்கி ஒடுக்குவதையே நோக்கமாகக் கொண்டு ஜெயா கும்பல் வெறியாட்டம் போட்டது. இப்போராட்டம் முடிந்து 15 நாட்களுக்குள்ளாகவே அனைத்துப் பேருந்துக் கட்டணத்தையும் அநியாயமாக உயர்த்தியுள்ளது. தொழிலாளர் போராட்டத்தால் ஏற்பட்ட இழப்புதான் கட்டண உயர்வுக்குக் காரணம் என்பதாக மக்களின் கோபத்தை திசைத் திருப்புகிறது. இனி தொழிலாளர்கள் மரபுரீதியான நீர்த்துப்போன போராட்ட முறைகளை மேற்கொள்ள முடியாது; இரகசிய தற்காப்புப் பயிற்சி பெற்ற, மக்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்ட புதிய தொழிற்சங்கத்தைக் கட்டியமைத்துப் போராடாமல் இத்தகைய அடக்குமுறைகளை முறியடிக்க முடியாது என்பதையே இப்போராட்டம் படிப்பினையாக உணர்த்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

1-2

16 நவம். - 15 டிசம். '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# பா.ஜ.க. தோல்வியும் பாசிச மாய்மாலமும்

நான்கு மாநிலங்களிலும், தலைநகர் டெல்லியிலும் நடந்து முடிந்த சட்டமன்றங்களுக்கான இடைத்தேர்தல்களில் டெல்லி தவிர இதரவற்றில் இந்துமதவெறி பாசிசப் பரிவாரங்களின் அரசியல் பிரதிநிதியான பாரதீய ஜனதா கட்சியின் முகத்தில் மக்கள் கரிபூசிவிட்டார்கள். இவற்றில் மத்திய, உத்திர, இமாச்சலப் பிரதேசங்களிலும் கட்சிமாறிகளின் கூட்டோடு இராஜஸ்தானிலும் பா.ஜ.க. அறுதிப் பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சி நடத்தி வந்தது. கடந்த ஆண்டு இந்துமதவெறி பாசிச பரிவாரங்கள் அயோத்தி பாபரி மசூதியைத் தகர்த்ததைத் தொடர்ந்து அம்மாநிலங்களில் பா.ஜ.க.-வின் ஆட்சி கலைக்கப்பட்டு, ஆளுநர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது.

அயோத்தி மசூதி இடிப்பையும், அப்புறம் ஆயிரக்கணக்கான மக்களைப் பலி கொண்டு, தாம் நடத்திய மதவெறி வன்செயல்களையும் இந்துக்கள் முற்றாக ஆதரிப்பார்கள்; நாடு முழுவதும் "இந்துத்துவ" அலை வீசுகிறது என்று அப்பாசிசப் பரிவாரங்கள் நம்பின. எனவே தான் உடனடியாக நான்கு மாநிலத் தேர்தல்களை மட்டுமல்லாது, மத்திய நாடாளுமன்றத் தேர்தல்களையும் நடத்துமாறு அவை கோரின; அதற்காக அரசுத் தலைவரிடம் மனுக்கொடுத்தனர்; பொது வேலை நிறுத்தங்கள், கையெழுத்து இயக்கங்கள், பேரணிகள், யாத்திரைகள் நடத்தினர். வாக்களித்தபடி மசூதியைக் காக்கத் தவறிய காங்கிரசு, அப்பரிவாரங்களுடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்து, சில கண் துடைப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் முஸ்லீம்களின் ஆதரவை மீண்டும் பெறத் திட்டமிட்டது. அதற்காக பிரச்சினையை ஆறப்போட்டு, உடனடியாகத் தேர்தலை நடத்தாது இழுத்தடித்தது.

இப்போது நடந்து முடிந்த தேர்தல்களில் மார்வாரி - பனியா வியாபாரிகள், மேல்சாதி அதிகார வர்க்கத்தினர், மஃபியா - ரௌடிகள் ஆதரவுடன் டெல்லியில் மட்டும் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிக்க முடிந்தது. அதே மார்வாரி - பனியா வியாபாரிகளோடு, பார்ப்பன - ராஜபுத்திர சாதிகளின் ஆதரவுடன் தனிப்பெருங் கட்சியாகி தனது நிலையை இராஜஸ்தானில் தக்க வைத்துக் கொண்டது; என்றாலும் சுயேச்சைகள், கட்சிமாறிகளை விலைக்கு வாங்கித் தான் அங்கும் ஆட்சியைப் பிடிக்க முடியும். லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு, உட்கட்சி தகராறுகளால் புழுத்து நாறிய இமாச்சல, மத்தியப் பிரதேசங்களில் அக்கட்சி மண்ணைக் கவ்வியது.

உ.பி.யில் பா.ஜ.கட்சி தனிப்பெருங் கட்சியாக வந்தாலும், முன்பிருந்த 50-க்கும் மேற்பட்ட தொகுதிகளையும் அதனால் ஆட்சி அதிகாரத்தையும் இழந்துள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட முலயாம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாதி கட்சி - கன்சிராம் தலைமையிலான பகுஜன சமாஜ் கட்சி கூட்டணி ஆட்சியைப் பிடித்துள்ளது (காங்கிரசு - ஜனதா தள ஆதரவுடன்). இதுபோன்ற வலுவான மாற்று இல்லாத நிலையில் இமாச்சல, மத்தியப் பிரதேசங்களில் மீண்டும் காங்கிரசு முன்னிலைக்கு வந்துள்ளது. குறிப்பாக சிறுபான்மையினருக்கு எதிரான பாதுகாப்பற்ற நிலையைக் கண்டஞ்சும் முஸ்லீம்கள் மற்றும் மதச்சார்பற்ற உழைக்கும் மக்களின் உறுதிதான் இந்து மதவெறி பாசிசப் பரிவாரங்களின் இத்தோல்விக்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.

ஆனால் மக்களது கருத்தை ஒருபோதும் மதியாத இந்துமதவெறி பாசிஸ்டுகள் வழக்கம் போல தமது தோல்வியை மூடி மறைக்கப் பல மாய்மாலங்கள் செய்து, தமது அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுகளை நியாயப்படுத்துகின்றனர். "இமாச்சலப் பிரதேசத் தோல்விக்குக் காரணம் தேசிய (அயோத்தி) பிரச்சினை அல்ல; உள்ளூர் விவகாரம்தான். இராஜஸ்தானில் நாங்கள் தனிப்பெருங்கட்சியாக வளர்ந்துள்ளது திருப்தியளிக்கிறது. உ.பி.யில் காங்கிரசும் ஜனதா தளமும் தலைகுப்புறக்கவிழ்ந்து எமக்கு எதிரான ஓட்டுக்கள் ஓரளவு சமமாக பிரியாததால்தான் நாங்கள் பின்னடைவு கண்டோம். இருந்தாலும் மொத்தத்தில் எங்களுக்கு 9 சதவீத ஓட்டு அதிகரித்திருப்பது எமது ஆதரவு அடித்தளம் விரிவடைந்திருப்பதைக காட்டுகிறது; அதை உறுதிப்படுத்துவோம். டெல்லி ஒரு சிறு (மினி) இந்தியா: இங்கு நாங்கள் பெற்றுள்ள வெற்றி முக்கியமானது" என்று பேசிவருகின்றனர்,.

"இந்துத்துவ" சித்தாந்தத்தின் ஒன்று திரட்டப்பட்ட சின்னமாக 'தேசிய'ப் பிரச்சனையாக ராமஜென்ம பூமி விவகாரத்தை இந்துமதவெறிப் பாசிச பரிவாரங்கள் இதுவரை பிரச்சாரம் செய்து வந்தன. ஆனால் அப்பிரச்சினையின் மீதான கருத்துக் கணிப்பல்ல இத்தேர்தல் முடிவுகள் என்று இப்போது புளுகிறார்கள். "இனி நாங்கள் அடையாளங்கண்டு முன்னிலைப்படுத்தும் பிரச்சினைகள், வேட்பாளர்களைத் தெரிவு செய்வது, நிதி பங்களிப்பு மற்றும் தேர்தல் பிரச்சார முறை ஆகியவற்றைப் பரிசீலித்து பாடங்களைக் கற்போம்" என்கிறார் பா.ஜ.க. தலைவர்களில் ஒருவர். இதன் பொருள், அயோத்தி விவகாரத்தோடு வேறு பல பிரச்சினைகளையும் சேர்த்து மாய்மாலங்கள் செய்வோம் என்பதுதான். அதே சமயம் இத்தேர்தல்களில் பா.ஜ.க. பின்னடைவுகளைக் கண்டாலும் அதுதான் ஒரு தனிப்பெரும் 'தேசிய'க் கட்சியாக உருவாகி வருகிறது; காங்கிரசு மற்றும் தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணி ஆகிய இரண்டுமே அதற்கு ஒரு மாற்றுச் சக்தியாக நீடிக்கவோ, மீண்டும் வளரவோ முடியாது என்பது நிரூபனமாகிவிட்டது. அதோடு இத்தோல்விகளுக்குப் பலிவாங்கவும், அவற்றுக்கு ஈடுகட்டி முன்னேறவும் இந்துமதவெறி பாசிச பரிவாரங்கள் மேலும் மூர்க்கமாய் தாக்குதல்களைத் தொடுக்கவே செய்யும். அதன் பேரபத்துகள் நீங்கிவிடவில்லை; ஆகவே முன்னிலும் கூடுதலான உறுதியோடு நாடு முழுவதும் உள்ள மதச்சார்பற்ற, புரட்சிகர, ஜனநாயக சக்திகள், இந்துமத பாசிசத்தை எதிர்த்துப் போராடி, முறியடிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# தி.மு.க. பிளவால் தமிழக அரசியலில் விளைவு என்ன?

தி.மு.க.வில் இருந்து வை.கோபால்சாமி மற்றும் ஒன்பது மாவட்டச் செயலாளர்கள் உட்பட அவருக்கு ஆதரவாக நின்ற 40 முக்கியப் பிரமுகர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இதனால் மேலிருந்து கீழ்வரை கட்சி நெடுக்காகப் பிளவுபடத் தொடங்கி விட்டது. விரைவில் இன்னொரு 'திராவிடக் கட்சி உருவாக்கப்படும்.

தி.மு.க.வில் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு அக்கட்சியை மட்டுமே பாதிக்கும் விவகாரமாகப் பார்க்க முடியாது. திராவிடப் பாரம்பரியம், தமிழினம், மொழி, சமூக நீதி (வகுப்புரிமை... இட ஒதுக்கீடு) ஆகிய பெயரால் தேர்தல் அரசியல் நடத்தும் கட்சிகளின் எண்ணிக்கை சிறியதோ, பெரியதோ அதிகமாகிவிட்டது. இந்தவகை அரசியல் உணர்வு கொண்ட இளைஞர்களிடையே வை.கோ. அணியின் வரவு கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அது தேர்தல் அரசியல் கணக்கில் (அணி சேர்க்கை, ஓட்டுப் பிரிவு ஆகியவற்றில்) ஏற்படும் மாற்றங்கள் ஆட்சி-அதிகார அரசியலில் குறிப்பிடத்தக்க முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தும்.

மத்தியில் ஆர்.எஸ்.எஸ். - இந்து மத வெறி பாசிச கும்பல் பலம் பெற்றுவரும் நிலையில், தி.மு.க.வின் பிளவு மாநிலத்தை ஆளும் பார்ப்பன - பாசிச ஜெயா ஆட்சிக்குச் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது சிறப்பாக புரட்சிகர, ஜனநாயக இயக்கங்கள் கவனிக்க வேண்டியதாக உள்ளது.

தி.மு.க.வில் பிளவு யாருமே எதிர்பாராத ஒன்றல்ல. கருணாநிதி தனது அரசியல் வாரிசாக மு.க. ஸ்டாலினை முன்னிறுத்திய போதே பிளவுக்கான விதை ஊன்றியாகி விட்டது. ஆனால் பிளவுக்கும் வை.கோ.வுக்கு இவ்வளவு ஆதரவு கிட்டியிருப்பதற்கும் அக்கட்சியில் எழுந்த வாரிசு - தலைமைச் சண்டை மட்டுமே காரணம் அல்ல. கட்டுப்பாடான கழகம், தவறாது கழகத் தேர்தல்களை நடத்தும் ஜனநாயகம், அரசியல் முதிர்ச்சி, 'ராஜதந்திரம்' என்கிற வெளித்தோற்றத்துக்குள்ளே கருணாநிதி கழகத்திற்குள் நடத்திவந்த சூழச்சிகளால் கணிசமான 'உடன்பிறப்புகள்' அதிருப்தியும் வெறுப்பும் அடைந்திருந்தது இன்னொரு காரணமாகும்.

எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா கழகங்களில் ஜனநாயகம் என்பது பேச்சுக்குக் கூட கிடையாது. அவர்கள் நினைத்தபோது, நினைத்தவரை கழகத்தில் இருந்தோ அமைச்சரவையில் இருந்தோ தூக்கி எறியவும், பிறகு சேர்த்துக் கொள்ளவும் முடிந்தது. காரண காரிய விளக்கம் எதுவும் தர வேண்டியதில்லை. காலில் விழுந்து கும்பிடுவதுதான் கட்சி விசுவாசத்திற்கான அளவுகோல்; எல்லாவற்றுக்கும் நியமனம்தான் கட்சி விதிமுறை.

ஆனால் கருணாநிதி சற்று வித்தியாசமாக கட்சி நடத்திவந்தார். ஜனநாயகத் தோற்றம் தருவதில் அக்கறையுடன் இருந்தார். அதே சமயம் சதிகள், சூழ்ச்சிகள், தூக்கிவிடுவதும், காலைவாரிவிடுவதும் கருணாநிதியின் கைவந்த கலை. உதாரணமாக மதுரை முத்துவுக்கு எதிராக காவேரி மணியம், தென்னரசைத் தூக்கிவிட்டார். பிறகு பழக்கடை பாண்டியையும், பொன். முத்து ராமலிங்கத்தையும் தூக்கிவிட்டார். இதுதான் மதுரை கழக அரசியல்; போலீசு காவல், தடியடி இல்லாமல் கழகத் தேர்தல் நடந்ததே இல்லை. இதே போலத்தான் சென்னையில் செல்வாக்குப் பெற்றிருந்த ஆர்.டி.சீதாபதி, கருணாநிதியினால் உருவாக்கப்பட்டவர். பின்னர் அவரும் டி..ஆர். பாலுவைத் தூக்கிவிடுவதற்காக வீழ்த்தப்பட்டார். கருணாநிதியின் இப்படிப்பட்ட தந்திரங்கள் ஆர்.டி. சீதாபதி, பழக்கடை பாண்டி, மதுரை முத்து போன்றவர்களை எம்.ஜி.ஆரின் காலில் விழக் காரணமாக அமைந்தன.

கருணாநிதிக்கும் அவரது குடும்பத்துக்கும் விசுவாசம் இல்லாதவர்கள் ஓரங்கட்டப்பட்டார்கள், பழி வாங்கப்பட்டார்கள் அல்லது தூக்கி எறியப்பட்டார்கள். இப்போது வை.கோ.வின் பின்னால் நிற்பவர்கள் அப்படிப்பட்டவர்கள்; அதையும் மீறி கட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்றவர்கள் இப்படிச் சொந்தச் செல்வாக்குள்ளவர்கள் எவரையும் கருணாநிதி பொறுத்துக் கொள்ளமாட்டார்; அன்பழகன், சாதிக், ஆற்காடு வீராசாமி, துரைமுருகன் போன்ற வேரும் விழுதும் இல்லாத தலையாட்டிகள் - துதிபாடிகள் தாம் அவருக்குத் தேவை; தாம் விரைவில் பழிவாங்கப்படுவோம்; அதற்கு முன்பு ஏதாவது புதிய தலைமையைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று காத்திருந்தவர்களுக்கு வை.கோ. கிடைத்தார். வை.கோவின் குறையும் இதுதான் - தான் ஓரங்கட்டப்பட்டு, பழிவாங்கப்பட்டதாகத் தான் குற்றஞ்சாட்டுகிறார்.

வை.கோ.வும் அவரது ஆதரவாளர்களும் தாமாக கழகத்தைப் பிளவுபடுத்திக் கொண்டு வெளியேறினால் பழிபோடுவதற்கான உத்தியாக, ''கழகத்தைப் பிளக்க மத்திய உளவுத்துறை சதி'' செய்வதாகக் கருணாநிதி கூறி வந்தார். பிறகு மத்திய உளவுத்துறையின் உறுதிப்படுத்தப்படாத சதி என்கிற சதியை வைத்து ''வை.கோ.வின் அரசியல் ஆதாயத்துக்காக கருணாநிதியைக் கொல்ல புலிகள் திட்டமிட்டிருப்பதாக'' பழிபோட்டு கழகத்தைத் தானே பிளவுபடுத்திவிட்டார். இது எப்படி நடந்தது என்கிற விவரங்களை சென்ற ''புதிய ஜனநாயகம்'' இதழில் பார்க்கலாம். எவ்வாறாயினும் தெற்கே முகவை, நெல்லை மாவட்டங்களில் மட்டுமே கழக அணிகளிடம் செல்வாக்குப் பெற்றிருந்த வை.கோவுக்கு வடக்கே செங்கை, தென் ஆற்காடு, மேற்கே கோவை, பெரியார், கிழக்கே திருச்சி,

**சென்னை உயர்நீதி மன்றம் முன் வை.கோ. அணியின் வக்கீல்கள் கருணாநிதி கொடும்பாவி எரிப்பதை தடுத்து, பறித்துச் செல்லும் போலீசு.**






படிப்பகம்

www.padippakam.com



மதுரை புறநகர் தி.மு.க. அலுவலகத்தில் கருணாநிதி படத்தை அகற்றும் வை.கோ. ஆதரவாளர்கள்: பிளவின் எதிரொலி.

தஞ்சை மாவட்டங்களிலும் கூட செல்வாக்குச் சேருவதற்கு கருணாநிதியின் அணுகுமுறை முக்கிய காரணமாகிவிட்டது.

கருணாநிதியே எதிர்பாராத அளவு வை.கோவுக்கு ஆதரவு இருந்ததால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் இவர் திணறினார். ''கொலை திட்டம்'' என்ற செய்தி தனக்கு அனுதாபம் ஏற்படுத்துவதைவிட வை.கோ. மீது அனுதாபம் ஏற்படவே காரணமாக அமைந்தது. இது ஸ்டாலினுக்குச் சாதகமாக வை.கோவைத் தூக்கி எறிய நடந்த சதி என்று அரசியல் துறவு நாடகமாடி அனுதாபம் பெற முயன்றார், கருணாநிதி. அதிலும் நிச்சயமான ஆதரவு திரட்ட முடியாமற்போகவே பயணத்தைப் பாதியில் கைவிட்டு நேரடி நடவடிக்கையில் இறங்கிவிட்டார்.

வை.கோ., அவரது ஆதரவாளர்கள் நீக்கம் தி.மு.க. பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவில்லை. எம்.ஜி.ஆர். சாவுக்குப் பிறகு நடந்த ஜானகி - ஜெயா சக்களத்திச் சண்டையைப் போல தி.மு.க. சொத்துக்கள், பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்கான அடிதடி மோதல் இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. கரூரில் தொடங்கியுள்ள இத்தகராறு அறிவாலயம், முரசொலி அலுவலகத்தைக் கைப்பற்றுவது வரை போகலாம். பழி தீர்ப்பதற்குக் காத்திருக்கும் ஜெயா, தனது போலீசை ஏவி தி.மு.க. சொத்துக்களை முடக்கிவிடத் தவறமாட்டார். இதுவரை கட்சி அரசியல்வாதிகள், நோக்கர்கள் மத்தியில் மட்டுமே தெரியவந்துள்ள மு.க. - வை.கோ. விவகாரம் பரவலான மக்களிடையே பிரபலமாகி, தி.மு.க. செல்வாக்கிழப்பதற்கு சொத்துத் தகராறுகளைப் பரபரப்பான செய்தி ஆக்கிட வேண்டும் என்பது ஜெயலலிதாவுக்குத் தெரியும்.

தி.மு.க. பிளவு தமிழக தேர்தல் அரசியல் முடிவில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தப்போவது நிச்சயமாகிவிட்டது. பிளவுக்குச் சற்றுமுன்பு நடந்த பழநி, இராணிப்பேட்டை இடைத்தேர்தல்களில் பலகோடி ரூபாய் வாரி இறைத்து, முழுச் சக்தியையும் பயன்படுத்தியும் தலைதப்பினால் போதும் என்ற நிலையிலேயே ஜெயலலிதா கட்சி வெற்றி பெற்றது. 1991 தேர்தல்களில் வாங்கிய அதிர்ச்சிகரமான தோல்வியில் இருந்து தி.மு.க. மீண்டும் பழைய பலம் பெற்றுவருவதை இவ்விரு இடைத்தேர்தல்களும் காட்டின.

அதற்கு முன்பு ஜெயா ஆதரவு ஏடுகளான 'சோ'வின் 'துக்ளக்'கும், இந்துவும் நடத்திய கருத்துக் கணிப்பின்படி தமிழக சட்டமன்றத்துக்கு தேர்தல்கள் நடந்தால் தி.மு.க. அமோக வெற்றி பெறவும், கருணாநிதி முதல்வராகவும் பிரகாசமான வாய்ப்பிருப்பதாகக் காட்டியது. இதற்கு முக்கிய காரணம் காங்கிரசு - ஜெயா கூட்டு முறிவு மட்டுமல்ல, ஜெயலலிதாவின் லஞ்ச - ஊழல் உல்லாச - ஊதாரி வாழ்க்கை, போலீசு - ரெளடி ஆட்சி, மக்கள் விரோத நடவடிக்கை ஆகியவற்றினால் தமிழக மக்கள் அவர் மீது கொண்டிருந்த மாயை விலகி வெறுப்பு பன்மடங்கு பெருகி இருப்பது பிரதான காரணமாக இருந்தது. ஆகவே தனித்துப் போட்டியிட்டாலும், காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தாலும் தி.மு.க.வின் வெற்றிக்கே வாய்ப்பிருந்தது.

அந்நிலையில் தி.மு.க.வில் புகைந்து கொண்டிருந்த உட்கட்சி தகராறு - தலைமைச் சண்டையைப் பயன்படுத்தி தி.மு.கவைப் பிளக்க ஜெய்லலிதா, காங்கிரசு ஆகிய இரு தரப்புமே முயன்றன என்பது தான் உண்மை.

காங்கிரசுடனான உறவு முறிந்த நிலையில், சில காங்கிரசு எம்.எல்.ஏ.க்களை விலை பேசி, உட்கட்சித் தகராறை மீண்டும் ஏற்படுத்தி அக்கட்சியைப் பலவீனப்படுத்துவதில் ஜெயா கும்பல் வெற்றி பெற்றுள்ளது. தனக்கும் - நடராஜனு(சசிகலா)க்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று அடிக்கடி ஜெயா அறிவிப்பு விட்டாலும் அவருக்காக நடராஜன் பல திரைமறைவு வேலைகளைச் செய்து வருகிறார். தி.மு.க.வைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்துவதற்காக நடராஜன் தனது இரண்டு கைகளால் மு.க., வை.கோ. இரண்டு அணிகளையும் உசுப்பிவிடுவதாகத் தெரிகிறது. ஒருபுறம் தனது நெருங்கிய அரசியல் தரகுக் கூட்டாளி சுப்பிரமணிய சாமி - காங்கிரசு - மத்திய உளவுத் துறை மூலம் (மு.க. பிரிவுக்குச் சாதகமாக) நடராஜன் இந்த வேலையைச் செய்கிறார். மறுபுறம் கழகங்கள் - கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, குறிப்பாக முக்குலத்தோர் என்கிற முறையில் சில பினாமிகளை எல்லா முக்கியக் கட்சிகளிலும் நடராஜன் பிடித்து வைத்துள்ளார். அவர்கள் மூலம் வை.கோ. பிரிவுடன் இரகசிய உறவு வைத்துக்கொண்டு உசுப்பிவிடுகிறார்.

தி.மு.க - காங்கிரசு கூட்டுக்கு முக்கியத் தடையாக இருப்பது, தி.மு.க - புலிகள் உறவுதான் ராஜீவ் கொலைக்கு காரணமாக அமைந்தது என காங்கிரசு அவதூறு செய்து கடந்த தேர்தலில் ஆதாயம் அடைந்துள்ளது. இப்போது வை.கோ.-வை புலிகளின் பினாமி என்பதாகக் கூறி, தி.மு.க.வில் இருந்து தூக்கி எறிந்துவிட்டால் அத்தடை நீங்கிவிடும் என்று காங்கிரசு கருதியது. கருணாநிதியும் புலிகள் ஆதரவு என்னும் ''களங்கம்'' தீரவேண்டும் என்பதில் அக்கறையுடன் இருந்தார். பிளவுபடுவதால் தி.மு.க. பலவீனமாகும்; அதனுடன் பேரம் பேசுவதும் அதிக ஆதாயம் அடைவதும் சாத்தியமாகிவிடும் என்பது காங்கிரசு கணக்கு. இதற்காக சுப்பிரமணியசாமி - மாறன் - காங்கிரசு சதியால் உருவாக்கப்பட்டதுதான் உளவுத்துறையின் உறுதிப்படுத்தப்படாத செய்தி என்பது யாவரும் அறிந்த உண்மை. வை.கோவைக் கழட்டி விடவும், தனது வாரிசைத் தலைமைக்குக் கொண்டு வரவும் இது நல்ல உத்தி; எனவே கருணாநிதியும் நம்பினார்.

**வை.கோ.வுக்கு எதிராக நடந்த சதியும் தி.மு.க. பிளவும் மொத்தத்தில் பாசிச ஜெயா கும்பலுக்கு சாதகமாகி விட்டது**



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் காங்கிரசு, கருணாநிதி இரண்டு தரப்பின் கணக்குகளுமே பொய்த்துப் போய்விடும்; தனித்துப் போட்டியிட்டாலே வெற்றி பெறும் நிலையில் இருந்து, காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தாலும் கூட ஆட்சியைப் பிடிக்க முடியாத அளவு தி.மு.க. பிளவினால் அக்கட்சி பலவீனப் பட்டுவிடும். தி.மு.க. பிளவு மொத்தத்தில் ஜெயாவுக்கே சாதகமாக அமையும் என்றே தேர்தல் கணக்குகள் காட்டுகின்றன.

''வை.கோ.-வுக்கு தி.மு.க.வின் ஒரு பிரிவு பிரமுகர்கள், அணிகள் மத்தியில் தான் ஆதரவு உண்டு. ஓட்டுப் போடும் மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை. அவர்களுடைய ஆதரவு கருணாநிதிக்குத்தான் இருக்கும்'' என்று ''சோ'' முதலியவர்கள் கணிக்கின்றனர். மு.க.வின் கணக்கும் இதுதான்; இது ஓரளவு உண்மைதான். தி.மு.க. பிளவு வழக்கமாக அக்கட்சி நம்பியுள்ள ஆண் வாக்காளர்களிடையே கணிசமான அளவு தாக்கத்தையே ஏற்படுத்தும்; அக்கட்சியை ஆதரித்து வரும் ஒரு சிறு பிரிவினரான பெண் வாக்காளர்களிடையே குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவுமே ஏற்படாது. இருந்தாலும் தனது செல்வாக்கை ஓட்டுக்களாக மாற்றுவதற்கான அமைப்பு பலம் - வண்டாகச் சுற்றிப் பணிபுரியும் அணிகளின் உழைப்பு - பெருமளவு மு.க. பிரிவுக்கு இல்லாமல் போய்விடும்.

ஆகவே தி.மு.க. ஜெயா, காங்கிரசு ஆகியவை தனித்தனியே மூன்று அணியாகப் போட்டியிடும்போது ஜெயாவுக்கே வெற்றி வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. வை.கோ. பிரிவுடன் ராமதாசின் பா.ம.க. கூட்டுச் சேரவும் சில தமிழினக் குழுக்கள் ஆதரிக்கவும் இதனால் இன்னொரு அணி உருவாகி, ஜெயா, காங்கிரசு எதிர்ப்பு வாக்குகள் மேலும் சிதறிப் போகவும் வாய்ப்பிருக்கிறது. இதுவும் ஜெயா கும்பலுக்குத் தான் சாதகமாக அமையும். தி.மு.க.வும் காங்கிரசும் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்டாலும் இழுபறி நிலை ஏற்படும் அளவுக்கு இவ்விரு கட்சிகளும் உட்கட்சித் தகராறுகள், பிளவுகளால் பலவீனப்பட்டுள்ளன.

காங்கிரசு - ஜெயா கும்பல் உறவு முறிந்து போனதில் இருந்து, சுப்பிரமணிய சாமி ஜெயா ஆட்சிக்குக் கெடு வைத்து பல் வேறு முயற்சிகளில் ஈடுபட்டதில் இருந்து ஏதாவது ஒரு காரணத்தால் ஜெயா ஆட்சி கலைக்கப்படும், அல்லது கவிழ்க்கப்படும் என்கிற ஊகம், வதந்தி, கிசுகிசு பலமாக அடிபட்டது. குறிப்பாக ஜெயாவினால் குளிப்பாட்டி வைக்கப்பட்டிருந்த பி.என். சிங் நீக்கப்பட்டு சென்னாரெட்டி தமிழக ஆளுநராக வந்ததில் இருந்தே ஜெயா ஆட்சியின் நாட்கள் எண்ணப்பட்டு வந்தன. பழநி, இராணிப்பேட்டை இடைத்தேர்தல்களில் ஜெயா கும்பல் வெற்றி பெற்றாலும் அது பலவீனப்பட்டுப் போயிருப்பதைக் காட்டியது. ஜெயாவை வீழ்த்த தி.மு.க. காங்கிரசு கூட்டு அவசியம் என்று இரு கட்சிகளின் தலைமையுமே விரும்பின. அதற்கான தடையை நீக்குவதற்காக வை.கோ.வுக்கு எதிராக நடந்த சதியும், தி.மு.க. பிளவும் உண்மையில் ஜெயாவுக்கு சாதகமாகி விட்டது.

இது ஜெயா கும்பலின் பார்ப்பன - பாசிச ஆட்சியைக் குறைந்தது அடுத்த மூன்றாண்டுகளுக்காவது கவிழ்க்கவோ, கலைக்கவோ முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டது. அதே சமயம் மத்தியிலும், பல மாநிலங்களிலும் காங்கிரசு பலவீனப்பட்டு, அடுத்த தேர்தல்களில் மத்திய ஆட்சிக்கு வரவே முடியாத நிலை உருவாகிவிட்டது. ஜெயா கும்பலுடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்துள்ள இந்து மதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ்.-இன் பாரதீய ஜனதா கட்சி பலம் பெற்று வருகிறது. அது மத்தியில் ஆட்சியைப் பிடிக்காவிட்டாலும் தனிப்பெரும் கட்சியாக மாறிவிடும் ஆபத்துள்ளது. இதுவும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்குச் சாதகமானது.

ஆகவே ஜெயா கும்பலின் பார்ப்பன - பாசிச ஆட்சியின் இருண்ட காலம் முடிந்து தமிழினத்துக்கு குறைந்தபட்சம் விடிவாவது கிட்டும் என்ற எதிர்பார்ப்பு தகர்ந்துவிட்டது. தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டுவிட்ட அக்கும்பல், தமிழக மக்களுக்கு எதிராக, மூர்க்கமாகத் தனது பலமுனைத் தாக்குதலைத் தொடுக்கும். குறிப்பாக புரட்சிகர, ஜனநாயக இயக்கங்களுக்கு எதிராக ராஜீவ் கொலையைத் தொடர்ந்து வந்த காலத்தில் நிலவிய அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடத் தயங்காது. அதன் கள்ளக் கூட்டாளியான ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி பார்ப்பன - பாசிச கும்பல் பயங்கரவாத - பிளவுவாத பீதிகிளப்பி உசுப்பிவிடும்; தூபம் போட பார்ப்பனப் பத்திரிகைகள் காத்திருக்கின்றன



பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் லஞ்ச - ஊழல், உல்லாச - ஆடம்பரக் கூத்துகளும், போலீசு - ரௌடி ஆட்சியின் ஒடுக்குமுறைகளும், மக்கள் விரோத நடவடிக்கைகளும் தங்கு தடையின்றியும், வலுவான எதிர்ப்பின்றியும், மேலும் அதிக அளவிலும் நீடிக்கும். ஏற்கனவே தாமே ஒரு பெரும் தரகு முதலாளி குடும்பமாக வளர்ந்துவிட்ட மு.க. - ஸ்டாலின் தலைமையில் முகத்துதி பாடும் பிழைப்புவாதக் கும்பல் மட்டுமே திரளுமே தவிர வலுவான எதிர்க்கட்சியாக தி.மு.க. இனியும் வளர வாய்ப்பில்லை. வை.கோ.வின் அரசியல் அடிப்படை தி.மு.க.வினுடையதுதான். எனவே அதன் போக்கில் வை.கோ. தலைமையிலான தி.மு.க. பிரிவும் ஆரம்பகால முறுக்கும் - வீரியமும் இழக்க வெகுகாலம் பிடிக்காது. இப்பிரிவு இளைஞர்களிடையே இப்போது நிலவும் வை.கோ. மாயை சில காலம்தான் நீடிக்கும். விரைவிலேயே விரக்தியும், நம்பிக்கையின்மையும் தோன்றுவது தவிர்க்க முடியாதது. வை.கோ. தனக்கு துரோகம் இழைத்துவிட்டார் என்று மு.க.வும், மு.க. தனக்கு அநீதி இழைத்துவிட்டார் என்று வை.கோ.வும் செய்துவரும் பிரச்சாரம் கழக அணிகளிடையேதான் அக்கறை ஏற்படுத்த முடியுமே தவிர தமிழ் மக்களிடையே அரசியல் நடத்துவதற்கு அவர்களது ''துரோகமும்'' ''அநீதியும்'' ஆர்வத்தைத் தூண்ட முடியாது; ஆதரவைத் திரட்ட உதவாது.

அடுத்த இதழில்... தமிழினம் இனி யாரை நம்புவது?



படிப்பகம்

www.padippakam.com

# கட்டளையிடுகிறது அமெரிக்கா காலில் விழுகிறது இந்தியா

*காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீட்டை ஒட்டி, இந்திய ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகமாடுகின்றனர். ஆனால் அதற்கான அடிப்படையோ, அருகதையோ அவர்களிடம் இல்லை*

காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்கா தலையிடத் தொடங்கியதும், இந்திய ஆட்சியாளர்கள் தேசபக்த வேஷம் கட்டிக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகமாடக் கிளம்பி விட்டனர். ''காஷ்மீர், இந்தியாவின் பகுதியே அல்ல'' என்று அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்ததும், காங்கிரசுக் கட்சியினர் அமெரிக்காவின் தலையீட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அவர்களுக்குப் போட்டியாக போலிக் கம்யூனிஸ்டுகளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். பத்திரிகைகளும் முதலாளித்துவ அறிவுஜீவிகளும் அமெரிக்கத் தலையீட்டால் இந்தியாவின் சுயாதிபத்திய உரிமைக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரிக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் கூப்பாடு போடுகின்றனர்.

காஷ்மீர் விவகாரத்தில் தலையிட அமெரிக்காவுக்கு உரிமையோ, அருகதையோ கிடையாது; அமெரிக்காவை கட்டைப் பஞ்சாயத்து செய்ய அனுமதித்தால் இப் பிராந்தியத்தில் அது மேலாதிக்கம் செய்வதோடு, காஷ்மீர் இன்னுமொரு போஸ்னியாவாக மாறிவிடும் என்று அவர்கள் வாதிடுவது சரியானதுதான். அமெரிக்காவின் தலையீட்டை முறியடிக்க வேண்டும் என்று அவர்கள் கோருவதும் நியாயமானதுதான். ஆனால் அமெரிக்கா முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா, இல்லையா என்பதுதான் கேள்வி. காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா நியாயமாக நடந்து கொள்கிறதா? ஐ.நா. தீர்மானத்தின்படி காஷ்மீர் மாநிலத்தை இந்தியாவுடன் இணைப்பதா, பாகிஸ்தானுடன் இணைப்பதா, அல்லது தனி நாடாக நீடிப்பதா என்பதற்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்தியதா? அல்லது காஷ்மீர் மாநிலம் சர்ச்சைக்குரிய பகுதி என்றாவது ஒப்புக் கொள்கிறதா?

எதுவுமேயில்லை. காஷ்மீர் மீது போர் தொடுத்து இந்தியாவும் பாகிஸ்தானும் பங்கு போட்டுக் கொண்ட பிறகு அரசு பயங்கரவாத அடக்குமுறையை காஷ்மீரில் தொடர்கிறது. காஷ்மீரின் தலைவிதியை காஷ்மீரிகளே தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையை மறுத்தும், பொம்மையாட்சியைத் திணித்து ஜனநாயக நாடகமாடியும், பாகிஸ்தானின் சதி என்று தேசிய வெறி - இந்து வெறியைக் கிளறிவிட்டும், காஷ்மீரிகளின் சுயநிர்ணய உரிமைப் போரை மிருகத்தனமாக ஒடுக்கியும் வருகிறது. இந்த லட்சணத்தில், காஷ்மீர் விவகாரத்தில் தலையிடாதே என்று அமெரிக்காவை எதிர்த்து தேசபக்த நாடகமாடுவதற்கு இந்தியாவுக்கு என்ன அருகதை இருக்கிறது?

### அடக்குமுறையை மறைக்க அமெரிக்க எதிர்ப்பு நாடகம்

இதேபோல, கடந்த ஆண்டில் சர்வதேச மனித உரிமைக் கழகம், ''இந்தியாவின் 20 மாநிலங்களில் போலீசு மற்றும் ராணுவத்தின் சித்திரவதைகளும் கொலைகளும் பெருகிவிட்டன. கொட்டடிக் கொலைகளும் கற்பழிப்புகளும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. குறிப்பாக, காஷ்மீர், பஞ்சாப் மற்றும் வட கிழக்கு மாநிலங்கள் மனித உரிமைகள் நசுக்கப்பட்டு அடக்குமுறையே நீடிக்கிறது'' என்று ஐ.நா. மன்றத்தின் 42-வது மனித உரிமைக் காப்புத் தொடரில் குற்றம் சாட்டியது. இதைக் காட்டி, இந்தியா மனித உரிமை - ஜனநாயகத்தை மதித்து நடக்காவிடில் அதன் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப் போவதாக அமெரிக்கா எச்சரித்தது. அப்போதும் இந்திய ஆட்சியாளர்கள் அமெரிக்காவுக்கு எதிராக சவடால் அடித்துக் கொண்டு தேசபக்த வேஷங்கட்டி ஆடினர்.

டெல்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்யும் இளைஞர் காங்கிரசு: ஏகாதிபத்திய எதிர்ப்பு கோமாளிக் கூத்து.



''சர்வதேச மனித உரிமைக் கழகம் என்பது ஒரு வெளிநாட்டு அமைப்பு, அதன் அணுகுமுறையும் ஆய்வும் மேலை நாடுகளுக்குச் சார்பானவை. அமெரிக்காவின் அரசியல் - பொருளாதார நிர்பந்தங்களுக்கான ஒரு கருவியாக மனித உரிமை பற்றிய கூச்சல்கள் எழுப்பப்படுகின்றன'' என்று ஆட்சியாளர்கள் கூப்பாடு போட்டார்கள்.

சர்வதேச மனித உரிமைக் கழகம் ஏகாதிபத்தியங்களின் நலனுக்காக ஒருசார்பாகச் செயல்படும் அமைப்பு என்பது உண்மைதான். ஆனால் அது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா, இல்லையா என்பதுதான் கேள்வி. கிரிமினல் போலீசுக்காரன்களைப் போல அண்டப்புளுகை அவிழ்த்துவிட்டு தமது குற்றங்களை மூடி மறைத்து வரும் இந்திய அரச பயங்கரவாதிகள், அமெரிக்காவை எதிர்ப்பதற்கு எந்த அருகதையும் இல்லை.

மறுபுறம், ஏகாதிபத்தியங்கள் தமது ஆதிக்கத்துக்கான ஒரு கருவியாக மனித உரிமை விவகாரத்தைக் கேடாகப் பயன்படுத்துகின்றன என்பதும் உண்மைதான். தென்னாப்பிரிக்காவின் நிறவெறியாட்டம், இஸ்ரேலின் இன



படிப்பகம்

www.padippakam.com

வெறியாட்டம், பர்மா, தென் கொரியாவின் ராணுவ சர்வாதிகார அட்டூழியம், அமெரிக்காவில் நிலவும் கருப்பின ஒடுக்குமுறை முதலானவற்றை சர்வதேச மனித உரிமைக் கழகமோ ஏகாதிபத்தியங்களோ கண்டு கொள்வதே இல்லை. இவற்றை அம்பலப்படுத்தி எதிர்ப்பதும் அதேசமயம் தமது நாட்டில் ஜனநாயகம் - மனித உரிமைகளை மதித்து நடப்பதும்தான் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு கொண்ட வளரும் நாடுகளது கடமையாகும்.

ஆனால் இந்திய ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் மனித உரிமை விவகாரத்தையும் எதிரெதிராக நிறுத்தி ஆதாயமடையப் பார்க்கின்றனர். தமது குற்றங்களை மறைக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகமாடுகின்றனர்.

இந்நிலையில் சிலர், இந்தியாவின் ஏகாதிபத்திய எதரிப்பு நாடகத்தைக் கண்டு ஏமாந்து அமெரிக்காவுக்கு எதிராக புரட்சிகரப் போராட்டங்களைத் தொடுக்க இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கின்றனர். வளைகுடாப் போரின் போது அமெரிக்காவே பிரதான எதிரி என்று குவைத்தை ஆக்கிரமித்த சதாம் உசேனை சிலர் ஆதரித்ததைப் போன்ற கேடுகெட்ட நிலைப்பாடுதான் இது. இத்தகைய நிலைப்பாடானது இந்திய ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாத அடக்குமுறையையும், இந்துவெறி - தேசிய வெறியையும் நியாயப்படுத்துவதில் போய் முடியும் என்று சொல்லத் தேவையில்லை.

இது ஒருபுறமிருக்கட்டும். இந்திய ஆட்சியாளர்கள் அமெரிக்க எதிர்ப்பில் அக்கறை உள்ளவர்கள்தானா? ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு எதிராக சுயமான தேசிய பொருளாதாரத்தையாவது கட்டியமைத்துள்ளார்களா? ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக சுதந்திரமாக கொள்கை முடிவெடுக்கும் சுயாதிபத்திய உரிமையாவது இந்தியாவிடம் உள்ளதா? எதுவுமேயில்லை. ஏகாதிபத்தியங்களைச் சார்ந்தது தான், அதன் இரும்புப் பிடியில்தான் இந்தியப் பொருளாதரமே இயங்குகிறது. கடைந்தெடுத்த ஏகாதிபத்திய விசுவாசிகள்தான் ஆட்சியதிகாரத்தில் உள்ளனர். அண்மைக் காலமாக அமெரிக்காவின் கட்டளைக்கு அடிபணிந்து நாடு மறுகாலனியாகி வருவதுதான் தொடர்கிறது.

### அமெரிக்காவின் இரும்புப் பிடியில் இந்தியா

மூன்றாண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா தான் வகுத்துக் கொண்டுள்ள ''சூப்பர் 301'' வர்த்தகச் சட்ட விதிகளின்படி, இந்தியா முறையற்ற வர்த்தகம் செய்து அமெரிக்காவின் தொழில் முதலீடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளதாகக் குற்றம்சாட்டி, கருப்புப் பட்டியலில் இந்தியாவைச் சேர்த்து மிரட்டியது. தனது உலக மேலாதிக்க நிலையைத் தக்கவைத்துக்




கொள்ளவும், நவீன காலனியாதிக்கச் சுரண்டலைத் தீவிரப்படுத்தவும் அமெரிக்கா வகுத்துக் கொண்டுள்ள சட்டம்தான் ''சூப்பர் 301''.

இந்தியாவை அமெரிக்காவின் வேட்டைக் காடாக மாற்றி, சீரழிக்கச் செய்யும் இக்கொடிய மிரட்டலுக்கு எதிராக இந்திய ஆட்சியாளர்கள் என்ன செய்தார்கள்? ''அமெரிக்க முதலீடுகளுக்கு நாங்கள் தடையேதும் ஏற்படுத்தவில்லை. அன்னிய முதலீடுகளை அதிகரிக்கவே விரும்புகிறோம். சூப்பர் 301 வர்த்தக சட்டத்தைக் காட்டி, இந்தியாவைக் கருப்புப் பட்டியலில் சேர்த்திருப்பது கவலைக்குரியது; துரதிருஷ்டவசமானது; தவிர்க்கப்பட வேண்டியது'' என்று அமெரிக்காவிடம் கெஞ்சினர்.

அமெரிக்காவின் மிரட்டலைத் தொடர்ந்து, இந்தியா இதுநாள் வரை பின்பற்றி வந்த அன்னியச் செலாவணி முறைப்படுத்தல் சட்டம் (FERA), ஏகபோக தடுப்புச் சட்டம் (MRTP) ஆகியன குப்பைக் கூடையில் வீசப்பட்டது. இறக்குமதிக்கான சுங்கத் தீர்வை பெருமளவு குறைக்கப்பட்டது. நுகர் பொருட்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. நூறு சதவீத நேரடி அன்னிய முதலீட்டிற்கும், அந்நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யும் பொருட்களை மொத்தமாக தமது நாட்டிற்குக் கொண்டு செல்லவும் உரிமம் அளிக்கப்பட்டது. அமெரிக்காவின் கட்டளைகள் உலக வங்கி, ஐ.எம்.எஃப். பின் மூலமாக இந்தியா மீது திணிக்கப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை, மறுசீரமைப்பு, தாராளமயமாக்கல் என்ற பெயரில் அமெரிக்காவின் நிபந்தனைகள் படிப்படியாக அரசின் கொள்கையாக அறிவிக்கப்பட்டது.

> இந்திய மக்கள் அமெரிக்கக் கோவணத்தைத்தான் வாங்க வேண்டும் என்று அமெரிக்கா கட்டளையிடும் அளவுக்கு அதன் ஆதிக்கம் பெருகிவிட்டது.

ஆனாலும் அமெரிக்க மாமாவுக்கு ஆத்திரம் தணியவில்லை. 1992-ம் ஆண்டின் தொடக்கத்தில் மீண்டும் ''சூப்பர் 301'' சட்டத்தைக் காட்டி, இந்தியாவின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்று மிரட்டியது. இந்திய ஏற்றுமதிக்கான சுங்கத் தீர்வை 250 கோடி ரூபாயை அமெரிக்கா ரத்து செய்து தண்டனை அளித்தது. இத்தொகையானது வளரும் நாடுகளுக்கு அமெரிக்கா அளித்துவரும் ஏற்றுமதி மானியமாகும். இதனை ரத்து சய்ததன் விளைவாக, சுங்கத் தீர்வை அதிகரித்து இந்தியாவின் ஏற்றுமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

அமெரிக்காவின் அடாவடித்தனமான கொள்ளைச் சுரண்டலையும் ஆதிக்கத்தையும் பற்றி புரிந்து கொள்வதற்கு அதிகமாக புள்ளி விவரங்கள் தேவையில்லை. இந்திய மக்கள் அமெரிக்க கோவணத்தைத்தான் வாங்க வேண்டுமென்று அமெரிக்கா கட்டளையிடும் அளவுக்கு அதன் ஆதிக்கம் பெருகியுள்ளது. இரு மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களிடமிருந்து இந்தியா இறக்குமதி செய்யும் பொருட்களில் ஆடவர் - பெண்டிருக்கான உள்ளாடைகள், சீமைச்சாராயம், அழகு சாதனப் பொருட்கள் முதலியன கட்டாயம் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா கட்டளையிட்டுள்ளது. அதன் மிரட்டலுக்கு அஞ்சி இந்திய ஆட்சியாளர்கள் அவற்றைச் செயல்படுத்தவும் இறங்கி விட்டனர்.

### கட்டளையிடுகிறது அமெரிக்கா காலில் விழுகிறது இந்தியா

இந்தியப் பொருளாதாரத்தை தனது இரும்புப் பிடியில் வைத்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம், மிகச்சாதாரண ஏற்றுமதி - இறக்குமதி, வெளியுறவுக் கொள்கைகளைக்கூட தனது நோக்கத்திற்கேற்ப நிறைவேற்ற வேண்டுமென கட்டளையிடுகிறது.

● கியூபா மீது பொருளாதாரத் தடைகள் விதித்து அந்நாட்டை அமெரிக்கா கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதால், கியூபாவுக்கு இந்தியா அரிசி ஏற்றுமதி செய்யக்கூடாது என்று கட்டளையிட்டது. பீதியடைந்த இந்திய உயரதிகாரியான தீட்சித், அமெரிக்க விவசாயத் துறை செயலரிடம் இனிமேல்



படிப்பகம்

www.padippakam.com

கியூபாவுக்கு அரிசி ஏற்றுமதி செய்ய மாட்டோம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

● இனவெறி - நிறவெறி காட்டுமிராண்டி நாடுகளான இஸ்ரேல் மற்றும் தென்னாப்பிரிக்காவுடன் அரசுரீதியாக எவ்வித உறவுமின்றி இதுநாள்வரை புறக்கணித்து வந்த இந்தியா, இப்போது அமெரிக்காவின் மிரட்டலுக்குப் பணிந்து அந்நாடுகளுடன் பொருளாதாரம், வர்த்தகம், கலாச்சார உறவுகளை அமைத்துக் கொண்டுள்ளது. சோமாலியாவை ஆக்கிரமித்துள்ள அமெரிக்காவுக்கு விசுவாசமாக தனது படைகளை அனுப்புகிறது.

● அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியாவைக் கையெழுத்திடுமாறு அமெரிக்கா தொடர்ந்து மிரட்டி வருகிறது. இல்லையேல், உலக வங்கிக்கடனை ரத்து செய்து விடுவோம் என்று கொக்கரிக்கிறது.

இருப்பினும் இந்த ஒப்பந்தத்தில் இந்தியா இன்னமும் கையெழுத்திடாத ஆத்திரத்தில் தாராப்பூர் அணுமின் நிலையத்திற்கு ஒப்பந்தப்படி எரிபொருள் கொடுக்க அமெரிக்கா மறுத்துவிட்டது. அணு சக்தியைப் பயன்படுத்துவதா, அணு ஆயுதங்களைத் தயாரிப்பதா, வேண்டாமா என்று தீர்மானிக்கும் உரிமைகூட இப்போது இந்தியாவிடம் இல்லை. அது அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில்தான் தீர்மானிக்கப்படுகிறது.

● இதுவும் போதாதென்று, இந்திய வானியல் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு (ISRO) இரண்டாண்டுகள் தடை விதித்து, தனது கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது. இந்தியாவைத் தொடர்ந்து கண்காணிக்குமாறு தனது கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வை ஏவிவிட்டுள்ளது.

ஏவுகணைத் தொழில் நுட்பத்துக்காக அமெரிக்காவைச் சார்ந்திருந்த இந்தியா, சற்றே குறைவான விலையில் ரஷ்யா அதனை அளிக்க முன்வந்ததும் அதனுடன் 1991 துவக்கத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டது. இதன்படி, செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்கு அவசியமான ''கிரியோஜெனிக்'' என்ஜின்களை ரஷ்யாவிடமிருந்து இறக்குமதி செய்து கொள்ளவும், பின்னர் ரஷியாவுடன் இவற்றைக் கூட்டாகத் தயாரித்து தொழில் நுட்பத்தை பரிமாறிக் கொள்வதெனவும் முடிவாகியது. தன்னைச் சார்ந்திராமல் ஒரு ஏழை நாடு ஏவுகணைத் தொழில் நுட்பத்தில் முன்னேறுவதைக் கண்டு ஆத்திரமடைந்த அமெரிக்கா, அணு ஆயுதப் பரவல் தடுப்புச் சட்டத்தையும், ஏவுகணை விரிவாக்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தையும் இந்தியா மீறிவிட்டதாகக் குற்றம் சாட்டி இத்தடையை விதித்துள்ளது.

**தரகர்களைக் கொண்டு சரிகட்டும் முயற்சி**

இப்படி அடுத்தடுத்து இந்தியாவின் விவகாரங்களில் அதன சுயாதிபத்திய உரிமையை அமெரிக்கா பறித்துக் கொண்ட போதிலும் ஆளும் காங்கிரசு கும்பல், அதனை எதிர்க்க ஒருபோதும் துணியவேயில்லை. அமெரிக்காவின் கட்டளைகளுக்கு மேலும் அடிபணிந்து போவதன் மூலம் அதனைச் சாந்தப்படுத்திவிட முயல்கிறது. இந்திய வெளியுறவுச் செயலரான தீட்சித், அடிக்கடி அமெரிக்காவுக்குப் பறந்து சென்று கெஞ்சுவதே அவரது பிரதானப் பணியாகிவிட்டது. அமெரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு சிறப்பு விருந்து கொடுத்து, அவர்கள் இந்தியாவுக்கு எதிரான தீர்மானம் கொண்டு வராதிருக்க இரகசிய பேரங்கள் நடத்துவதே இந்திய தூதரான எஸ்.எஸ்.ரேயின் அன்றாட நடவடிக்கையாக உள்ளது.



இதுதவிர, இந்தியாவுக்குச் சாதகமான நிலையை மேற்கொள்ளுமாறு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தரகு வேலை செய்வதற்காக மெக்காலிப், கெல்லி, ரஃபேய்லி ஆகிய அமெரிக்க தரகு நிறுவனங்களை ஓராண்டு காலத்துக்கு இந்திய அரசு நியமித்துள்ளது. இத்தரகு நிறுவனங்களுக்கு ஒப்பந்த ஊதியமாக ஏறத்தாழ 50 கோடி ரூபாய்வரை செலவிடவும் இந்தியா முடிவு செய்துள்ளது.

> ஏகாதிபத்திய தாசர்களான காங்கிரசுப் பெருச்சாளிகள் அமெரிக்காவின் கட்டளைக்கு அடிபணிந்து கெஞ்சுவதையே தமது வெளியுறவுக் கொள்கையாக வகுத்துக் கொண்டுள்ளனர்.

— இப்படி தரகர்களைக் கொண்டு பேரங்கள், விருந்து, விபச்சாரம், பரிசுகள், சரிகட்டல்கள் மூலம் அமெரிக்காவுக்கு நம்பிக்கையூட்ட காங்கிரசுப் பெருச்சாளிகள் முயன்று வருகின்றனர். 'கெடுபிடிகள் வேண்டாம்; நீங்கள் காலால் இட்டதை தலையால் செய்யக் காத்திருக்கிறோம்' என்று இந்தியாவிடம் எஞ்சியிருந்த சுயாதிபத்திய உரிமையையும் மறு அடகு வைத்துக் கெஞ்சுகின்றனர்.

இது ஒருபுறமிருக்கட்டும். அமெரிக்காவின் மொத்த வர்த்தகத்தில் 0.7% பங்கு மட்டுமே கொண்டுள்ள ஏழை நாடான இந்தியாவை அமெரிக்கா தொடர்ந்து மிரட்டி வருவதேன்?

முதலாவதாக, போலி சோசலிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவ உற்பத்தி முறைக்குத் தாவியுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சந்தையைக் கைப்பற்றுவதில் அமெரிக்காவுக்குப் போட்டியாக ஜெர்மனியும் ஜப்பானும் களத்தில் உள்ளன. அச்சந்தையைக் கைப்பற்றுவதோடு, ஏற்கனவே உள்ள ஏழை நாடுகளது சந்தையைத் தக்க வைத்துக் கொள்ளவும், பூதாரமான தனது பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்டவும் முன்னிலும் கடுமையாக ஏழை நாடுகளைச் சுரண்ட வேண்டிய கட்டாயத்தில் அமெரிக்கா உள்ளது. அதனாலேயே, அமெரிக்கக் கொள்ளைக்கு கதவை அகலத் திறக்குமாறு இந்தியாவை நிர்ப்பந்திக்கிறது.

இரண்டாவதாக, இந்தியா விசுவாசமாக இருந்த போதிலும் தெற்காசியப் பிராந்தியத்தில் பாகிஸ்தானையே அமெரிக்கா நம்பகமான கூட்டாளியாகக் கருதுகிறது. எனவே ரஷிய வல்லரசு பலவீனப்பட்டுப் போயுள்ள நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு இந்தியாவின் பிராந்திய துணை வல்லரசு நோக்கங்களை முறியடிக்கும் வகையில் காஷ்மீர் விவகாரம், மனித உரிமை, சூப்பர் 301, அணுசக்தி - ஏவுகணைத் திட்டம் முதலானவற்றை ஆயுதங்களாகக் கொண்டு அச்சுறுத்துகிறது.

இவற்றை எதிர்த்து முறியடிக்க வக்கற்ற ஏகாதிபத்திய தாசர்களான காங்கிரசுப் பெருச்சாளிகள் அமெரிக்காவின் கட்டளைக்கு அடிபணிந்து கெஞ்சுவதையே தமது வெளியுறவுக் கொள்கையாக வகுத்துக் கொண்டுள்ளனர். அதேசமயம் இந்தியா சுயாதிபத்திய உரிமை கொண்ட சுதந்திர நாடாக இருப்பதுபோல் பிரமையூட்டுகின்றனர். தமது நாட்டின் சுதந்திரத்தையும் சுயாதிபத்திய உரிமையும் இழந்து, தலைவிதியை ஏகாதிபத்தியங்களிடம் ஒப்படைத்து விட்ட மத்திய - தென் அமெரிக்க நாடுகளை ''வாழைப்பழ குடியரசுகள்'' என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள். அமெரிக்கா கோலெடுத்தால் ஆடும் குரங்காக மாறிவிட்ட இந்தியாவும் இன்னுமொரு வாழைப்பழ குடியரசாவதை நோக்கி நாலு கால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com



## நிலச்சரிவு கோரம்: மயானபூமியாகும் நீலகிரி

கடந்த நவம்பர் 11-ம் நாளன்று பெருமழை, திடீர் வெள்ளம் காரணமாக, குன்னூர் அருகே ஏற்பட்ட நிலச்சரிவினால் நூற்றுக்கும் மேலானோர் பலியாகியுள்ளனர். மேட்டுப்பாளையம், நீலகிரி சாலையில் மரப்பாலம் எனுமிடத்தில் நடந்த கோரமான நிலச்சரிவினால் பாறைகள் உருண்டு நூற்றுக்கும் மேற்பட்டோரைப் பலிவாங்கியதோடு, பாதை அடைபட்டதால் நின்றிந்த பேருந்துகள், வாகனங்களையும், இப்பகுதியிலிருந்த வீடுகள், மகுதியையும் தாக்கி பூமியில் புதைத்துவிட்டது. வரலாறு காணாத இப்பேரழிவினால் உயிரிழந்தவர்களின் சடலங்களைக் கூட மீட்க முடியாத அளவுக்கு நிலச்சரிவும், பெரு வெள்ளமும் ஏற்பட்டுள்ளது. இன்னமும் பல இடங்களில் நிலச்சரிவுக்கான அபாயம் நீடிக்கிறது. சாலைகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதால் நிவாரணப் பணிகள் மந்தகதியிலேயே நடக்கின்றன.

**நிலச்சரிவினால் சிதைந்த வீடுகள்; புதைந்த உடல்கள்; சுற்றுச்சூழல் பயங்கரவாதிகளால் நேர்ந்த கோரம்.**

அண்மையில் பெய்த பெருமழையும் வெள்ளமும்தான் நிலச்சரிவுக்குக் காரணம்; இது இயற்கையின் சீற்றத்தால் நிகழ்ந்த பேரழிவு என்று ஆட்சியாளர்கள் காரணம் கூறுகின்றனர். ஆனால் இது இயற்கையின் சீற்றமல்ல; காடுகளைத் தொடர்ந்து அழித்து சுற்றுச் சூழலை நாசப்படுத்திய சமூகவிரோத பெருமுதலாளிகளாலும் ஆட்சியாளர்களாலும் நடத்தப்பட்டுள்ள பேரழிவு! இம் மாபாதகச் செயலுக்கு அவர்கள்தான் முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

1975-76-ல் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (டேன்டீ) ஆரம்பிக்கப்பட்டு, பல ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுள்ள காடுகள் அழிக்கப்பட்டன; அப்பகுதியில் தேயிலைத் தோட்டங்கள் நிறுவப்பட்டன. அரசே பணப்பயிரை ஊக்குவித்ததால், தனியார் எஸ்டேட்டுகளும் தேயிலைத் தோட்டமாகியது. பின்னர் 1989-ல் 8 ஆயிரம் ஹெக்டேர் சின்கோனா காடுகள் அழிக்கப்பட்டு தேயிலைத் தோட்டங்களை நிறுவ அரசே உதவியது.

மலைப் பகுதிகளிலுள்ள யூகலிப்டஸ் மரங்களின் வேர் மண்ணின் அடியில் ஆழமாகச் செல்வதால் மண் அரிப்பு ஏற்படாது. ஆனால் காடுகளை அழிக்கும்போது யூகலிப்டஸ் மரங்களை வெட்டுவதும், விஸ்கோஸ் நூலிழை ஆலைகளுக்காக புதிய வகை குறுகியகால வளர்ச்சி கொண்ட யூகலிப்டஸ் மரங்களை வளர்ப்பதும் தொடர்கிறது. இத்தகைய புதிய வகை மரங்களின் வேர் பூமியில் ஆழமாக ஊடுருவிச் செல்வதில்லை. இவற்றின் விளைவாக பூமியின் அடியில் நீர் அதிகமாகி அழுத்தம் காரணமாக ''நீர் இடி'' ஏற்பட்டு வெடித்துச் சிதறி நிலச்சரிவும் திடீர் வெள்ளமும் அடிக்கடி ஏற்படுகிறது. 1978-ல் மந்தாடாவிலும், 1991-ல் கெத்தையிலும், 1992-ல் குன்னூர் - மஞ்சூர் சாலையிலும் இது போன்ற நிலச்சரிவுகள் ஏற்பட்டு பலரைப் பலிகொண்டது. அதன் தொடர்ச்சியாக நடந்துள்ளதுதான் தற்போதைய பேரழிவு!

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மக்கள் நலன் பற்றி எள்ளவும் அக்கறையற்ற ஆட்சியாளர்களும், லாப வெறி கொண்ட தேயிலைத் தோட்ட முதலாளிகளும் அதிகாரத்தில் உள்ளவரை இத்தகைய பேரழிவுகள் தொடரவே செய்யும்; இயற்கை அழகு கொஞ்சும் நீலகிரி, நாளை மயான பூமியாக மாறவே செய்யும்.

## சர்தார் சரோவர் திட்டம்: மீண்டும் அடக்குமுறை

நர்மதா நதிப் பள்ளத்தாக்கு திட்டத்தைத் (சர்தார் சரோவர் அணைக்கட்டு திட்டம்) தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக இந்திய அரசு ஒருபுறம் அறிவித்துள்ள போதிலும், மறுபுறம் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டும் இத்திட்டத்தை எதிர்க்கும் ஆதிவாசி - பழங்குடி மக்கள் மீது அடக்குமுறையை ஏவிக் கொண்டும் இருக்கிறது. கடந்த நவம்பர் மாதத்தில் மகாராஷ்டிரத்தில் உள்ள துலே மாவட்டத்தில், இத்திட்டத்தால் பாதிக்கப்படும் — நீரில் மூழ்கிப்போகும் கிராமங்களைப் பற்றிய நில அளவையை மேற்கொள்வது என்ற பெயரில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசுப் படையைக் குவித்து அக்கிராம மக்களை அச்சுறுத்தியும் அடக்குமுறையை ஏவியும் வெளியேற்றத் தொடங்கியது.

இதை எதிர்த்து அப்பகுதிவாழ் மக்கள் மறியல் செய்து போராடத் தொடங்கியதும், போலீசார் கண்மூடித்தனமாக தடியடி நடத்தி பலரைத் தாக்கியதோடு, முன் அறிவிப்பு இன்றி பல கிராமங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தி பலரைப் படுகாயப்படுத்தி



படிப்பகம்

www.padippakam.com



யுள்ளனர். குறிப்பாக அக்ரானி வட்டத்திலுள்ள சிங்கேடி எனும் கிராமத்தில் மட்டும் போலீசார் 25 ரவுண்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்தி, ஒரு சிறுவனைக் கொன்றொழித்து 125 பேரைப் படுகாயப்படுத்தியுள்ளனர். இக் கொடூரத் தாக்குதல்கள் அனைத்தும் துலே மாவட்ட ஆட்சியாளர் மற்றும் போலீசு அதிகாரிகளின் முன்னிலையிலேயே நடந்துள்ளன.

தன்னார்வக் குழுக்களின் தலைமையிலான நர்மதா பாதுகாப்பு இயக்கத்தினர் நடத்திய நீண்ட, விடாப்பிடியான போராட்டத்தின் விளைவாக, அணைக்கட்டுத் திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி நடுவர் மன்றம் தீர்ப்பளித்துள்ளது. பட்டீல் என்பவர் தலைமையிலான குழு, பாதிப்புகளை ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்ட பின்னர், உரிய நிவாரண ஏற்பாடுகளைச் செய்த பிறகே கட்டுமானப் பணிகளைத் துவக்க வேண்டும் என்று மத்திய - மாநில அரசுகளிடம் கோரியுள்ளது. ஆனால் நடுவர் மன்றத் தீர்ப்பை குப்பைக் கூடையில் வீசியெறிந்து விட்டு, மீண்டும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதே ஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது. எனவேதான் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டையும் படுகொலையையும் கண்டித்துப் போராட்டம் நடத்திய நர்மதா பாதுகாப்பு இயக்கத்தினரை, அதன் தலைவி மேதாபட்கர் உள்ளிட்டு அனைவரையும் கைது செய்து சிறையிலடைத்துள்ளது மகாராஷ்டிர அரசு.

## ரஷிய அதிபர் யெல்ட்சினின் சர்வாதிகார சதிராட்டம்

பெருகி வரும் எதிர்ப்புகளைச் சமாளிக்க முடியாத நிலையில், தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ரஷிய அதிபர் யெல்ட்சின் பாசிச சர்வாதிகாரத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறார். வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பதிவு செய்திருந்த 21 கட்சிகளில் 8 கட்சிகளை யெல்ட்சின் இப்போது நீக்கிவிட்டார். ஏனெனில், புதிய சட்ட விதிகளின்படி இக்கட்சிகள் குறைந்தபட்சம் ஒரு லட்சம் உறுப்பினர்களைக் கொண்டிருக்கவில்லையாம்! ஆனால் ரஷியாவில் 7% வாக்காளர்கள்தான் ஏதாவது ஒரு அரசியல் கட்சி அல்லது குழுவில் உறுப்பினராக உள்ளனர். மற்றவர்கள் தார்மீக ஆதரவு தருபவர்களாக உள்ளனர். நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பினர் பலமாக இருப்பதால், வரும் தேர்தலில் அவை கூட்டுச் சேர்ந்து வெற்றி பெறுவதைத் தடுப்பதற்காகவே யெல்ட்சின் இப்படியொரு சர்வாதிகார உத்திரவைப் பிறப்பித்துள்ளார்.

இதுதவிர, எதிர்த்தரப்பினர் கலகம் செய்தபோது 1994 ஜூனில் அதிபர் தேர்தல் நடத்துவதாக ஒப்புக் கொண்ட யெல்ட்சின், இப்போது அதையும் நிராகரித்துவிட்டார். நவம்பர் 8-ந் தேதியன்று அவர் கையெழுத்திட்ட புதிய சட்ட உத்திரவின்படி, 1996 வரை அவர் பதவியில் நீடிக்கவும், அதிபர் தேர்தலை அதுவரை நடத்தத் தேவையில்லை என்றும் வழிவகை செய்து கொண்டுள்ளார். மேலும், புதிதாக நிறுவப்படும் நாடாளுமன்றம் ஈராண்டுகளுக்கு மட்டுமே நீடிக்கும் என்றும் அறிவித்துள்ளார்.

அடுத்த தேர்தல் வரை பதவியில் நீடிக்க, வரம்பற்ற அதிகாரங்களைக் குவித்துக் கொண்டுள்ள யெல்ட்சின் கும்பல், எதிர்த்தரப்பு அதிகாரிகளை வேலைநீக்கம் செய்வது, தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளைக் கலைப்பது, எதிர்த்தரப்பு செய்திப் பத்திரிகைகளைத் தடை செய்வது, ஊர்வலம், ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிப்பது என சர்வாதிகார சதிராட்டம் போட்டு வருகிறது. அவசியமானால் அரசியல் கட்சிகளையே நாட்டு நலன் கருதி தடை செய்யவும் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டுள்ளது. 'கம்யூனிசத்தை' வீழ்த்திய மாபெரும் ஜனநாயகச் சிற்பியாக யெல்ட்சினைச் சித்தரித்த ஏகாதிபத்திய வாதிகளே இப்போது அக்கும்பலின் சர்வாதிகார சதிராட்டத்தை நியாயப்படுத்த முடியாமல் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

## 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குள் சாதிய கோஷ்டிச் சண்டை

கேரளாவின் புன்னப்புரா - வயலார் விவசாயப் போராட்ட வீராங்கனை என்று புகழ்பெற்றவரும், முன்னாள் 'மார்க்சிஸ்ட்' அமைச்சருமான கௌரி அம்மாள், அக்கட்சியின் தலைமைப் பொறுப்புகளிலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளார். கேரள 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மாநிலக் கமிட்டி உறுப்பினராகச் செயல்பட்ட அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, ஆலப்புழை மாவட்டக் கமிட்டி உறுப்பினராக அக்கட்சி நியமித்துள்ளது.

கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான கௌரி அம்மாள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் காரணம், அவர் காங்கிரசு அரசு அமைத்துள்ள ஆலப்புழை மாவட்ட வளர்ச்சிக் கவுன்சிலின் தலைவராகப் பொறுப்பேற்றதுதான் என்று கூறப்படுகிறது. இச்செயலானது, காங்கிரசு அரசுக்குச் சாதகமாகவும், ஏற்கனவே 'மார்க்சிஸ்ட்' கட்சி அமைத்துள்ள மாவட்ட



நர்மதா பாதுகா
இயக்கத்தினர்
போலீசாரின்
மிருகத்தனமா
தாக்குதல்.



படிப்பகம்

www.padippakam.com



வளர்ச்சிக் கவுன்சிலை செயலிழக்கச் செய்துவிடும் என்றும் 'மார்க்சிஸ்ட்' கட்சி அவரை அப்பதவியிலிருந்து விலகுமாறு கோரியது. ஆனால் கௌரி அம்மாள் அதை ஏற்க மறுத்ததோடு, நீங்கள் மட்டும் யோக்கியமா? என்று 'மார்க்சிஸ்டு' தலைவர்களின் லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகளைப் பட்டியலிட்டு அம்பலப்படுத்தத் தொடங்கினார். பீதியடைந்த 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் கௌரி அம்மாள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, தங்களது மோசடிகளை மூடிமறைக்க முயற்சிக்கின்றனர்.

அதேசமயம், கௌரி அம்மாளும் சுத்தம் - சுயம் பிரகாசமானவர் அல்ல. ஓட்டுப் பொறுக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளுக்கே உரித்தான சந்தர்ப்பவாத, பிழைப்புவாதக் கொள்கைகளில் மூழ்கித் திளைத்தவர்தான். அவரது 25 ஆண்டுகால சட்டமன்றச் சேவைக்காக நடந்த பாராட்டுவிழாக் கூட்டத்தில், கேரள மாநில ஆர்.எஸ்.எஸ். தலைவரையும் வாழ்த்துரை வழங்க வெட்கமின்றி அனுமதித்தார். இதற்காக கேரள மாநில 'மார்க்சிஸ்ட்' கட்சியின் செயற்குழுவிலிருந்து கடந்த ஆண்டு நீக்கப்பட்டார். இதுதவிர தனது சொந்த மாவட்டமான ஆலப்புழையில் கட்சி தலைமையிலான சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்துக்குப் போட்டியாக ஒரு புதிய தொழிற்சங்கத்தை நிறுவி அதன் தலைவராகியுள்ளார். மேலும், தான் ''ஈழவர்'' எனும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதால், மேல்சாதி ஆதிக்கம் கொண்ட கட்சித் தலைமை கீழ்சாதியினரைப் பழிவாங்குவதாகக் கூறுகிறார்.



ாதிய கோஷ்டிச் சண்டையில் ிவாங்கப் பட்ட கேரள போலிச் கம்யூனிஸ்டுத் தலைவர் கௌரியம்மாள்.

கட்சித் தலைமையோ, பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட சாதியினர் தமது கட்சியில் முக்கிய பொறுப்புகளில் உள்ளதாக விளக்கமளித்துக் கொண்டிருக்கிறது. ஈராண்டுகளுக்கு முன்பு கேரள 'மார்க்சிஸ்ட்' கட்சியில் நாயனார் அச்சுதானந்தன் கோஷ்டிச் சண்டை புழுத்து நாறியது. அண்மையில் மே.வங்கத்தில் ஜோதிபாசு - பட்டாச்சார்யா கோஷ்டிகளின் லடாய் முற்றி பட்டாச்சார்யாவின் பதவி பறிக்கப்பட்டது. இப்போது மீண்டும் கேரளாவில் கௌரி அம்மாள் தலைமையில், சாதி அடிப்படையிலான நாய்ச்சண்டை முற்றி வருகிறது. நல்ல முன்னேற்றம்தான்!

## தேர்தலில் ஆதரவு யாருக்கு? போலிகளிடையே லடாய்

வட மாநிலங்களில் நடைபெறும் இடைத் தேர்தலில் காங்கிரசும் பாரதீய ஜனதாவும் மோதிக் கொள்கிறதோ, இல்லையோ; காங்கிரசை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பதையொட்டி போலிக் கம்யூனிஸ்டுகள் தங்களுக்குள்ளேயே மோதிக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய தேர்தலில் காங்கிரசு, பாரதீய ஜனதா இரண்டையுமே எதிர்த்து முறியடிக்க வேண்டும் என்று இடது, வலது போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள் அறிவித்துள்ளன.

ஆனால் இக்கொள்கையை எதிர்த்து பஞ்சாபின் முதுபெரும் வலது 'கம்யூனிஸ்டு'த் தலைவரான சத்யபால் டாங் கலகம் செய்து வருகிறார். ''இந்து வெறியர்கள்தான் நமது பிரதான எதிரிகள். எனவே காங்கிரசுக்கு செயல் தந்திரரீதியில் ஆதரவளித்து பாரதீய ஜனதாவை முறியடிக்க வேண்டும். நமது கட்சியோ கூட்டணியோ வேட்பாளர்களை நிறுத்தாத இடங்களில், நமது கட்சியினர் யாருக்கு ஓட்டுப் போடுவது? யாருக்குமே ஓட்டுப் போடாவிட்டால் அது பாரதீய ஜனதாவுக்குச் சாதகமாகிவிடும். எனவே இத்தேர்தலில் காங்கிரசுக்கு விமர்சனத்துடன்கூடிய ஆதரவளித்து பாரதீய ஜனதாவை முறியடிக்க வேண்டும்'' என்று சித்தாந்த விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார். இவரது கருத்துக்குக் கணிசமான ஆதரவு இருந்தபோதிலும், வலதுகளின் தேசிய கவுன்சில் கூட்டத்தில் பெரும்பான்மையோர் இதை நிராகரித்து விட்டனர். இருப்பினும் தேர்தல் நடைபெறும் சில பகுதிகளில் கட்சியின் முடிவு செல்லுபடியாகாது என்றே சத்தியபால் டாங் கூறி வருகிறார்.

இதேபோல, மற்றொரு போலிக் கம்யூனிஸ்ட் கட்சியான 'மார்க்சிஸ்ட்' கட்சியில் ஜோதிபாசு தலைமையிலான கோஷ்டி, காங்கிரசை ஆதரிக்கலாம் என்று நிலைப்பாடு எடுத்தது. பின்னர் நம்பூதிரிபாட்டின் தலையீட்டினால், காங்கிரசு - பாரதீய ஜனதா ஆகிய இரு கட்சிகளையுமே எதிர்ப்பது என அக்கட்சி முடிவு செய்துள்ளது. மேலும் நடக்கின்ற இடைத்தேர்தலில் எந்தக்கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மைக் கிடைக்காது போனால் காங்கிரசு ஆட்சி அமைக்க, வெளியிலிருந்து ஆதரவு தருவதாக 'மார்க்சிஸ்டு' கட்சி அறிவித்துள்ளது.

நரகலில் நல்லரிசி தேடி ஆளும் வர்க்கக் கட்சிகளில் ஏதாவது ஒன்றின் வாலைப் பிடித்துக் கொண்டு செல்வது போலிகளின் பாரம்பரியக் கொள்கை. இருப்பினும், இந்துவெறி பாசிசக் கொள்கையைக் கொண்டதாக இருப்பதால் காங்கிரசையும் பாரதீய ஜனதாவையும் எதிர்க்க வேண்டிய தர்ம சங்கடமான நிலைமை போலிகளுக்கு ஏற்பட்டுள்ளது. மறுபுறம், காங்கிரசை இத்தேர்தலில் ஆதரிப்பதா, வேண்டாமா என்பதையொட்டி போலிகளிடையே மயிர்பிளக்கும் வாதங்களும், புதிய கோஷ்டிகளும் பெருகி வருகின்றன.

## இந்துவெறியைக் கக்கும் கோட்சேயின் வாரிசுகள்

காந்தியைச் சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சேயின் நினைவு நாள் கூட்டம் பம்பாய் பெருநகரில் தாதர் அருகே ஒரு கோயில் வளாகத்தில் அண்மையில் நடந்துள்ளது. கோட்சே தூக்கிலடப்பட்ட நவம்பர் 15-ம் தேதியை ஆண்டுதோறும் புனா நகரில் அவரது சகோதரர் கோபால் கோட்சே தலைமையில் சில இந்துவெறியர்கள் கூடி நினைவு நாளாக கடைபி



படிப்பகம்

www.padippakam.com

டிப்பது வழக்கம். ஆனால் பம்பாய் நகரில் கோட்சே நினைவு நாள் கூட்டம் நடத்தப்படுவது இதுவே முதன் முறை. இந்தக் கூட்டத்தில் காந்தியை இரத்தவெறி பிடித்த ஓநாய் என்றும், கோட்சேயைத் தியாகி என்றும் விவரித்துப் பேசியுள்ளனர்.

''இந்திய அரசின் மதச்சார்பின்மை மோசடியானது; இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் அனைவரும் பாகிஸ்தானியர்கள்; அவர்களைத் துரத்தியடிக்க வேண்டும்'' என்று இக்கூட்டத்தில் பேசிய இந்துவெறி பார்ப்பனர்கள், ''இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, பர்மா, பூடான், நேபாளம் ஆகியவற்றை உள்ளடக்கிய அகண்ட பாரதத்தை நிறுவ வேண்டும்'' என்றும் உறுதிமொழி ஏற்றுள்ளனர். காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட நாளை இந்துக்கள் மகிழ்ச்சிக்குரிய நாளாக, கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமெனக் கோரிய இவர்கள், தூக்கிலிடப்பட்ட கோட்சேயின் அஸ்தியை பாகிஸ்தானில் பாயும் சிந்து நதியில் கரைக்க அரசு அனுமதி தரவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

இந்துவெறி பாசிஸ்டுகள் நாடெங்கும் பலம் பெற்று வேரூன்றி வருவதன் பகிரங்கமான வெளிப்பாடுதான் இது. கோட்சே கும்பலுக்கும் தமக்கும் ஏந்த உறவுமில்லை என்று ஆர்.எஸ்.எஸ். கும்பல் மறுத்தாலும் இரண்டினது சித்தாந்தமும் நோக்கமும் இந்து ராஷ்டிரம்தான்! மேலும், ஓட்டுப் பொறுக்க காந்தியைப் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர இந்து வெறியர்களுக்கும் ஆளும் காங்கிரசு கும்பலுக்கும் இந்தக் கொள்கையில் வேறுபாடு எதுவும் கிடையாது. இருப்பினும், தமது அரசியல் ஆதாயத்துக்காக கோபால் கோட்சேயைக் கைது செய்து இந்து வெறியர்களுக்கு எதிராக நிற்பதாக காங்கிரசுப் பெருச்சாளிகள் நாடகமாடிக் கொண்டிருக்கின்றனர்.

## ஹஸ்ரத்பால் முற்றுகை: சரணடைந்தது யார்?

காஷ்மீரின் ஹஸ்ரத்பால் மசூதி மீதான முற்றுகையை இந்திய அரச பயங்கரவாதிகள் 32 நாட்களுக்குப் பிறகு விலக்கிக் கொண்டு பின்வாங்கியுள்ளனர். போராளிகளுக்கும் அரச பயங்கரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின்படி, போராளிகள் தமது ஆயுதங்களை மசூதியிலுள்ளேயே வைத்துவிட்டு, மசூதியினுள் சிக்கிக் கொண்ட அப்பாவி பொதுமக்களுடன் சேர்ந்து வெளியேறி வந்துள்ளனர். இதையே, பட்டினி மற்றும் குளிர் தாள முடியாமல் வேறு வழியின்றி போராளிகள் அமைதியாக சரணடைந்துவிட்டதாக அரசும் பத்திரிகைகளும் கூசாமல் புளுகுகின்றன. மசூதிக்குச் சேதமில்லாமல் நிலைமையைச் சமாளித்துவிட்டதாகப் பெருமைப் பட்டுக் கொள்கிறது காங்கிரசு அரசு.

ஆனால் 32 நாட்களாக இந்திய ராணுவம் நடத்திய முற்றுகைப் போரானது, உலக அரங்கில் இந்தியாவை மேலும் தனிமைப்படச் செய்துவிட்டது. குறிப்பாக, வட மாநிலங்களில் நடைபெறும் தேர்தலில் முஸ்லீம்கள் காங்கிரசுக்கு ஓட்டுப்போட மாட்டார்கள் என்ற பீதியின் காரணமாகவே போராளிகளின் கோரிக்கையை ஏற்று அரச பயங்கரவாதிகள் முற்றுகையை நீக்கியுள்ளனர்.

அரச பயங்கரவாதிகள் போராளிகளுடன் செய்து கொண்ட இரகசிய உடன்பாட்டின்படி, மசூதியிலிருந்து வெளிவரும் சிவிலியன்களை விடுதலை செய்வது; போராளிகளை காஷ்மீர் போலீசார் வசம்



முற்றுகை நீங்கிய போராளிகளுக்கு வெற்றி! ஹஸ்ரத்பால் மசூதியினுள் அர[illegible] பயங்கரவாதிகளு[illegible] எதிராக முழக்கமி[illegible] காஷ்மீரப் பெண்[illegible]

ஒப்படைப்பது; இளநிலை போராளிகளை 3 நாள் விசாரணைக்குப் பின்னரும் 'தீவிரவாதிகள்' என குற்றம் சாட்டப்பட்டுள்ள போராளிகளை 7 நாள் விசாரணைக்குப் பின்னரும் விடுதலை செய்வது; பாக். வசமுள்ள காஷ்மீரிலிருந்து வந்த இருவரை எல்லைக்கு அப்பால் கொண்டு போய் விடுவது என்று முடிவாகியது. மசூதிக்கு சேதம் ஏற்படாமல் பாதுகாக்கவும், தங்களோடு மசூதியினுள் சிக்கித் தவிக்கும் அப்பாவி சிவிலியன்களின் நலன் கருதியும் போராளிகள் இம்முடிவுக்கு உடன்பட்டனர்.

மசூதிக்கு சேதமின்றி போராளிகளை வெளியேற்றுவது; பின்னர் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடுவது என்பதே இந்திய ராணுவத்தின் நோக்கம் என்பது அடுத்த நாளே நிரூபணமானது. உடன்பாட்டின்படி போராளிகளை காஷ்மீர் போலீசாரிடம் ஒப்படைக்காமல் ராணுவமும், எல்லைப் பாதுகாப்புப் படையும், உளவுப் படையான ''ரா''வும் தமது முகாமுக்குக் கொண்டு சென்று போராளிகளை மிருகத்தனமாக சித்திரவதை செய்து தமது வெறியைத் தீர்த்துக் கொண்டன. மறு நாளன்று லடாக் அருகே நிராயுதபாணியான போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீதும் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 50 பேரைக் கொன்று, மோதலில் இறந்ததாக இந்திய ராணுவம் கதை கட்டியது. ஹஸ்ரத்பால் மசூதியை தொடர்ந்து கண்காணிக்கும் நோக்கோடு மசூதியைச் சுற்றி பதுங்கு குழிகளையும் வெட்டியமைத்துள்ளது. இதை எதிர்த்து காஷ்மீரிகள் தன்னெழுச்சியாகத் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்ததோடு, கடையடைப்புப் போராட்டத்தையும் நடத்தி வருகின்றனர். இந்திய அரச பயங்கரவாதிகளின் சூழ்ச்சிகள், சதிகள் எதற்குமே காஷ்மீர் மக்கள் பலியாகத் தயாராக இல்லை. சுயநிர்ணய உரிமைப் போரில் அவர்களின் உறுதி குலையவுமில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# ஊருக்கு உழைப்பவருக்கு கொடுமைகளே பரிசு

*அதிகார வர்க்கமும் ஆதிக்க சக்திகளும் சமுகநலப் பெண் ஊழியர்களின் வாழ்வைப் பறித்து இருளில் தள்ளி வருகின்றன.*



கற்பழிப்புக் குற்றவாளிகளுக்கு எதிராக போராடிவரும் சமூகநல ஊழியர்

○ ஷரநவ்வா - கர்நாடகாவின் ரெய்ச்சூர் மாவட்டம் கஸ்தகி கிராமத்தைச் சேர்ந்த 22 வயதேயான இளம் பெண். கடந்த பிப்ரவரியில் நான்கு மனித மிருகங்களால் தங்களின் வெறி தீரும்வரை மாறி மாறி கற்பழிக்கப் பட்டார். எதிர்த்துப் போராடியதில் உடலெங்கும் இரணமாகிப் போய் மயங்கிய நிலையில் இருந்தவரை, உண்மை வெளியே தெரியக்கூடாது என கொன்று போட்டு ஓடிவிட்டது அக்கும்பல்.

○ பன்வாரி - இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த நடுத்தர வயது பெண்மணி. குஜ்ஜார் எனும் மேல்சாதியைச் சேர்ந்த செல்வாக்குமிக்க ஒருவரின் வீட்டில் நடந்த குழந்தைத் திருமணத்தைத் தடுத்து நிறுத்தினார். பழிவாங்கும் எண்ணத்துடன் காத்திருந்து, கிராமங்களுக்குத் தன்னந்தனியாகச் சென்றுவந்து இவரைக் கற்பழித்துப் பின் தப்பிச் சென்றது ஐந்துபேர் அடங்கிய கும்பலொன்று. திட்டமிட்டு செய்த குற்றவாளிகள் யாரெனப் பட்டவர்த்தனமாகத் தெரியும் சம்பவமிது. ஆனாலும் யார் மேலேயும் எந்த நடவடிக்கையும் கிடையாது. எனினும் பன்வாரி இடிந்து மூலையில் முடங்கிப் போய் உட்கார்ந்து விடவில்லை. எதிர்த்து நின்று குற்றவாளிகளை அம்பலப்படுத்தித் தண்டிக்கக்கோரி போராடி வருகிறார்.

○ புடிபென் - இராஜஸ்தானைச் சேர்ந்த இப்பெண்ணுக்கும் - ஷரநவ்வாவுக்கும் பன்வாரிக்கும் என்ன கொடுமை நேர்ந்ததோ - அதே மூர்க்க வெறிகொண்ட காட்டுமிராண்டித் தனத்துக்குப் பலியானவர். இப்பொழுது இவரும் பன்வாரியைப் போல நீதிகேட்டு போராடி வருகிறார்.

வெவ்வேறு மூன்று சம்பவங்கள்; வெவ்வேறு மூன்று பெண்மணிகள்; வெவ்வேறு இடங்கள் என்றாலும் இம்மூன்று பெண்களுக்கும் சம்பவங்களுக்கும் ஒற்றுமை உண்டு. மூவருமே அரசாங்கம் கிராமப்புற மக்களுக்கும் பெண்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த செயல்படுத்தி வரும் சமூக நலத் திட்டங்களின் கீழ் செயல்பட்டுவரும் கடைநிலை பெண் ஊழியர்கள்; தங்களின் வேலைகளின் பொழுது எதிர்கொள்ளும் அதிகார வர்க்கத்தினராலும் ஆதிக்க திமிர் பிடித்தவர்களாலுமே மானபங்கப் படுத்தப்பட்டுள்ளனர்.

பன்வாரி மேல்சாதி ஆதிக்க - பிற்போக்கு வெறியர்கள் ஐந்து பேரால் கற்பழிக்கப் பட்டாரென்றால், ஷரநவ்வாவைக் கொத்திக் குதறியதோ அதிகாரவர்க்கம். தாசில்தார் சிவராஜ், பொறியாளர்கள் திம்மப்பா, நாராயண நாயக் மற்றும் உள்ளூரில் செல்வாக்கு மிக்க வழக்குரைஞர் ஃபகீரப்பா - இந்த நால்வர்தான் அந்தப் 'பெரிய' மனிதர்கள். ஷரநவ்வா தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவராய்போனது இவர்களுக்கு 'பழம் நழுவி பாலில் விழுந்த' கதையாகியது.

அரசு தனது பிதாமகன்களான ஆதிக்க சக்திகளாலும், தனது செல்லப் பிள்ளைகளான அதிகார வர்க்கத்தினராலும் கற்பழிக்கப்படும் அபலைகளின் வழக்குகளிலெல்லாம் எப்படி நடந்து 'கொள்ளுமோ அது போலவே இப்பேதைகளின் வெந்த புண்ணிலும் வேலைப் பாய்ச்சியது. பன்வாரி குற்றவாளிகளை இனம் காட்டிய பின்னரும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவே ஒரு வருடம் எடுத்துக் கொண்டது, மத்திய புலனாய்வுத் துறை. மாவட்ட ஆட்சியாளரோ இன்னும் ஒருபடி மேலே சென்று ''பன்வாரிக்கு குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்கு எந்த உரிமையும் கிடையாது; அவர் இது தவறு என எடுத்துச் சொல்லலாம்; ஆனால் பன்வாரியோ அதிகப் பிரசங்கித்தனமாக நடந்து கொண்டுள்ளார்'' என பேட்டி கொடுத்து பாதிக்கப்பட்டவரையே முதல் குற்றவாளி ஆக்கினார்.

ஷரநவ்வாவின் வழக்கிலோ இன்னும் இதைவிட அதிக மோசடித்தனமாக நடந்து கொண்டு குற்றவாளிகளை விடுதலை செய்துவிட்டது, கர்நாடக மாநில அரசு. அவர் இறந்து 23 நாட்களுக்குப் பின்தான், ஷரநவ்வா அதிகாரவர்க்க கும்பலால் கற்பழிக்கப்பட்டுப் பின் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற உண்மை வெளியுலகுக்குத் தெரியவந்தது. அதன் பின்புகூட அவர் வேலை செய்துவந்த துறை அதிகாரிகளோ அல்லது அரசோ விசாரணைக்கு உத்திரவிடவில்லை. பல்வேறு பெண்ணுரிமை - சமூக உரிமை அமைப்புகளும் தொடர்ச்சியாக



படிப்பகம்

www.padippakam.com

மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திய பின் தான் அரசு தலையிட்டது. அதுவும்கூட எதிர்க்கட்சிகள் இப்பிரச்சினையைத் தங்கள் சுயலாபத்துக்குப் பயன்படுத்துகின்றனர் என்று அஞ்சியதால்தான்.

மாநில முதல்வர் வீரப்பமொய்லி ஷரநவ்வாவின் தாயாரைத் தனது பரிவாரங்களுடன் நேரிடையாகப் போய் சந்தித்து ஆறுதல் கூறினார்; தொகுதி எம்.எல்.ஏ. கிராமப் பகுதி முழுவதும் சுற்றித் திரிந்து வாக்குறுதி அளித்துத் தன்னை மக்கள் நலனில் அக்கறையுள்ளவனாகக் காட்டிக் கொண்டார். வழக்கு விசாரணை மாநிலப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது; அதோடுகூட 15 சட்டசபை உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று தனியாகத் தனது விசாரணையைத் தொடங்கியது.

இந்த நாடகம் ஒருபுறம் நடந்து கொண்டு இருந்தபொழுதே மறுபுறம் ஓட்டுக்கட்சிகள் தங்களின் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கின. குற்றவாளிகளுள் மூவர் 'குருபா' சாதியைச் சேர்ந்தவர்களாதலால், இச்சாதியைச் சேர்ந்த கஸ்தகி தொகுதி எம்.எல்.ஏ.-வுக்கும், 'லிங்காயத்து' சாதியைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.மற்றும் ஜனதா தள தலைவருக்குமிடையே இருந்த அரசியல் பகையைத் தீர்த்துக் கொள்வதற்கு இச்சம்பவத்தை சாதிப் பிரச்சினையாகச் சித்தரிக்க ஆரம்பித்தனர்.

இதற்காக இவர்கள் மிகக் கீழ்த்தரமான கேவலமான முறையில் நடந்து கொள்ளத் தொடங்கினர். ஷரநவ்வா உயிருடன் இருந்தபொழுது அவரின் மானத்தைப் பறித்தெடுத்து ஆட்டம் போட்ட இக்கும்பல், அவரைக் கொன்றபின்பும், அவரை மட்டுமின்றி, அவரது குடும்பத்தை, அவர் சார்ந்த சமூகத்தை வார்த்தைகளாலேயே மானபங்கப்படுத்தியது. 'ஷரநவ்வா தேவதாசி ஒருவரின் மகள்; நடத்தை கெட்டவள்; அவரைக் கற்பழித்ததாகக் கூறப்படும் நால்வரில் ஒருவருடன் ஏற்கனவே அவளுக்குத் தொடர்புண்டு' என கட்டுக் கதைகளை அவிழ்த்துவிட்டது. இதனால் வழக்கின் மையப்பிரச்சினை நீர்த்துப்போய், விசாரணையில் ஈடுபட்டிருந்த இரு குழுக்களும் 'சாதி பிரச்சினை'யைப் பூதக் கண்ணாடி கொண்டு ஆராயத் தொடங்கின.

மாநில புலனாய்வுத் துறை 'ஷரநவ்வா புற்றுநோயால் இறந்து போனார்' என வழக்கின் தலையில் தண்ணீர் தெளித்தது. சட்ட மன்ற விசாரணைக் குழுவோ 'ஷரநவ்வா இறந்தது தற்செயலானது' என தீர்ப்பெழுதி, புலனாய்வுத் துறையின் முடிவொடு முற்றும் முரண்படாதவாறு விசாரணையை முடித்துக் கொண்டது. மேலும் 'கும்பல் கற்பழிப்பு நடந்ததற்கான ஆதாரங்கள் இல்லை' என ஆணித்தரமாகக் கூறியது. இவ்வாறாக ஷரநவ்வாவிற்குத் தூய 'நீதி'யின் பெயரால் சமாதி எழுப்பப்பட்டது.



ஆனால் ஷரநவ்வாவின் சக பெண் ஊழியர்களோ, "வெளி உலகுக்குத் தெரிந்த ஒரு வழக்கை இப்படி திசை திருப்பிய இவர்கள், இது போன்ற பாலியல் தாக்குதலால் உடைந்து, மனதுக்குள்ளே புழுங்கிப் போய் நாளும் நாளும் உயிரோடு செத்துக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் ஷரநவ்வாக்களுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள்" எனக் குமுறுகின்றனர். ஆம்; இது உண்மைதான். இவ்வழக்கையொட்டி கள ஆய்வு செய்த "விமோசனா" எனும் அமைப்பு "ஷரநவ்வாவின் வழக்குப் புதியதோ அல்லது தனித்ததோ அல்ல" எனக் கிராம மக்களே கூறுவதாகத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அரசின் பிற ஊழியர்களைப் போன்று இயந்திர கதியாக இவர்கள் தங்கள் வேலையைச் செய்துவிட முடியாது. சரளமாக மக்களிடம் பழகத் தெரிந்திருக்க வேண்டும்; அரசின் திட்டங்களை கிராம மக்கள் புரிந்து கொள்ளுமளவு பக்குவமாகவும் எளிமையாகவும் எடுத்துச் சொல்லும் திறமை வேண்டும்; போக்குவரத்தே இல்லாத கிராமப் பகுதிகளுக்குக் கூட சளையாது நடந்து சென்று பின் இருட்டும் தருவாயில் தனியாகத் திரும்ப வேண்டியிருக்கும். குறிப்பிட்ட வேலையில்லாமல், கருத்தடைக்கு ஆள் பிடிப்பது என அரசின் பிற துறை சார்ந்த பணிகளையும் அவ்வப்பொழுது சேர்த்துப் பார்க்கவும் நேரிடும். ஓரளவு சமூக அக்கறையும் பொறுப்புணர்வும் உள்ளவர்களால் மட்டுமே தொடர்ந்து இப்பணியில் நீடிக்க முடியும்.

> வக்கிரப் பார்வை கொண்ட அதிகாரிகள்; வார்த்தைகளாலேயே ஆடையுரிக்கும் ஆதிக்க சக்திகள்; — வறுமையும், சொன்னால் கிடைக்கும் அவப்பெயர் பற்றிய அச்சமும் பல பெண்களை ஊமைகளாக்கி விடுகிறது.

ஆனால் அரசு இவர்களுக்குத் தரும் சம்பளமோ 500 ரூபாய்க்குள்தான். பஞ்சப்படி போன்ற பிற எந்த சலுகையும் கிடையாது. பகுதி நேர ஊழியர்கள் என்றுதான் இவர்களை வகை பிரித்திருக்கிறது என்றாலும் கூடுதல் வருமானத்திற்காக வேறு வேலைகளுக்குச் செல்வதற்கெல்லாம் இவர்களுக்கு நேரம் கிடைப்பது அரிது.

நிரந்தமில்லாதது என்றாலும் இந்த வேலையைப் பெறுவதற்கே ஐயாயிரம் ரூபாய் வரை லஞ்சமாகத் தர வேண்டியுள்ளது. அதன் பின்பு தங்கள் மேலதிகாரிகளின், அரசியல்வாதிகளின் 'அனைத்து'த் தேவைகளையும் முகஞ்சுளிக்காமல், மறுப்பேதும் சொல்லாமல் பூர்த்தி செய்ய வேண்டும். உடம்பையும் மனதையும் கூசச் செய்யும் அதிகாரிகளின் வக்கிர பார்வையும், இருபொருள் பேச்சும் தினமும் நிரந்தரம். அதிகாரிகளின் படுக்கையறைக்கு அனுப்புவதற்காகவே பல பெண்கள் அடங்கிய பட்டிலொன்று எப்பொழுதும் தயாராக இருக்கும்; எதிர்த்தாலோ வேலையையே பறித்து விடுவார்கள். இதோடு கிராமங்களில் மேல் ஜாதி இளைஞர்களாலும் பெண் பித்தர்களாலும் வார்த்தைகளால் ஆடையுரிக்கப்படுவதை எதிர்த்துக்கூட இவர்கள் ஏதும் செய்ய முடியாது. வறுமையும், வெளியே சொன்னால் கிடைக்கும் அவச் சொல் பற்றிய பயமுமே பல பெண்களை ஊமைகளாக்கிவிடுகிறது.

30 சதவீத இட ஒதுக்கீட்டை அறிவித்து இதனையே பெரிய சாதனையாக, பெண்களின் சமூக - பொருளாதார வாழ்வில் பெரும் மாறுதலைக் கொண்டு வந்து விட்டதாக பீற்றிக் கொள்கிறது அரசு. ஆனால் ஒருபுறம் தான் கொண்டுவரும் சமூக விழிப்புணர்வு திட்டங்களை எடுத்துச் செல்லும் இப்பெண்கள் பாதிக்கப்படும் பொழுது அவர்கள் தலையில் கல்லைத் தூக்கிப் போடுவதில் முதல் ஆளாய் நிற்கிறது. மறுபுறம் பெண்பித்து பிடித்து அலையும் ஆதிக்குகளையும் (மகாராஷ்டிரா நிதி மந்திரி) தாமோதர் ரௌத்களையும் (ஒரிசாவின் பஞ்சாயத்து துறை மந்திரி)தான் தனது அதிகார பீடத்தில் அமரச் செய்துள்ளது. உண்மையில் பீகாரில் நடப்பதைப் போன்று புரட்சிகர அமைப்புகளின் கீழ் மக்கள் திரண்டு நீதி வழங்குவதைத் தங்களது கைகளில் எடுத்துக் கொள்ளும் பொழுதும் ஆசிரியை கல்பனா சுமதியைக் கற்பழித்த போலீசுக்காரர்களை நீதிமன்றத்திலேயே அடித்துப் புரட்டிய பெண்களைப் போன்று பிறரும் நெஞ்சுரம் பெறும்போது மட்டுமே இவைபோன்ற பாலியல் தாக்குதல்களை இல்லாதொழிக்க முடியும்.

— ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாடு: குண்டர்களின் சுயாட்சிப் பிரதேசம்

**அரசியல்வாதிகள் கிரிமினல்களாகவும், பேட்டை ரவுடிகள் அரசியல்வாதிகளாகவும் மாறி ஜெயா ஆட்சியில் மாஃபியாக்களின் ஆதிக்கம் கொடிகட்டி பறக்கிறது.**

"ஆளவந்தார் கொலை வழக்கு, லட்சுமிகாந்தன் கொலை வழக்கு, சூரியநாராயணன் கொலை வழக்கு" என பரபரப்பாக பேசுமளவிற்கு அன்று கிரிமினல் குற்றங்கள் பொதுவில் குறைவாகவே இருந்தன. ஆனால் இன்றைய செய்தித்தாள்களில் பக்கத்திற்குப் பக்கம் பல கொலை, கொள்ளை , கற்பழிப்பு, வழிப்பறி செய்திகளைப் பார்க்கிறோம். இதுவும்கூட சாதாரண மக்களின் பாதிப்புகள் இருட்டடிப்பு செய்யப்பட்டு; சினிமாக்காரர்கள், தொழிலதிபர்கள், பிரமுகர்கள் பாதிக்கப்படுவதை மட்டும் முதன்மைப்படுத்தி வருகிற செய்திகள். ஊருக்கு ஊர் இந்த அளவிற்கு ரவுடிகள், கேடிகள், கிரிமினல் கும்பல்கள் பெருத்துவிட்டதை கண்கூடாகப் பார்க்கிறோம். ஹாஜி மஸ்தான், வரதராஜ முதலியார் என பம்பாய் போன்ற நகரங்களைக் கூறி தாதாக்களை, அதாவது கிரிமினல் - மாஃபியா கும்பல் தலைவர்களை அடையாளங்காட்டிய நாம், விரைவில் சென்னையிலும் தாதாக்களை கண்டோம். இன்றோ பெருநகரங்கள் மட்டுமல்லாமல் சிறு நகரங்களிலும் தாதாக்களும், குட்டிதாதாக்களும், பேட்டை ரவுடிகளும் ஆட்டம் போடுகிறார்கள். (தனிப்பட்டியலில் சில உதாரணங்கள்)

"கோழி பாபு, பந்தா பாண்டியன், செயின் ஜெயபால், கட்டை பக்கிரி, பிளேடு மாணிக்கம், அறுப்பு ஆறுமுகம், தொப்பை சேகர், ஒல்லி முருகன், வெயில் முத்து, காக்கா சந்திரன், கொசு பாண்டி, பன்னிக் குட்டி செல்லம், குரங்கு பழநி" என பட்டப் பெயர்களோடும், "தலைவர், குரு, பெரியவர், ஐயா, அண்ணாச்சி" என மரியாதையோடும் மற்றும் ஊர் பெயர்களை இணைத்தும் அழைக்கப்படுவதுதான் தாதாக்களின், பேட்டை ரவுடிகளின் தனிச்சிறப்பு. பிக்பாக்கெட், திருட்டு, வழிப்பறி, கள்ளச்சாராயம் - போதைப் பொருள் விற்பனை, கடத்தல் என சமூக விரோதக் குற்றங்களில் குடிசைப் பகுதியைச் சேர்ந்த பலர் இச்சமூகத்தால் நெட்டித் தள்ளப்படுகிறார்கள். இதுதவிர தெரு பொறுக்கும் தறுதலைகள், ஒழுக்கங் கெட்ட இளைஞர்கள், 'ரோமியோ'க்களாக வலம் வரும் மாணவர்கள், வட்டி - விபச்சாரம் போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்கள் என பலதரப்பில் இருந்தும் இக்கேடுகெட்ட உலகத்திற்குள் வருகிறார்கள். சிறுசிறு குற்றங்களில் ஈடுபட்டு படிப்படியாக வளர்ந்து, பெரிய கேடியாகவும் ரவுடியாகவும் மாறுகிறார்கள். தன்பின்னே ஒரு ரவுடி கும்பலை திரட்டி வைத்துக்கொண்டு ஒரு பகுதியிலேயே பிற ரவுடிகளுக்கு சவாலாக மாறுகிறவன், பேட்டை ரவுடியாகிறான். பேட்டை ரவுடிகள், பணம் மற்றும் ஆள்பலம் உயர்ந்து அரசியல்வாதிகள், போலீசு அதிகாரிகள், பண முதலைகள், பிற பெரிய கிரிமினல் கும்பல் தலைவர்கள் ஆகியோருடன் ஒரு வலைப்பின்னல் அமைத்துக் கொண்டு வலம்வந்தால் தாதா அந்தஸ்து பெற்றுவிடுகிறார்கள்.

வடக்கில் கிரிமினல் அரசியலும், தெற்கில் கவர்ச்சி அரசியலும் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும் இரண்டும் கலந்து கோலோச்சும் போக்கு வளர்ந்து வருகிறது. கிரிமினல் அரசியல் நடத்தியே ஆதிக்கத்தை நிலைநாட்டியவர்கள் கவர்ச்சியைக் கையிலெடுத்துக் கொண்டு ஏய்த்து வருவதை பஜன்லால், லல்லுபிரசாத் யாதவ் போன்றவர்கள் வடிவில் பார்க்கிறோம். அதேபோல் தென்னிந்தியாவில் கவர்ச்சி அரசியல் நடத்தியே மக்களை ஏய்த்து வந்தவர்கள் மேலும் மக்கள் மீது அதிகாரம் செலுத்த, கிரிமினல் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கி தம்மை தக்கவைத்துக் கொள்ள முயல்கிறார்கள். கிரிமினல் செயல்கள், தாக்குதல் - கொலைகள் தமிழக ஓட்டுக் கட்சிகளுக்குள்ளும் வெளியேயும் பரவி வேர்விட்டு வளர்கின்றன.



கிரிமினல்களின் புரவலர்களாக இருந்த காலம் மலையேறி, அரசியல்வாதிகள் கிரிமினல்களாகவும், தாதாக்கள் அரசியல்வாதிகளாகவும் மாறி அரசியலில் மாஃபியா கும்பலின் ஆதிக்கம் கொடிகட்டி பறக்கிறது. பம்பாயில் மாஃபியா கிரிமினலும், காங்கிரசு எம்.எல்.ஏ.வுமான பாப்பு கலானி அன்மையில் கைது செய்யப்பட்டார். மதன் பஃப்னா என்பவர் (முன்னாள் அமைச்சர்) ஜே.ஜே. மருத்துவமனையில் சுட்டுக் கொல்லப்பட்டார். சிவசேனா, பா.ஜ.க. மற்றும் காங்கிரசில் உள்ள இத்தகைய எம்.எல்.ஏ.க்கள் ஒருவரையொருவர் தாக்கி சுட்டுக்கொள்வதும் சாதாரணமாக நடக்கின்றன. ஆந்திராவில் தெலுங்கு தேசக் கட்சியின் கிரிமினல் எம்.எல்.ஏ., எதிர்க்கட்சியினரால் குண்டுவைத்துக் கொல்லப்பட்டார். தமிழகத்திலும் 'ஆசிட்' புகழ், 'சேலை'புகழ், 'சோடாபாட்டில்' புகழ் அரசியல்வாதிகள் ஏராளம். அ.தி.மு.க.விற்கு மதுசூதனன், ஜெயக்குமார், கே.கே.எஸ்.எஸ்.ஆர்., தாமரைக்கனி (சுயேட்சை) எனப் பலரும் உதாரணங்கள். தி.மு.க.விற்கு பலராமன், தென் சென்னை கா.கிட்டு போன்றவர்களும், பா.ம.க. விற்கு பசுபதிபாண்டியன், ஜான்பாண்டியன் (முன்னாள்) போன்றவர்களும் உதாரணங்கள். போலிக் கம்யூனிஸ்டுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல், குண்டர்களைப் பயிற்சிக் கொடுத்தே வளர்க்கிறது.

கிரிமினல்களை வளர்ப்பதிலும் பயன்படுத்திக் கொள்வதிலும் எந்த ஓட்டுக் கட்சியும் விதிவிலக்கல்ல என்றாலும், பாசிச ஜெயா கும்பல் கிரிமினல் கூடாரமாகவே ஆகி பிழைப்பு நடத்துகிறது. தாதாக்கள் கை உயர்வதையும் தாழ்வதையும் வைத்தே அரசியல்வாதிகளுக்குரிய நெருக்கம் வெட்ட வெளிச்சமாகி விடுகிறது. ஒரு கட்சி ஆளும்போது எம்.எல்.ஏ.க்கள், மந்திரிகள் மட்டுமல்ல இவர்கள் ஆதரவு பெற்ற தாதாக்கள், பேட்டை ரவுடிகளும் காசு பார்ப்பார்கள்; எதிராளிகளைப் பழிவாங்குவார்கள்

உதாரணத்திற்கு, சென்னை அமைந்த



படிப்பகம்

www.padippakam.com

# சிறு நகரங்களும் ரவுடிகளின் கையில்

| பகுதி | பெயர் | தகுதி | சில தகவல்கள் |
|---|---|---|---|
| கோவை | 'காட்டூர்' கபாலி எதிரி குமார் | தாதாக்கள் | போலீசை பகைத்துக் கொண்டதால் குமார் மூலம் கபாலி கொல்லப்பட்டான். குமார் ஹோட்டல் அதிபர் என்ற பெயரில் வலம் வருகிறான். |
| | ஈஸ்வரமூர்த்தி | சாராய மன்னன் | கேரளாவிலிருந்து சாராயம் கடத்த பண்ணை நிலங்களை வாங்கி தனி சாலைவழியை உருவாக்கியவன். |
| திருச்சி | 'தாராநல்லூர்' கண்ணன் (எதிரி) சாத்தையன் | தாதாக்கள் | இரு கோஷ்டியினரின் தலைகள் அடிக்கடி உருளும். காந்தி மார்க்கெட் வியாபாரிகளிடம் மாமூல் வாங்குவதிலும் கள்ளச் சாராயம் விற்பனை - கடத்தலிலும் காண்டிராக்ட்டிலும் தொழில் விரோதிகள். |
| | எஸ்.பாலகிருஷ்ணன் | குட்டி தாதா | சாத்தையனிடம் வளர்ந்து அவனுக்கே எதிரியாகி அவனது கையாள் ஜெய்லானி, காசி மாரியப்பன் முதலானவர்களை வெட்டிக் கொன்றதால் அண்மையில் அக்கோஷ்டியால் கொன்று பழி தீர்க்கப்பட்டான். |
| ஈரோடு | தம்பா மற்றும் ஆனந்தன் | தாதாக்கள் | தம்பா அ.தி.மு.க.வின் முக்கியப் பிரமுகர். கட்சிக்காரர்களுக்கு கட்டுப்படாமல் போனதால் ஆனந்தன் கோஷ்டியை வைத்து வெட்டிக் கொல்லப்பட்டான். 'கராத்தே' மாணிக்கம் என்பவன் இப்பகுதியில் வளர்ந்து வரும் இன்னொரு தாதா. |
| நெல்லை | சுப்பையா பாண்டியன் | தாதா | எதிரிகளால் வெட்டிக் கொல்லப்பட்டதும், இவரது மகனும் உறவினரான தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. குருநாதனும் இவர் இடத்தை நிரப்ப முயற்சிக்கிறார்கள். |
| சிதம்பரம் | கொட்டாப்புள்ளி,கவுட்டி | குட்டி தாதாக்கள் | இறந்த தாதா பக்கிரியின் வாரிசுகள். பக்கிரியைக் கொன்ற போலீசாரைத் தாக்கவே கைதாகினர். |
| | கனேசன் | பேட்டை ரவுடி | தனது அண்ணன் கோவிந்தனை கொன்ற தியாகராஜனை வெட்டிக் கொன்றவன். |
| கன்னியா | 'கத்திக்குத்து' பாரதி | குட்டி தாதா | நாகை சிறையில் தனது சகாவை பார்க்க வந்த இவனை பிடிக்க முயன்ற போலீசாரை தாக்கி தப்பியவன். |
| குமரி | தங்கபாண்டியன் | குட்டி தாதா | தொழிலதிபர், சாராய வியாபாரி, கடத்தல் புள்ளி. உயர்நீதிமன்றம் முன் எதிரிகளால் கொல்லப்பட்டவன். |
| | 'மின்னல்' தங்கமணி | குட்டி வீரப்பன் | போலீசின், காட்டிலாக்கா அதிகாரிகளின் கண்ணுக்கும் கைக்கும் சிக்காமல் திரிந்தவன். |
| திண்டுக்கல் | ரத்தினம் | பேட்டை ரவுடி | யாகப்பட்டி பிரமுகர் ஒருவரை வெட்டிய வழக்கில் கோர்ட்டிற்கு வரும்போது வெட்டிக் கொல்லப்பட்டான். இவனது குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர். |
| | சந்தனத் தேவர் | சாராய மன்னன் | அ.தி.மு.க.வில் பெரும்புள்ளி. |
| சேலம் | பாலன், 'குரங்கு' பழனி | குட்டி தாதாக்கள் | பாலனை வெட்டிக் கொன்ற பழனியும் அதே வழியில் பழி தீர்க்கப்பட்டான். |

கரையில் காங்கிரசைச் சேர்ந்த கராத்தே குமார் என்கிற குட்டி தாதாவின் கை, காங்கிரசு ஆதரவு பெற்ற கவர்னர் ஆட்சியில் ஓங்கியிருந்தது. அடுத்து தி.மு.க. ஆட்சியில் இக்கட்சியைச் சேர்ந்த சந்திராம்மாள் என்ற குட்டிதாதா, குமாரைச் சிறையில் கம்பி எண்ண வைத்து கள்ளச் சாராயத்தின் முழுச் சந்தையைக் கைப்பற்றி கொடிகட்டிப் பறந்தார். அடுத்து வந்த 'ஜெ' ஆட்சியில் காங்கிரசு பூசலுக்கு முன்பு வரை குமார் 'பகட்டு' காட்டிக் கொண்டிருந்தான். பின்னர் இருவருமே அடங்கிப்போய் உள்ளனர். இதே போல் வட சென்னை குட்டிதாதா நாராயணன், காங்கிரசு என்பதால் உள்ளே தள்ளப்பட்டு அமைச்சர் மதுசூதனன் கையாளான குட்டியப்பன் இன்று நாராயணனின் சாராய சந்தையைக் கைப்பற்றி வளர்கிறான்.

தேர்தலின் போது கள்ள ஓட்டு போட, ஓட்டு பெட்டியைக் கடத்த, அடிதடி வெட்டுக்குத்து - கொலை போன்ற அராஜகத்திற்கு ஆள்-அம்பு கொடுத்து உதவுவது தாதாக்களின் வேலை. அந்த வேட்பாளர் வெற்றிபெற்று வந்தால் கைமாறாக அவர்கள் சாராய சந்தையை விரிவாக்கி தந்து உதவவேண்டும்; போலீசு கடத்தல் பொருளைக் கைப்பற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; கைது - வழக்கு ஏதாவது நிகழ்ந்தால் தலையிட்டு வெளியே கொண்டுவர வேண்டும். இது அவர்களுக்குள் எழுதப்படாத ஒப்பந்தம். தென் சென்னை பிரபல தாதா வீரமணி தொடக்கத்தில் தி.மு.க.வில் இருந்தபொழுது, நாஞ்சில் மனோகரன் எம்.பி. ஆவதற்கு 'உழைத்தவன்'. அ.தி.மு.க. விற்கு மாறியதும் மதுசூதனன், எஸ்.டி.எஸ்., ஜெயக்குமாருக்கு 'உதவிக்கரம்' நீட்டியவன். மதுசூதனன் வெற்றிக்காக 'உழைத்த' இன்னொரு தாதா 'பாக்சர்' வடிவேலு. இந்த அமைச்சர்கள் இன்று கைமாறு செய்து கொண்டுள்ளனர்.

தாதாக்களின் அட்டூழியம் பெருகி அரசியல் ரீதியாகவும் அம்பலப்பட்டு நெருக்கடி ஏற்படும் நிலையில் மட்டுமே கண்துடைப்புக்காக ஒரு சிலரைக் கைது செய்து சிறையில் வைக்க அனுமதிப்பார்கள். அவர்கள் சிறையிலிருந்தாலும் வருமானம் பாதிக்காதபடி அவர்களது தொழிலுக்கு எப்பொழுதும் போலவே வெளியில் பாதுகாப்பு கிடைக்கும். தாதாக்களுக்கு நேரடியாக ஜாமீன் கொடுக்கும் பிரமுகர்களும் உண்டு. ஈரோடு தாதாக்களுக்கு (தம்பா, ஆனந்தன்) பலமுறை ஜாமீன் கொடுத்து வெளியே எடுத்துள்ளார், அமைச்சர் செல்வகணபதி. தம்பா கட்டுப்படாமல் போனதால் ஆனந்தனை ஏவி தம்பாவைக் கொன்றதிலும் அமைச்சர்களுக்குத் தொடர்புண்டு. தம்பாவின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் அமைச்சர்கள் செல்வகணபதி, முத்துச்சாமி, மதுசூதனன், செங்கோட்டையன் முதலியோர் கலந்து கொண்டு பேசினர். இதேபோல் சென்னை சூளைமேடு குட்டி தாதா பாண்டியன் இறுதி அஞ்சலிக் கூட்டத்திலும் அ.தி.மு.க. பிரமுகர்கள் கலந்து கொண்டது பரபரப்புக்குள்ளாகியது. உப்பிலியாபுரம் தொகுதி அ.தி.மு.க., எம்.எல்.ஏ. ரவிச்சந்திரன் போலீசு நிலையத்தில் புகுந்து மிரட்டி 12 கள்ளச் சாராய கேடிகளை மீட்டு வந்ததும் பிரச்சினைக்குள்ளானது. பகுதி மக்கள் எதிர்ப்பு, பத்திரிக்கைகள் செய்திகளால் இவ்விசயம் பெரிதாகியதும் எம்.எல்.ஏ. மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜெயலலிதா அறிவிக்க வேண்டிவந்தது.

ஜெயலலிதா, எதிர்க்கும் தன்கட்சி எம்.எல்.ஏ.-க்களை, சந்திரலேகா போன்ற அதிகாரிகளை மற்றும் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்களைத் தாக்குவதற்கு தாதாக்களைப் பயன்படுத்துகிறார். கண்ணப்பன், மதுசூதனன், எஸ்.டி.எஸ்., செங்கோட்டையன் போன்ற அமைச்சர்கள் மற்றும் மாலா, சியாமளா முதலான பெண் எம்.எல்.ஏ.-க்கள் முதல் தூத்துக்குடி ஆறுமுக நயினார், சேந்தமங்கலம் ஒன்றியச் செயலாளர் சக்திவேல் போன்ற அ.தி.மு.க. பிரமுகர்கள்,





தென் சென்னை "தாதா" வீரமணி
வட சென்னை "தாதா" பாக்சர் வடிவேலு



படிப்பகம்

www.padippakam.com



எதிர்கோஷ்டியால் வெட்டிக் கொல்லப்பட்ட மதுரை ''தாதா'' தென்றல் மோகன்.

கட்சி வட்டார - பகுதி பொறுப்பிலிருப்பவர்கள் வரை ரவுடிகளைக் கொண்டு எதிரிகளைத் தாக்குவதைப் பார்க்கிறோம். இதில் சாதாரண மக்களிலிருந்து பத்திரிக்கை நிருபர்கள், அதிகாரிகள் வரை எண்ணற்றவர்கள் பாதிக்கப்பட்டதை, கிசுகிசு தமிழ் பத்திரிக்கைகளே போட்டிபோட்டுக் கொண்டு, ஆதாரங்களைக் கொண்டுவந்து காட்டுகின்றன. சேலத்தில் சந்தனம் மரம் கடத்தும் மஸ்தான் முத்துச்சாமி என்பவனுக்கு செங்கோட்டையன், தமிழரசு, பல்பாக்கி கிருஷ்ணன் மற்றும் திண்டுக்கல்லில் சாராய மன்னரான சந்தனத் தேவருக்கு சீனிவாசன், காந்திராஜன் என அ.தி.மு.க. அமைச்சர்கள், எம்.பி.-க்கள் எம்.எல்.ஏ.-க்கள் பாதுகாவலர்களாக - கூட்டுக் கொள்ளையர்களாக உள்ளனர். இப்படி அடிமுதல் நுனிவரை ஜெயா கும்பல் கிரிமினல்களோடு கூடிகுலாவுகிறது.

ரவுடிகளின் தராதரம் - அந்தஸ்த்திற்கு ஏற்பவே, அவர்களின் தீவிர செயல்தன்மைக்கு எதிர்மறையாகவே போலீசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறது. ஆளுங்கட்சியினரின் நெருக்கடிக்கு ஏற்பவே எதிர் கட்சியைச் சேர்ந்த தாதாக்கள், ரவுடிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் அல்லது எடுப்பது போல் நடிக்கிறார்கள். ஏனெனில் போலீசிற்கு மாமூல், கமிசன் பாதிக்கக்கூடாது என்பதுதான் அளவுகோல். அதே போல் பெரிய அளவிற்கு அரசியல் பின்னணி இல்லாத ரவுடிகள், கிரிமினல்கள் முதல் சிறிய கேடிகள் வரை தமது வருமானத்திற்கும் அதிகாரத்திற்கும் கேடு வரும் போதே கைது செய்து தாக்குவார்கள். அதுவும் பணம் மற்றும் அதிகாரத்தின் நெருக்கடியைப் பொருத்தே தாக்குதல் அளவு இருக்கும். ரவுடிகளை, ''இனி தவறு செய்யமாட்டேன்'' என்று கோஷம்போட வைத்து, ஜட்டியுடன் சங்கிலிகோர்த்து ஊருக்குள் போலீசு நடத்திச் செல்வதும் இத்தகைய ஒன்றே.

கிரிமினல்களின் வழிப்பறி, போதை மருந்து - கள்ளச் சாராய விற்பனை மற்றும் கடத்தல், பிக்பாக்கெட், திருட்டு, கொள்ளை, மாமூல், கட்டை பஞ்சாயுத்து, அடிதடி - வெட்டுக்குத்து முதலான ரவுடித்தனங்கள் எதையும் கண்டுகொள்ளாமல் உதவி செய்கிறது போலீசு. அப்படியே கைது செய்தாலும் வழக்கு போடாமல் விட்டுவிடுவது; வழக்கு போட்டாலும் நீதிபதியோடு கூட்டு சேர்ந்து லஞ்சம் பெற்று விடுவிப்பது; இதற்கான வழிமுறைகளை, சட்டத்தின் சந்து பொந்துகளை அவர்களுக்குக் கற்றுத்தருவது எல்லாம் போலீசுதான். மதுரையில் தாதாக்களுக்குப் போலீசு உயரதிகாரிகள்தான் புரவலர்கள். துணை கமிஷனர் சோலை முத்தையா, ஒரு தாதா குடும்பத்திலேயே பெண்ணெடுத்துள்ளார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். நாகையில் குட்டி தாதா பாரதி கோஷ்டியைச் சேர்ந்த ரவுடி ராஜை கைது செய்தபோது, டி.எஸ்.பி. சண்முகசுந்தரம் மற்றும் போலீசு அதிகாரிகளின் துணை தங்களுக்கு உண்டு என்று வாக்குமூலம் கொடுத்தான். ஆனால் போலீசே சட்ட பூர்வ கிரிமினல் கும்பலாக இருக்கிறது என்பதை மறைத்து, அரசியல்வாதிகள் தலையீடு இருப்பதால்தான் கிரிமினல்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் தவிப்பதாக கூறுகிறார்கள்.

தாதாக்களுக்கு சிறை சொர்க்கம் போன்றது. வெளியில் எதிர் கோஷ்டியால் தமக்கு ஆபத்து என்றால் கிரிமினல்கள் உடனடியாக ஏதாவது ஒரு வழக்கில் தாமே முன்வந்து சரணடைந்து சிறைக்குச் சென்று பாதுகாப்பு தேடிக் கொள்வது வாடிக்கை. சிறையில் காவலர்கள், அதிகாரிகளுடன் நட்புறவாடி லஞ்சம் கொடுத்து சகலவசதிகளையும் பெற்றுக் கொள்கிறார்கள். சென்னை மத்திய சிறையில் தற்போது உள்ள தாதா வீரமணி ராஜமரியாதையோடு உபசரிக்கப்படுகிறான். அங்கிருந்து கொண்டே தனது கடத்தல், கள்ளச்சாராய விற்பனை சாம்ராஜ்ஜியத்தை இயக்குகிறான். வீரமணி சிறைக்கு வந்து விட்டதால், மாமூல் வசூலை நடத்திவந்த தனது தங்கையின் கணவர் மோகன் பணமோசடி செய்தது தெரியவரவே, சிறையிலேயே தனது சகாக்களுடன் ஆலோசனை நடத்தி திட்டம் போட்டு அவரைக் கொன்றான். சிறையும் இவர்களுக்கு யுத்தகளம் போன்றதுதான். எதிரெதிர் கோஷ்டியைச் சேர்ந்த கிரிமினல்கள், கைதிகளைத் திரட்டி மோதிக்கொள்வதும் நடக்கும். வீரமணி, 'பாக்சர்' வடிவேலு, 'வெள்ளை' ரவி மூவரும் ஒரே நேரத்தில் சிறையிலிருந்தபோது இதுதான் நடந்தது. அண்மையில் இவர்களைப் பார்க்க வருகிற சகபாடிகளுக்கு இடையேயும் மோதல் நடந்து சிறைமுன்பே கொலை விழுந்தது.

> ரவுடிகளின் தராதரம் - அந்தஸ்த்திற்கு ஏற்பவே, அவர்களின் தீவிர செயல்தன்மைக்கு எதிர்மறையாகவே போலீசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறது. கிரிமினல், போலீசு, அரசியல்வாதிகளின் முக்கூட்டு வலுப்பெற்றும் வருகிறது.

தாதாக்களின் சமூக விரோதத் தொழில், சமூகக் கேடுகள் எல்லை கடந்தது. இவர்களது முக்கிய வருமானத்தில் ஒன்று, வியாபாரிகள் மற்றும் மக்களிடத்தில் ''மாமூல், பவுஸ், தண்டல்'' என்று பல பெயர்களில் பணம் பறிப்பது. இதற்குப் பணிய மறுப்பவர்கள், எதிர்ப்பவர்கள் பலரது கண்முன்னாலேயே உறுப்புகள் வெட்டப்பட்டோ, கொல்லப்பட்டோ தண்டிக்கப்படுவது சாதாரணம். இதனால் இவர்களுக்கு எதிராக சாட்சி சொல்லக்கூட மக்கள் முன்வரத் தயங்குவதை சாதகமாக்கிக் கொண்டு, கைது - வழக்குகளிலிருந்து எளிதாக தப்பித்துக் கொள்கிறார்கள். போலீசார் பார்வை முன்னே நடந்த பல கொலைகளைக் கூட சாட்சியில்லை என ஒதுக்குவது போலீசின் வாடிக்கை. கடற்கரையோரப் பகுதியில் மீனவர்களிடம் மாமூல் வாங்குகிற தாதாக்கள் பலர், போலீசின் பாதுகாப்பிலேயே சுதந்திரமாக செயல்படுகிறார்கள்.

கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பது அல்லது கடத்தி விற்பது, போதைப்பொருள் மற்றும் விபச்சாரம் ஆகியவை தாதாக்களின் பிற முக்கியத் தொழில்கள். இவற்றில் சிறுவர்கள், மாணவர்கள், பெண்களைப் பயன்படுத்திச் சீரழிக்கிறார்கள். வறுமையை சாதகமாக்கிக் கொண்டு குடும்ப பெண்களையும் இளைஞர்களையும், போதைக்கு அடிமையாக்கி கல்லூரி மாணவர்கள் - மாணவிகளையும் எளிதாகத் தமது உலகத்திற்குள் இழுத்து கிரிமினல்களாக வளர்க்கிறது இக்கும்பல்.

கூலிக்குக் கொலை செய்வது, அடியாளாகச் செல்வது தாதாக்களின் இன்னொரு முக்கியத்தொழில். முதலாளிகள், தொழிலதிபர்கள், பெரிய வியாபாரிகள், அரசியல்வாதிகள், பண முதலைகள், பண்ணையாளர்களின் தொழில் விரோதிகளை தாக்கியோ, கொன்றோ தக்க சன்மானத்தை பெறுகிறார்கள். இத்தோடு இவர்கள் நின்றுவிடவில்லை. தனது பகுதியிலேயே மக்கள் போராட்டங்களை முடக்க ஆதிக்க சக்திகளுக்குச் சாதகமாக செயல்படுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளர்களின் போராட்டத்தை - வேலை நிறுத்தத்தை முறியடிக்க தொழிலாளர்களைத் தாக்குவது; போராட்ட முன்னணியாளர்களை மிரட்டி பணியவைப்பது, வெட்டிக் கொல்வது என முதலாளிக்கு உதவிக்கரம் நீட்டி கொழுக்கிறது, இக்கும்பல். தாதாக்கள், பேட்டை ரவுடிகள் தங்களுக்குள் எதிரிகளைப் பழிவாங்கிக் கொள்வதற்காக தெருவில் மோதிக் கொண்டு கொலை விழுகிறபோது பொதுமக்கள் பலரும் அவர்களது அரிவாளுக்குப் பலியாகிற கொடுமையும் நடக்கிறது.

தாதாக்கள், பேட்டை ரவுடிகளது வழமையான ஒரு வருமானம், வாடகைக்காரர்களை வீடு - கடை காலி செய்து தருவது, கட்டைப்பஞ்சாயத்து செய்வதன் மூலம் கிடைக்கிறது. இதில் வருமானம் குறைவாகக் கிடைத்தாலும் பகுதியில் இதன்மூலம் கிடைக்கும் பெயர் - அந்தஸ்து காரணமாக இதை அவர்கள் கைவிட்டு விடுவதில்லை. குடித்தனப் பிரச்சினை, நிலப்பிரச்சினை, சொத்துப்பிரச்சினை என பலவற்றிற்காக நடுத்தர மற்றும் சாதாரண மக்கள் இவர்கள் உதவியை நாடுகின்றனர். தொடக்கக் காலத்தில் ஊரில் கூடும் பஞ்சாயத்திற்கும் அதற்குப்பின்பு உள்ளூர் பிரமுகர்கள் - ஆதிக்க சக்திகள், அரசியல்வாதிகளிடமும் தமது பிரச்சினையைக் கொண்டு சென்று தீர்த்துக் கொண்டார்கள். இன்று இத்தகைய தாதாக்களிடமும் பேட்டை ரவுடிகளிடமும் தமது பிரச்சினையை எடுத்துச் செல்கிறார்கள். போலீசு, கோர்ட் - சட்டம் என இவர்கள் தமது பிரச்சினையை எடுத்துக் கொண்டு போனால் அதில் அநீதி கிடைப்பது, காலம் - பணம் விரயமாகி பயனில்லாமல் போவதைப் பார்த்தே, சிறிய இழப்போடு 'நீதி' கிடைத்தாலும் உடனடியாக பிரச்சினை முடிகிறது என இத்தகையோரிடமும் செல்கிறார்கள். ஆதிக்க சக்திகளும் அரசியல்வாதிகளும், ரவுடிகளும் இதைச் சாதகமாக்கிக் கொண்டு அரசுக்கு வெளியே ஒரு 'தனி கோர்ட் - சட்டம்' அமைத்துக் கொண்டு பாதிக்கப்பட்டோரிடம் பொருக்கித் தின்று கொண்டு 'கௌரவத்தோடு' வலம் வருகின்றனர். இங்கும் அநீதி கிடைக்கும்போதும், ஏமாறும் போதும் ஒரு கட்டத்தில் ஒரு பிரிவினர் ஒதுங்கிப் போகிறார்கள்.

இன்றைக்கு தாதாக்கள் நுழையாத துறையே இல்லை. புறம்போக்கு நிலங்களை வளைத்துப் போட்டுக் கொண்டு 'ரியல் எஸ்டேட்' தொழில் செய்கிறார்கள். கிராமத்திலிருந்து பிழைப்பு தேடிவரும் விவசாயிகளை வளைத்து வைத்துக் கொண்டு 'லேபர் காண்டிராக்டர்' என்ற பெயரில் பல ரவுடிகள் வலம் வருகிறார்கள். கள்ளக்கடத்தல் மார்க்கெட்டிலிருந்து பங்கு சந்தை சூதாட்ட மார்க்கெட் வரை இவர்கள் நிறைந்து செல்வாக்கு செலுத்துகிறார்கள். தொழிலதிபர்கள், வியாபாரிகள், முதலாளிகள் என்றும் பல தாதாக்கள் வலம் வருகிறார்கள்.

மாஃபியா - கிரிமினல் கும்பல்கள் களையெடுக்கப்பட வேண்டும். ஆனால் இது அவ்வளவு சாதாரணமானது அல்ல. நவீனரக துப்பாக்கிகள், கருவிகள், வசதிகளைக் கொண்டு தாக்குவதற்கும் தப்பித்துக் கொள்வதற்கும் சக்தி பெற்றுள்ளார்கள். தனது சமூக விரோதத் தொழிலில் சிறுசிறு வேலைகளுக்கு என பலருக்கு வேலை கொடுப்பது; தர்மகர்த்தாக்களாக குடிசைப் பகுதி மக்களுக்கு இலவசமாக பணம், பொருள் கொடுத்து உதவி செய்வது; தனியாகத் தொழிலோ, வியாபாரமோ தொடங்கி பலருக்கு வேலை தந்து முதலாளியாக இருப்பது என்று பலவகைகளில் ஒரு சமூக அந்தஸ்த்தை - அடித்தளத்தை உருவாக்கி வைத்துள்ளார்கள். அரசியல்வாதிகள், அதிகாரிகள், போலீசு, கோர்ட், சிறை எல்லாம் இவர்களுக்கு வாழ்வு கொடுக்கிறது என்பது மட்டுமல்ல, அரசு மற்றும் தனியாரின் கருத்துப் பிரச்சார நிறுவனங்களும் தாதாக்களுக்கு சமூக அந்தஸ்த்தைக் கொடுக்கின்றன. பத்திரிகைகள், கதைகள், நாடகங்கள், திரைப்படங்களில் எல்லாம் இத்தகைய ரவுடிகள், தாதாக்கள் 'ஹீரோக்களாக - சமூக சேவகர்களாக' சித்தரிக்கப்படுவது அதிகரித்து வருவதைப் பார்க்கலாம். இத்தகைய தாதாக்களின், பேட்டை ரவுடிகளின் கொட்டத்திற்குத் தீர்வாக சமூக சேவை மனப்பான்மையுள்ள(?) ரவுடியாக, அராஜகவாதியாக மாறுவதைத்தான் முன்வைக்கின்றனர். எனவே இவைகள் அனைத்துக்கும் எதிராகத் தாக்குதல் தொடுத்தே மாஃபியா உலகத்தை அழிக்க முடியும்.

● சுப்பு

## குள்ளஞ்சாவடி குண்டு வெடிப்பு போலீசே நடத்திய நாடகம்

'லாக்-அப்' கொலையோ, கற்பழிப்போ நிகழ்ந்து அம்பலப்பட்டுபோய் நெருக்கடி ஏற்பட்டால் தப்பித்துக் கொள்வதற்கு ஒரு புது யுக்தியை கடைபிடிக்கிறது, போலீசு. அதாவது பகுதியிலுள்ள கிரிமினல்களைக் கொண்டு போலீசு நிலையத்தையே தாக்கவைத்து அதை பெரிய விசயமாக்கி விடுகிறது; 'தீவிரவாதிகள்' செய்ததாக சித்தரித்து நெருக்கடிகளுக்கு, அபாயங்களுக்கு மத்தியில் பணி புரிவதாகக் காட்டி அனுதாபம் தேட முயல்கிறது. இந்த யுக்தி, சிதம்பரம் - அண்ணாமலை போலீசு நிலையத்திற்கு அடுத்ததாக குள்ளஞ்சாவடி போலீசு நிலையத்தில் கடைபிடிக்கப்பட்டுள்ளது. 1992-ல் விருப்பலிங்கம் என்ற கைதியைக் கொன்று இந்நிலையத்தின் இன்ஸ்பெக்டர் சிற்றரசு 'புகழ்' பெற்றிருந்தார். செல்வம் கொலை விவகாரம் இவரது 'புகழை' மேலும் கூட்டியுள்ளது. திருட்டு வழக்கில் சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்து வரப்பட்டவர்களில் செல்வம் என்பவரை மட்டும் பல நாளாகியும் போலீசு விடுவிக்கவில்லை. இறுதியில் செல்வத்தின் பிணம் மரத்தில் தொங்கியதைக் கண்டு ஆத்திரமுற்ற புலியூர் காட்டுச்சாகை மக்கள் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு நீதி விசாரணை கோரினர். ஆர்.டி.ஓ. விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

இதற்குப் பின்பே, கடந்த 18-ந் தேதி போலீசு நிலையத்தின் மீதான தாக்குதல் நடந்தது. கோவிந்தன் என்ற போலீசார் உயிர்விட்டுள்ளார். மூன்று போலீசார் காயமடைந்தனர். நாட்டு குண்டு வீசி தாக்கப்பட்டதாகவும், திருப்பி போலீசார் சுட்டதில் தாக்கியவர்களில் ஒருவனுக்கு பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் சிந்த ஓடியதாகவும் தடயங்களைக் காட்டுகிறது, போலீசு. தமிழ்நாடு விடுதலைப்படையின் பிரசுரம் ஒன்றைக் காட்டி, தாக்கியவர்கள் விட்டுச் சென்றதைக் கைப்பற்றியதாகவும் கூறுகிறது. தமிழ்நாடு விடுதலைப்படையினரோ, ஆத்திரத்திற்குள்ளான 'தீவிர சிந்தனை'யுள்ள பகுதி இளைஞர்களோ இப்படி செய்யக் கூடியவர்கள்தான் என்றாலும், போலீசு செய்த நாடகம்தான் என்பதற்கான ஆதாரங்களும் வாய்ப்புகளுமே அதிகமுள்ளன. செல்வமும், புலியூர் காட்டுச்சாகை மக்கள் பெரும்பாலோரும் வன்னியர்கள். இறந்த கோவிந்தன் (வன்னியர்), இவர்களுக்கு நெருக்கமானவர். செல்வம் கொலையின் போது பணியிலிருந்தவர்களில் ஒருவர். விசாரணைக் கமிட்டியிடம் உண்மையைச் சொல்லிவிடப்போவதாக மனைவியிடமும் நண்பர்களிடம் கூறியது, இன்ஸ்பெக்டர் சிற்றரசுவிற்கு எட்டியுள்ளது என்றும், இதன் விளைவாக சிற்றரசு கும்பல் திட்டமிட்டு கோவிந்தனுக்கு இரவுப்பணி போட்டு நடத்தப்பட்ட தாக்குதல்தான் இது என்றும் தகவல் கிடைக்கிறது. மேலும் கோவிந்தனின் மனைவியைப் போலீசு மிரட்டி வருவதும், இத்தாக்குதலுக்குப்பின் போலீசு கண்துடைப்பு நடவடிக்கை எடுத்து கிடப்பில் போட்டுவிட்டதும் போலீசின் மீதான சந்தேகத்தையே உறுதிப்படுத்துகிறது. கிரிமினல்களோடு கூடிக்குலாவும் போலீசின் மூளைக்கு இதுபோன்ற சதிகள் சாதாரணமாகத் தோன்றக் கூடியதும் எளிதாக நிறைவேற்ற வாய்ப்புகளும் சூழ்நிலைகளும் சாதகமாக உள்ளதும்தான் எதார்த்தம்.



படிப்பகம்

www.padippakam.com




● *பகுத்தறிவு, தீண்டாமை எதிர்ப்புப் பிரச்சாரம் செய்த பெரியார் ஈ.வெ.ரா. "இன இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து" என்று இஸ்லாத்தில் மக்களைச் சேரக் கூறியிருக்கிறாரே! அந்த வழியைப் பின்பற்றி இன இழிவை நீக்கிக் கொள்வது தானே!*

**— குளச்சல் கபீர், நாகர்கோவில்**

○ "இன இழிவு" என்று பெரியார் குறிப்பிட்டது சூத்திரன், பஞ்சமன், சண்டாளன் என்ற வருண-சாதி இழிவைத் தான். மதம் மாறுவதால் இந்த இழிவு நீங்கிவிடாது. ஷியா, சுன்னி, அகமதியா என்று மத-வழிபாடு அடிப்படையிலான பிரிவுகள் இஸ்லாத்தில் இருக்கின்றன. இவை ஏற்ற தாழ்வைக் குறிப்பதில்லை. எனினும் 'லப்பை' போன்ற பிரிவினர் சமூக ரீதியில் தாழ்வாகவே நடத்தப்படுகின்றனர். அதேசமயம், கடைசியாக நடந்த சாதி மதக் கணக்கெடுப்பின்படி இஸ்லாத்துக்கு மதம் மாறியவர்களும் இந்துமத சாதிகளின் அடிப்படையிலான சமூக உறவு கொண்டிருந்ததாகவே தெரிகிறது. அதுமட்டுமின்றி மதம் மாறிய நபர்களும் - குடும்பத்தினரும் பழைய சமூக, பொருளாதார வாழ்க்கையில் நீடிக்கும் வரை இந்துமத மேல் சாதியினரால் தீண்டத்தகாதவராகவே நடத்தப்படுகின்றனர். தாழ்த்தப்பட்ட சாதியில் பலர் கிராமம், கிராமமாக கிறித்துவ மதத்திற்கு மாறியும் சாதி - வருண இழிவு நீங்கிவிடவில்லையே.

மதம் மாறுவதால் இன இழிவு நீங்கிவிடும் என்று சிலகாலம் பெரியார் ஈ.வெ.ரா. நம்பினார்; அதுபற்றி அம்பேத்காருடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார்; சிலர் மதம் மாறிய ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் என்பது உண்மையே. ஆனால் அதுவே அவரது இறுதியான, உறுதியான முடிவு அல்ல. எனவேதான் அம்பேத்கார் தனது தொண்டர்களோடு புத்த மதத்துக்கு மாறியதைப்போல பெரியார் ஏதும் செய்யவில்லை. கலப்புத் திருமணம், விதவைத் திருமணம், ராமன் பட எரிப்பு, விநாயகர் சிலை உடைப்பு போன்ற நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்ட பெரியார் மதமாற்ற இயக்கம் நடத்தவில்லை. ஒரு கருத்தை வலியுறுத்தும் போது அதன் கடைகோடி நிலையெடுத்துப் பேசுவதும், தர்க்கத்துக்கு தர்க்கம் என்று போய் சில சமயம் குதர்க்கமாகப் பேசுவதும் பெரியாருடைய வழக்கமாக இருந்தது. கேட்போருக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யும் வகையில் அவர் பேசுவதும், எழுதுவதும், நடப்பதும் கூட உண்டு. "பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பார்ப்பானை முதலில் அடி" என்றார். அதற்குப் பொருள் பார்ப்பனர்கள் மீது வன்முறைத்தாக்குதல் கட்டவிழ்த்து விட வேண்டும். "முருகன், தசரதன் மீது பலதார மணமுறைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்போடு", "கண்ணனை விபச்சாரத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்", "தமிழ் காட்டு மிராண்டி மொழி" என்றும் சொன்னார். இவற்றுக்கு நேரான பொருள் கொள்ளலாமா? அதைப் போலதான், பார்ப்பன - சனாதன இந்து மதத்தில் நிலவும் வருண - சாதிக்கொடுமை, இழிவைக் சகிக்க முடியாது, "உனக்கு மதம் அவசியம் என்று கருதினால் எங்கேயாவது போ! இங்கே இருக்காதே! இது இழிவானது!" என்றார். ஆனால் மனிதனுக்கு மதம் அவசியமானதில்லை; மதம் ஒரு மயக்கும் மருந்து; எந்த மதத்திலும் இல்லாமல் மனிதர்களால் வாழ முடியும் என்றே பெரியார் நம்பினார்.

● *"ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடிகள்" என்று அம்பேத்கார் சொன்னதாக எழுதியிருந்தீர்கள். ஆனால், அம்பேத்கார் எழுதிய "மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு" என்ற நூலில் ஆரியர்கள் இந்தியாவிற்கு கணவாய் வழியே வந்தேறியவர்கள் என்று குறிப்பிட்டிருப்பதாக நண்பர்கள் கூறுகின்றனர். நானும் அப்புத்தகத்தைப் படித்திருக்கிறேன். அதில் ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடிகள் அல்ல என்றுதான் உள்ளது. விளக்கம் தருக.*

**— என். கஜேந்திரன், அம்மணூர்**

○ "மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு" என்ற நூல் "தலித் சாகித்ய அகாதமி"யினால் வெளியிடப்பட்டது. இந்நூலின் இரு இடங்களில், "ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடிகள் அல்ல - வந்தேறியவர்கள்" என்னும் பொருள் கொள்ளும்படி வருகின்றது. ஆனால் அம்பேத்காரின் மூலநூலில் இந்த இரு வாசகங்கள் கிடையாது. வெளியீட்டாளரின் இடைச்செருகல் தான் இவை. அந்நூலின் 75-ஆம் பக்கத்தில் "இருந்தவர்களான நாகர்களும் - வந்தவர்களான ஆரியர்களும்" என்றுள்ளது. தடித்த எழுத்தில் உள்ள இந்த சொற்கள் மூல நூலில் கிடையாது. இந்நூலின் முடிவில், தடித்த எழுத்தில் உள்ள பகுதி வெளியிடுவோரின் பெயரிலேயே இவர்களே எழுதியது; இதிலும் "மாடோட்டி வந்தவர்கள் - ஆரியர்கள்", "வந்தேறிகள் - ஆரியர்கள்" என்று குறிப்பிடப்படுகிறது. இவை அம்பேத்காருடைய கருத்துக்கள் கிடையாது. இந்நூலின் தலைப்பே அம்பேத்காருடையது அல்ல; "தீண்டத்தகாதவர்கள்; யார் அவர்கள்? ஏன் அவர்கள் தீண்டத்தகாதவர்களானார்கள்?" என்பதுதான் அம்பேத்காரின் மூல நூலில் உள்ள தலைப்பு. ஆனால் "தலித்துகள் தான் பூர்வகுடிகள், ஆரியர்கள் வந்தேறிகள்" என்னும் பொருள் கொள்ளும்படியான தலைப்பை வெளியீட்டாளர்கள் தாமே வைத்துக் கொண்டார்கள்.

ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறி பாசிச கும்பல் இந்த மண்ணுக்கு உரிமை பாராட்டுவதற்காக "முஸ்லீம்கள் அந்நியர்கள், ஆக்கிரமிப்பாளர்கள்" என்றும், "ஆரியர்கள் வந்தேறிகள் என்பது தவறு; இந்த நாட்டின் பூர்வகுடிகள்தாம்" என்றும் இப்போது 'நிரூபிக்க' முயலுகிறார்கள். ஆனால் அம்பேத்காரின் காலத்தில், இந்தியப் பூர்வ குடிகள் என்று சொல்லிக் கொள்வது இழிவானது; ஐரோப்பிய வெள்ளைநிற, இன வழி வந்த பூர்வகுடிகளாகிய தாமே (ஆரியர்களே) உயர் பிறப்பினர் என்று பகிரங்கமாகப் பீற்றிக் கொண்டனர். திலகர், சவார்கர், ஹெட்கேவார், கோல்வால்கர் முதல் நேரு வரை இப்படி எழுதியுள்ளனர். இதை மறுப்பதற்காக வேண்டி ஒரு சிறந்த வக்கீலுக்குரிய முறையில் பார்ப்பனர்களின் வாதங்களுக்கு எதிர்வாதங்களை அம்பேத்கார் முன்வைத்தார். "ஆரியர்கள் வந்தேறிகள் அல்ல; இந்தியாவின் பூர்வகுடிகள்தாம்; ஆரியர்கள் ஐரோப்பிய பூர்வகுடி வம்சாவழியினர் என்கிற பார்ப்பனக் கோட்பாடு தவறானது" என்று அம்பேத்கார் வாதாடினார். "அ.ஆ. பதிப்பகம்" மூலமாக எ. பொன்னுசாமி வெளியிட்டுள்ள "டாக்டர். அம்பேத்காரின் வரலாறு" என்ற நூலின் பல இடங்களில் அவரது இந்த வாதங்கள் இடம் பெற்றுள்ளன. அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை யொட்டி இந்திய அரசு வெளியிட்டுள்ள "டாக்டர். பாபா



படிப்பகம்

www.padippakam.com

சாகேப் அம்பேத்காரின் எழுத்துக்களும் சொற்பொழிவுகளும்'' தொகுதி 7-இல் இதன் மூலநூல் இடம் பெற்றுள்ளது. ஆனால் அம்பேத்காரின் இந்த வாதங்கள் எல்லாம் அறிவியல் பூர்வமான ஆய்வுகள் அடிப்படையிலானவை அல்ல.

அதுசரி! ஆரிய - திராவிட பூர்வகுடி இனம், தேசிய இனம், மொழி, வருண - சாதிய தோற்றங்கள், இந்திய அரசியல் அமைப்பு ஆகிய பல பிரச்சினைகளிலும் அம்பேத்காரின் ஆய்வுகளும் முடிவுகளும் ''முற்போக்கு'' இயக்கங்களின் அணிகளிடமிருந்தே மூடி மறைக்கப்பட்டிருக்கின்றனவே அது ஏன்? இந்தப் பிரச்சினைகளில் அக்கறை உள்ளவர்களாகக் காட்டிக் கொள்ளும் திராவிட, தமிழினக் குழுக்கள் முதல் போலிப் புரட்சிக் குழுக்கள் வரை அனைவருமே அம்பேத்காரின் ஆய்வுகள், முடிவுகளைப் பரிசீலனை, விமர்சனத்துக்கு உட்படுத்தாது, அம்பேத்காருடன் முரண்படாது தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவை மட்டும் திரட்டிக் கொள்ளச் செய்யும் முயற்சிதான் காரணம். இந்தப் பிரச்சனைகளில் ஏதோ தமக்கு உடன்பாடான கருத்துகளையே அம்பேத்கார் கொண்டிருந்தார் என இக்குழுக்கள் நாடகமாடுவதை அம்பலப்படுத்தும் துணிவின்றி அம்பேத்காரிஸ்டுகள் இசைந்து போவது இன்னொரு காரணம்.

● *ஏகாதிபத்திய எதிர்ப்புதான் கட்சியின் பிரதானத் திட்டம் - அதை ஒட்டி வெகுசன இயக்கம் (அதாவது டங்கல் திட்டம், ஐ.எம்.எ.:ப் - இடம் நாட்டை அடகு வைப்பது) எடுக்காமல் பார்ப்பன எதிர்ப்பியக்கம் நடத்துவது ஏன்? இது ஏகாதிபத்திய எதிர்ப்பு வீச்சை குறைப்பதாகாதா?*

ஏகலைவன், திருப்பத்தூர்

O ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரத்துவ எதிர்ப்பு புரட்சி என்பது யுத்த தந்திர ரீதியிலான திட்டம். ஏகாதிபத்திய எதிர்ப்புதான் பிரதான திட்டம் என்பது தவறானது. ஆனால் செயல் தந்திர ரீதியில் பார்ப்பன - சனாதன (இந்து) மதவெறி பாசிச எதிர்ப்பு இன்றைய பிரதான அரசியல் கடமையாக உள்ளது. இதன் ஒரு பகுதியாகத்தான் கருவறை நுழைவுப் போராட்டம் போன்றவை நடத்தப்படுகின்றன. இதன் அரசியல் முக்கியத்துவத்தைப் பார்க்காது ''பார்ப்பன எதிர்ப்பியக்கம்'' என்ற கருதுவது குறுகிய பார்வையாகும். அதே சமயம் கேள்வியாளர் குறிப்பிடும் பிரச்சினைகள் மீதான இயக்கங்கள் தொடர்ந்து நடத்தி வருகிறோமே தவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு வீச்சைக் குறைக்கவில்லை. கருவறை நுழைவுப் போர்ாட்டச் செய்தியைப் போல நமது பிற இயக்கங்களுக்குப் பத்திரிக்கைகள் இடமளிப்பதில்லை; இருட்டடிப்பு செய்கின்றன என்பதே உண்மையாகும்.

## ★ நடிகர் கமல்ஹாசன் முற்போக்காளரா?
## ★ பார்ப்பன எதிர்ப்பியக்கம் நடத்துவது ஏன்?

● *திரைப்பட நடிகர் கமல்ஹாசன் பல்வேறு விசயங்களில் சிறிதளவு முற்போக்காகப் பேசிவருகிறார். ஆக-15 'இந்து' பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் ''ஐ.எம்.எ.:ப்-க்கு நாம் அடிமைகளாக இருக்கிறோம். பாபர் மசூதியை இடித்த நாட்டில் வாழ்வதற்கு நான் வெட்கப்படுகிறேன். கைபர் கணவாய் வழியாக வந்த ஒரு நாடோடிக் கூட்டம் படிப்படியாக இந்தியாவை ஆக்கிரமித்துள்ளது'' என்றும் இன்னும் பல விஷயங்கள் கூறியுள்ளார். (பார்க்க தினகரன், இந்து ஆக-15) மற்ற திரைப்பட நடிகர்களின் பேட்டிக்கு இது வித்தியாசமானது. மேலும் தனது குழந்தையை சாதிப் பெயர் சொல்லாமல் பள்ளியில் சேர்த்துள்ளதாகவும் கேள்விப்பட்டேன். பார்ப்பன ஆதிக்க இனத்தில் பிறந்த அவர், இவ்வாறு நடந்து கொள்வதன் காரணம் என்ன? உண்மையில் சிற்சில முற்போக்கு அம்சங்களுடன் உள்ளவரா? அல்லது ஏமாற்று வேலையா?*

சங்கர், திருச்சி-8

O வாசகர் குறிப்பிடும் தினகரன் (ஆக-15) கிடைக்கவில்லை. 'இந்து' ஏட்டின் பகுதியை வாசகர் அனுப்பியுள்ளார். அதில் அயோத்தி மசூதி இடிப்பு - அது குறித்து இந்திய வானொளி செய்த இருட்டடிப்பு, நாட்டின் லஞ்ச ஊழல், பம்பாய் குண்டு வெடிப்பு ஆகியவற்றுக்காக தாம் வெட்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தான் ஒரு திராவிட பார்ப்பனன் என்று பல பேட்டிகளில் கமலஹாசன் கூறியுள்ளார் என்றாலும் 'கைபர் கணவாய் வழிவந்த நாடோடி...'' என்று 'இந்து' பேட்டியில் இல்லை. (இந்து ஏடு என்பதால் அவ்வாறு கூறவில்லையோ, இந்துவே

## ★ இன இழிவு நீங்க இஸ்லாம் மதத்தில் சேருமாறு பெரியார் கூறினாரா?

இருட்டடிப்பு செய்ததோ தெரியவில்லை), வாசகர் குறிப்பிடுவதைப் போல ''ஐ.எம்.எஃப்-க்கு நாம் அடிமைகளாக இருக்கிறோம்'' என்று அவர் கூறிவில்லை. அது பற்றி இரு மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன; எது உண்மை என்று முடிவு செய்ய முடியாது ஒரு பாமரன் என்பதாகத் தன்னைக் குறிப்பிடுகிறார். அதே சமயம் தற்போது கொண்டுவரப்படும் தாராளமயமாக்கும் கொள்கையை ஆதரிப்பதாகக் கூறுகிறார்; நல்லதே நடப்பதில்லை என்கிற தோல்வி மனப்பான்மை தேவையில்லை; நல்லதும் நடக்கிறது என்று உதாரணத்துக்குப் பழைய, புதிய பார்ப்பனர்களோடு தாம் வாழும் ஆழ்வார்பேட்டை பகுதியில் மக்கள் விழிப்புணர்வும் எழுச்சியும் பெற்று முன்னேற்றம் கண்டுள்ளதாக நம்பிக்கை தெரிவிக்கிறார்.

பார்ப்பனர்களில் இருவகையானவர்கள் உள்ளனர். மாறிவரும் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகளை அங்கீகரித்து அம்மாற்றங்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தாமும் அதற்கேற்பவும் காரிய சாத்தியமான வகையிலும் மாறிக் கொள்பவர்கள்; அதே சமயம் முற்போக்கான, புரட்சிகரமான மாற்றம் எதிலும் ஊக்கமாக முன்னிற்காது நிர்பந்தம் காரணமாக வால் பிடித்து வருபவர்கள் - ஒரு வகை. இவர்களைத் தாராளவகை பார்ப்பனர்கள் எனலாம். இடதுசாரி - தேசிய முன்னணி கட்சிக்ளிலும், அதன் ஆதரவு சக்திகளாகவும் இத்தகைய பார்ப்பனர்கள் உள்ளனர். இன்னொரு வகை அத்தகைய மாற்றங்களை விரும்பாதவர்களாகவும், எதிர்ப்பவர்களாகவும், மாற்றங்களுக்கு முந்தைய நிலையை மீட்க முயலுபவர்களாகவும் உள்ள பிற்போக்கு, பழைமைவாத கடுங்கோட்பாட்டு வாத பார்ப்பனர்கள் எனலாம். பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ்., காங்கிரசு, சிவசேனா ஆகிய பாசிசக் கட்சிகளிலும் அவற்றின் ஆதரவு சக்திகளாகவும் இத்தகைய பார்ப்பனர்கள் உள்ளனர். இதில் முதலாவது வகையைச் சேர்ந்தவர்தான் நடிகர் கமலஹாசன். கூடவே வெற்றிகரமான சினிமா நடிகராக நீடிப்பதற்குத் திரையில் மட்டுமல்லாது வெளியிலும் பல கவர்ச்சிவாதத் தோற்றத்தை ஏற்படுத்தித் தக்கவைத்துக் கொள்வது அவசியம் என்பதைக் கண்டு செயல்படுகிறார். ரஜினிகாந்த், விஜய்காந்த், சத்யராஜ், பாக்யராஜ் போன்றவர்களும் இப்படிச் செய்கிறார்கள். அத்துடன் கமலஹாசன் ஒரு வித்தியாசமான நடிகர். அறிவு ஜீவி என்று உசுப்பேற்றிவிட்டு முகத்துதி பாடிப் பிழைக்கும் ஒரு பார்ப்பனக் கும்பல் அவரை சூழ்ந்து கொண்டு இயக்குகிறது. மொத்தத்தில் காட்டி வரும் முற்போக்கு அம்சங்கள், அவரது தோற்றம் - நலன்களை உயர்த்திக் கொள்வதற்கானவைதாமே தவிர சமூகத்திற்கு பயன்படுவன அல்ல.



படிப்பகம்

www.padippakam.com

# ஈழப்போர் எதை நோக்கி? சமரசமா? முடிவற்றதா?

**தனி ஈழத்திற்கான சாத்தியப்பாடு குறைவாகவே இருப்பதால், சர்வதேசத் தலையீடு மூலம் குறைந்தபட்சம் பாலஸ்தீன சுயாட்சி போன்றதொரு ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ள புலிகள் தயாராகவே உள்ளனர்.**

கடந்த நவம்பர் 11-ந் தேதி நள்ளிரவில் நாகதேவன் துறை கடற்படைத் தளத்தையும் பூநகரி இராணுவ முகாமையும் தாக்கிய ஈழ விடுதலைப் புலிகள் ஆயிரத்துக்கும் மேலான சிங்கள இராணுவத்தினரைக் கொன்று, ஏராளமான ஆயுதத் தளவாடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். 21 ஆண்டு கால ஈழ விடுதலைப் போரில், சிங்கள இன வெறி இராணுவம் மிகப்பெரிய தோல்வியையும் இழப்பையும் சந்தித்தது. இது இராணுவ ரீதியில் மட்டுமல்லாது, அரசியல் ரீதியிலும் கொழும்புவிற்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் இருந்து மீளமுடியாமல் சிங்கள பாசிச அரசும் இராணுவமும் இன்னமும் நிலைகுலைந்து போயுள்ளன.

இலங்கைத் தீவின் வட-கிழக்கு மாகாணங்கள் அடங்கிய ஈழத்தில் கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதேசமயம் அங்குள்ள காட்டுப் பிரதேசங்களில் புலிகளின் பல கொரில்லா முகாம்கள் உள்ளன. புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ள யாழ் தீபகற்பத்தைத் தரைமார்க்கமாக பிரதான நிலப்பகுதியுடன் இணைக்கும் யானையிறவு சிங்கள இராணுவத்தின் பிடியில் உள்ளது. இன்னொரு சிறிய தரை வழி மார்க்கத்தை மறித்துக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பது பூநகரி இராணுவ முகாம். யாழ் தீபகற்பத்துக்கும், பிரதான நிலப் பகுதிக்கும் இடையே உள்ள கடல் ஏரியைக் கடந்து தெற்கில் உள்ள கொரில்லாப் படையுடன் தொடர்புகொள்வதற்கான கிலாலி நல்லூர் படகுப் போக்குவரத்தைத் தாக்குவதற்காக சிங்கள இராணுவம் நாக தேவன் துறையில் கடற்படைத் தளம் அமைத்துள்ளது. யாழ் தீபகற்ப மக்களின் குறைந்தபட்ச பொருளாதாரத் தேவை களும் இந்தக் கடல் ஏரி படகுப் போக்கு வரத்தை நம்பித்தான்.

இப்படகுப் போக்குவரத்தைத் தடுத்து, புலிகளை யாழ் தீபகற்பத்துக்குள் முடக்குவது என்கிற யுத்த தந்திரத்தை சிங்கள இராணுவம் கடைப்பிடித்தது. இதற்காக கிழக்கே யானையிறவு, மேற்கே பூநகரி - நாக தேவன் துறை ஆகிய முகாம்களில் இருந்து தாக்குதல் நடத்தி வடக்கு - தெற்கு கடல் ஏரி வழி போக்குவரத்தை நிறுத்த முயன்று வந்தது. இரு மாதங்களுக்கு முன்புதான் யானையிறவு முகாமில் இருந்து யாழ் தீபகற்பத்துக்குள் முன்னேறிய சிங்கள இராணுவம் கிலாலி படகுத் துறையைத் தாக்கி புலிகளின் படகுகளை அழித்தது. புலிகளின் கடுமையான எதிர்த் தாக்குதலுக்கு அஞ்சி உடனடியாகப் பின்வாங்கியது. ''யாழ் தேவி நடவடிக்கை'' எனப்பட்ட இந்த இராணுவத் தாக்குதலைப் பின்வாங்கியதற்காக பிரேமதாசாவுக்குப் பிறகு அதிபராக வந்த விஜய துங்கே கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

''இராணுவத்தின் கைகளை அரசியல் தலைமைதான் கட்டிப் போட்டிருக்கிறது; விட்டால் புலிகளைப் பூண்டோடு அழித்து விடுவார்கள்'' என்கிற தோரணையில் சிங்கள வெறியர்கள் கூச்சல் போட்டார்கள். ஆனால் சிங்கள இராணுவத்தின் ''திறமை'' வெகு விரைவிலேயே தகர்த்துக் காட்டப்பட்டுவிட்டது. ''யாழ் தேவி நடவடிக்கை''க்குப் பதிலடி கொடுக்கவும், பிரபாகரன் பிறந்தநாள், தியாகிகள் நினைவுநாள் ஆகியவற்றை ஒட்டியும் புலிகள் விரைவில் தாக்குதல் தொடுப்பார்கள் என்று அறிந்திருந்தும் சிங்கள இராணுவம் கோட்டை விட்டுவிட்டது. வடக்கில் இருந்து படகுகளில் வந்து இறங்கிய கடற்புலிகளும், தெற்கே காடுகளில் இருந்து வந்த கொரில்லாக்களுமாக முதலில் நாகதேவன் துறை கடற் படைத் தளத்தையும், பின்னர் பூநகரி இராணுவ முகாமையும் முற்றுகையிட்டுத் தாக்கினர்.

**புலிகளுக்கு பூநகரி, நாகதேவன் முகாம்களின் தாக்குதல் தார்மீக ரீதியிலும், இராணுவ ரீதியிலும் முக்கிய வெற்றிதான். ஆனால் ஈழப்போர் எதை நோக்கிச் செல்கிறது?**




இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் முற்றுகைக்குள் சிக்கிக் கொண்டனர். எட்டுஅதிகாரிகள் உட்பட ஆயிரம்பேர் புலிகளால் கொல்லப்பட்டனர் அல்லது காணாமற் போயினர் என சிங்கள இராணுவத் தளபதியே ஒப்புக் கொண்டார். எஞ்சியவர்கள் காயமடைந்தனர் அல்லது புலிகளிடம் சிக்கினர். நிலை குலைந்து போன சிங்கள இராணுவம் ஐந்து நாட்களாக புலிகளின் முற்றுகையைத் தகர்க்கவோ, சிக்கிய இராணுவத்தினரை மீட்கவோ முடியாமல் திணறியது. ஐந்தாம் நாள் கடும் விமானத் தாக்குதலுடன், புலிகளே பின்வாங்கிய பிறகு பூநகரி முகாமுக்குப் போயினர். பிணக் குவியலையும், காயமுற்று ஓலமிட்ட சிப்பாய்களையும், தகர்க்கப்பட்ட தற்காப்பு அரண்களையும், குறையாடப்பட்ட ஆயுதத் தளவாடக் கிடங்குகளையுமே கண்டனர்.

21 ஆண்டு போரில் இதுவரை இல்லாத அளவு உயிர்பலி கொடுத்ததோடு, ஐந்து அதிவேக மோட்டார் படகுகள், இரண்டு கவச - பீரங்கி வண்டிகள், 150 இயந்திரத் துப்பாக்கிகள், மோட்டார் ஏவுகணைகள், 50 இலகுரக இயந்திரத் துப்பாக்கிகள், 400 கைத்துப்பாக்கிகளையும் பறிகொடுத்தது சிங்கள இராணுவம். இவற்றின் மதிப்பே பலகோடி ரூபாய்களாகும்.

துக்கத்தில் மூழ்கிய சிங்களக் குடிகளுக்குப் பதில் சொல்ல முடியாத அரசியல், இராணுவத் தலைமை கடும் கண்டனத்துக்கும் ஆத்திரத்துக்கும் இலக்கானது. ''வடகிழக்கில் இனப் பிரச்சினையே கிடையாது; பயங்கரவாதிகளின் பிரச்சினை தான் உள்ளது; அதையும் இராணுவத்தைக் கொண்டு ஒடுக்குவேன்'' என்று சில மாதங்களுக்கு முன்புதான் திமிரோடு பேசினார் விஜயதுங்கே. அதற்குத் தக்க பதிலடி கொடுத்துள்ளார்கள் புலிகள். ஈழப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்று இப்போது சிங்கள பேரினவாதக் கட்சிகளே ஒப்புக் கொள்கின்றன. அரசியல் தீர்வு என்கிற பெயரில் வடகிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த விஜயதுங்கே அரசு முடிவு செய்தது; தமிழின துரோக கட்சிகள் ஒத்துழைக்கத் துணியாமற்போகவே, அத்தேர்தல்களையும் ஒத்திப்போட்டது.

இராணுவ ரீதியிலான தீர்வுகாண திராணியற்றிருக்கும் அதேசமயம், ஈழப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வும் காண முடியாத, அதற்கான துணிவற்ற



படிப்பகம்

www.padippakam.com

இக்கட்டில்தான் சிங்கள பாசிச அரசு உள்ளது. இதற்கென அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் குழு தீர்வு கூறமுடியாமல் முடங்கிக் கிடக்கிறது; தமிழினத் துரோகக் கட்சிகள் இக்குழுவில் பங்கேற்பதில்லை; அரசுத் தலைமையும் ஒதுங்கியே நிற்கிறது. தொடரும் ஈழப்போர் இராணுவ உயிர் பலியையும் செலவையும் மட்டுமல்ல, இலங்கையின் பொருளாதார நெருக்கடியையும் அதிகரித்து வருகிறது. வடகிழக்கில் மட்டுமல்ல, கொழும்பில் நடக்கும் திடீர்த் தாக்குதல்களும் (பிரேமதாசா, அதுலத்முதலி கொலைகள்) சிங்கள இனவெறி பாசிஸ்டுகளையே கதிகலங்கச் செய்கின்றன. அடுத்த அதிபர் தேர்தலுக்குப் போட்டியிட யாரும் முன்வராத நிலையில் விஜயதுங்கேயைத்தான் எவ்வித எதிர்ப்புமின்றி ஆளும் கட்சி மீண்டும் நிறுத்துகிறது. ஆனால் மாநில சுயாட்சி வழங்குவதற்குக் கூட சிங்கள இனவெறியர்கள் இடந்தர மறுக்கிறார்கள்.

புலிகளுக்கு பூநகரி, நாகதேவன் துறை முகாம்களின் தாக்குதல் தார்மீக ரீதியிலும், இராணுவ ரீதியிலும் முக்கிய வெற்றிதான். என்றாலும் அதற்காக அவர்கள் கொடுத்துள்ள விலை கொஞ்சமல்ல. 490 கொரில்லாக்களை இப்போரில் இழந்துள்ளதாக புலிகளே ஒப்புக் கொண்டுள்ளனர். இராணுவரீதியில் புலிகள் வலுவான நிலை கொண்டிருந்தபோதும், இம்மாதிரியான இழப்புகள் தொடர்கின்றன. ஈழப்போரில் ஏறக்குறைய ஒரு தலைமுறையே பலியிடப்பட்டு, அடுத்த தலைமுறையின் சிறார்களே முன்னிறுத்தப்பட்டுள்ளனர். இழப்புகள் தவிர்க்க முடியாதவைதாம் என்றாலும் ஈழப்போர் எதைநோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது; இந்தப் போக்கில் என்றாவது விடிவுகாண முடியுமா என்பதுதான் கேள்வி!

யாழ் தீபகற்பமே இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. வலுவான உடலுடைய சிறுவர்கள் முதல் அனைவரும் ராணுவச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்; அல்லது துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டு புலிகளின் சிறையில் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால், புலிகளை எப்படி சிங்கள இராணுவம் ஒடுக்க முடியாதோ அதே போல புலிகளும் இராணுவ ரீதியில் வென்று தனி ஈழத்தை உருவாக்கிவிட முடியாத இழுபறி நிலைதான் நீடிக்கிறது. திடீர்த் தாக்குதல்களில் இரண்டு தரப்புமே மாறி மாறி சில வெற்றிகளை ஈட்டியுள்ளன. தெற்கிலும் கிழக்கிலும் கொரில்லாத் தாக்குதல்கள் பலவற்றை புலிகள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். என்றாலும் யாழ் தீபகற்பத்துக்குள் புலிகளின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதிலும், கிழக்கில் தேடுதல் வேட்டை மூலம் பல கொரில்லாக் குழுக்களைக் கொல்லுவதிலும் சிங்கள இராணுவமும் வெற்றி பெற்றுள்ளது.

கிரமமான இராணுவத்தையும், அரசையும் நடத்துவது சிங்கள பேரின பாசிஸ்டுகளின் பலவீனமாக உள்ளது. அடிக்கடி புலிகளின் கொரில்லாத் தாக்குதலுக்கு இராணுவமும், அரசுத் தலைவர்கள், சிவிலியன்கள் இலக்காகின்றனர். அந்நிய முதலீடு, கடன், உதவி ஆகியவை குறைந்து, அந்நிய சுற்றுலா பயணிகள் வரவு குறைந்து, அந்நிய வர்த்தகம் பாதிக்கப்பட்டுப் பொருளாதார நெருக்கடியும் நிரந்தரமாகிவிட்டது. இவையும் யாழ் தீபகற்ப அதிகாரமும், கொரில்லா இராணுவம் - போர்முறையும் புலிகளுக்குச் சாதகமாக உள்ளன. இதனாலேயே ஒரு நீண்டகாலப் போரில் புலிகள் ஊன்றி நிற்க முடிகிறது; அதுவுமில்லாமல் உலகிலேயே பலவீனமான இராணுவங்களில் ஒன்று சிங்கள இராணுவம் என்பதும் முக்கியமானது.

நீண்டகால கொரில்லாப் போர் என்பதால் வெற்றி நிச்சயம் என்கிற நம்பிக்கையூட்டி வருகிறார்கள், புலிகள். ஆனால் சீனா, வியத்நாம், கம்பூச்சியாவைப் போல மக்களின் முழு ஆதரவைப் பெற்ற யுத்தமல்ல புலிகள் நடத்துவது. ஒரு கணிசமான அளவு ஈழத்தின் ஜனநாயக சக்திகளைப் பகைத்துக் கொண்டும் ஒடுக்கியும் புலிகள் தங்களை நிலைநாட்டிக் கொண்டுள்ளனர். யுத்த நிலைமைகளில் நிரந்தரமாக வாழும்படி ஈழமக்களை நிர்பந்தித்துத்தான் "ஆதரவு" பெறுகின்றனர். பாலஸ்தீன, அயர்லாந்து கொரில்லாக்களைப் போல மக்கள் சார்பற்ற தனிநபர் பயங்கரவாதச் செயல்களை ஒரு போராட்ட முறையாக மேற்கொள்கின்றனர். மேலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, மக்களுக்கு அதிகாரம் என்கிற சுதந்திர மற்றும் ஜனநாயக அரசியல் துளியும் கிடையாது; அதற்குப் பதிலாக பாசிச, இனவெறி அரசியலே புலிகள் அமைப்பில் தலைமை வகிக்கிறது.

உலகின் பல நாடுகளிலும் ஒடுக்கப்பட்ட தேசங்கள் தனியே பிரிந்துபோகும் நிகழ்ச்சிகள் இன்று பிரதானப் போக்காக உள்ளது; அதுபோலவே தனி ஈழமும் விரைவில் அடைந்துவிடுவோம் என்று புலிகளைவிட அதன் ஆதரவாளர்கள் பெருங்கூச்சல் போடுகின்றனர். சோவியத் யூனியன் உட்பட முன்னாள் சோசலிச நாடுகளிலும், எத்தியோப்பியாவிலும் தேசிய இனங்கள் பிரிந்து போனதைச் சான்று காட்டுகிறார்கள். இவை போலி சோசலிசத்தின் வீழ்ச்சி, ஆட்சிக் கவிழ்ப்புகளோடும் மேல்நிலை வல்லரசுகள், குறிப்பாக அமெரிக்காவின் ஆதரவோடும் நடந்துள்ளன. அதேசமயம் கிழக்கு திமோர், பிலிப்பைன்ஸ், பர்மா, இந்தியா, ஈராக் - துருக்கி, பாகிஸ்தான், இலங்கை போன்ற பல நாடுகளில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களை மேல்நிலை வல்லரசுகள் அங்கீகரிக்க மறுத்து அவற்றை ஒடுக்குவதற்கு உதவுகின்றன; சில சமயம் இராணுவ வலிமை பெற்று துணை வல்லரசாக வளர்ந்துவிட்ட நாடுகளைத் துண்டாடவும், பலவீனப்படுத்தவும் தேசிய இனப் பிரச்சினைகளில் மேல்நிலை வல்லரசுகள் தலையிடுகின்றன. சில சமயம் ஏற்கனவே தனது நவகாலனிய நிலையில் உள்ள நாடுகளிலும், மிகச் சிறிய தேசங்களாகப் பிளவுபடுவது தாம் ஏற்படுத்த விரும்பும் வர்த்தக வளையம் - சந்தைக்குத் தடையாக வரும் விவகாரங்களிலும் தேசிய இனப் பிரச்சினைகளை அங்கீகரிக்க மறுத்து அவற்றை ஒடுக்குவதற்கு உதவுகின்றன.

ஈழ விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்திற்கு எதிரான போரை நடத்திக் கொண்டிருக்கும்போதே, அதன் மூலம் தனி ஈழம் அடைவதை மட்டுமே ஒரே தீர்வாகக் கொண்டிருக்கவில்லை. அது புலிகளின் ஆதரவாளர்கள் செய்யும் பிரச்சாரம்



**ஈழப்போரில் ஏறக்குறைய ஒரு தலைமுறையே பலியிடப்பட்டு, அடுத்த தலைமுறையின் சிறார்களே முன்னிறுத்தப்பட்டுள்ளனர்.**



படிப்பகம்

www.padippakam.com

மட்டும்தான். ஆனால் இதற்கான சாத்தியப்பாடு குறைவாகவே இருப்பதால் சர்வதேசத் தலையீடு மூலம் குறைந்தபட்சம் பாலஸ்தீன சுயாட்சி போன்றதொரு ஏற்பாட்டையும் ஏற்பதற்குப் புலிகள் தயாராகவே உள்ளனர். அப்படிப்பட்ட தீர்வுக்கு சர்வதேசக் கவனத்தை ஈர்ப்பதற்கும், அத்தீர்வில் அதிகபட்ச அதிகாரத்தைப் பெறுவதற்கான சாதகமான, வலுவான இராணுவ நிலையைப் பெறவுமே போரிட்டுக் கொண்டுள்ளனர்.



புலிகளின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ், இராணுவத் தேவைக்கான தொழிலுற்பத்தியில் ஈடுபடும் பெண்கள்; புலிகளின் இராணுவ அதிகார வர்க்க 'சோசலிச' உற்பத்தி முறை.

ஆனால் சர்வதேசத் தலையீடு என்பது உண்மையில் மேல்நிலை வல்லரசுகளின், குறிப்பாக அமெரிக்காவின் மேலாதிக்கத் தலையீடு தான். ஈராக்- குவைத், கம்பூச்சியா, செர்பியா-போஸ்னியா, சோமாலியா விவகாரங்கள் இதையே நிரூபிக்கின்றன. இத்தகைய நிலைமை ஏற்படுமானால், அப்புறம் ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது கேளிக்கூத்தாகிவிடும். மேல்நிலை வல்லரசுகள், குறிப்பாக அமெரிக்கா நிர்ணயிக்கும் ''உரிமை''யைப் புலிகள் ஏற்கவேண்டிஇருக்கும்.

இதற்குமாறாக, சிங்கள இராணுவத்தைப் போல பன்மடங்கு பலம் பொருந்திய எதிரிப்படைகளை எதிர்த்து சீன, வியத்நாமிய விடுதலைப் போர்கள் வெற்றிபெற்றுள்ளன. காரணம் அங்கு நடந்தவை புரட்சிகர - ஜனநாயக அரசியலால் வழிநடத்தப்பட்ட கொரில்லா முறையை அடிப்படையாகக் கொண்ட மக்கள் யுத்தங்களாகும். அப்பாதைக்கு முற்றிலும் மாறான, எதிரான அரசியல் வழிமுறையையே புலிகள் பின்பற்றுகின்றனர். ராணுவ வலிமை மட்டுமே சகலவற்றையும் தீர்மானிக்கும் சக்தி வாய்ந்தது என்கிற வறட்டுப் பார்வையே புலிகளிடம் உள்ளது.

ஆனால் விடுதலைப் போரின் வெற்றிக்குச் சில நிபந்தனைகள் உள்ளன. புலிகள் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள யாழ் தீபகற்பத்தில் பாசிச சர்வாதிகார - இராணுவ அதிகார வர்க்கப் பாணியிலேயே ஆட்சி நடக்கிறது. ஜனநாயக சக்திகளாக மக்களிடம் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் முயற்சியே கிடையாது. சிங்கள இராணுவத்தின் பொருளாதார முற்றுகையை முறியடிக்கும் வகையில் ஈழத்தில் சுயமான பொருளாதார - தொழில் முயற்சிகளில் மக்கள் ஈடுபட்டிருப்பதாக புலிகளின் பத்திரிகைகள் எழுதுகின்றன; புலி ஆதரவாளர்களும் பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் ஈழ மக்களின் கூட்டுறவுப் பொருளாதாரத்துக்குப் பதில் புலிகளின் இராணுவ - அதிகார வர்க்க அடிப்படையிலும், புலிகளுக்குக் கப்பம் கட்டி விட்டு கொள்ளையிடும் வணிகர்களின் ஆதிக்கத்திலுமே ஈழப் பொருளாதாரம் நடக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக் குறையினால் மக்கள் தவிக்கையில் புலிகள் தமது இராணுவத் தேவைக்கான தொழில்களை மட்டும் தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் நடத்தி வருகின்றனர். சோசலிசம் என்கிற பெயரில் பர்மாவில் இராணுவமே பொருளாதாரக் கட்டுப்பாட்டை மேற்கொண்டு அதிகார வர்க்கத்தினரை வைத்து தொழில்களை நடத்தினர். அதைப் போன்று சிறிய அளவில் சில தொழில்களை புலிகளே நடத்துகின்றனர்.

புலிகளின் உளவுப் படையினால் சந்தேகிக்கப்படுபவர்கள் வேட்டையாடப்படுகின்றனர்; துரோகிகள் என முத்திரை குத்தி

விடுதலைப் போருக்கு மிகவும் இன்றியமையாதது அதிகபட்சம் ஜனநாயக சக்திகளின் ஆதரவைப் பெறுவதுதான். சீன, வியட்நாமிய விடுதலையில் இது முக்கியப் பங்காற்றியது. புலிகளைப் போல் துப்பாக்கி முனையில் இதை சாதிக்க முடியாது.

சித்திரவதை செய்யப்படுகின்றனர்; இரகசியமாகக் கொல்லப்படுகின்றனர். விடுதலைப் போருக்கு மிகவும் இன்றியமையாதது அதிகபட்சம் ஜனநாயக சக்திகளின் ஆதரவைப் பெறுவது. சீன, வியத்நாமிய விடுதலையில் இது முக்கிய பங்காற்றியது. துப்பாக்கி முனையில் இதைச் சாதிக்க முடியாது. புலிகள் நட்பு சக்திகளுடன் ஐக்கியப்படாதது மட்டுமல்ல, நடுநிலைச்சக்திகளை வென்றெடுக்கவும் தவறியதோடு ஒரு குழுவின் நலன்கள் மட்டுமே முன்னிறுத்தப்படுகிறது.

துரோகிகளான தமிழினக் குழுக்கள் மட்டுமல்ல, ஈழ விடுதலைக்கு விசுவாசமான குழுக்களும் வேட்டையாடி விரட்டப்பட்டன. அவர்கள் அனைவரும் வெளிநாடுகளில் குடியேறிவிட்டனர். வென்றெடுக்கப்பட வேண்டிய இசுலாமிய மக்களையும் வேட்டையாடியதால் புலிகள் மேலும் தனிமைப்பட்டனர். சிங்கள சமுதாயம் இனவெறிக்குப் பலியாகி இருந்த போதும், ஈழவிடுதலையின் நியாயத்தை ஏற்று ஆதரிக்கும் ஜனநாயக சக்திகளின் ஆதரவைத் தேடும் வகையில் சிங்கள ஆளும் பாசிச கும்பலையும், சிங்கள மக்களையும் பிரித்துக் கையாளும் அணுகுமுறை புலிகளிடம் கிடையாது. அப்பாவி குழந்தைகள் உட்பட சிங்கள சிவிலியன்களையும் பலமுறை கொல்லும் பயங்கரவாதச் செயல்களில் புலிகள் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் நேரடியாக சிங்கள பாசிச அரசுடன் உடன்பாடு கண்டோ, சர்வதேசத் தலையீடு என்கிற பெயரில் மேல்நிலை வல்லரசுகள், குறிப்பாக அமெரிக்க நிர்ப்பந்தத்தை ஏற்றோ பாலஸ்தீன சுயாட்சியைப் போன்ற ஏற்பாட்டைப் புலிகள் ஏற்பார்கள் அல்லது அயர்லாந்தைப் போன்ற முடிவற்ற, நீண்டகாலப் போர் நடத்திக் கொண்டிருப்பார்கள்.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com



## சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

● மேற்கு வங்கத்திலுள்ள 'விக்டோரியா சணல் ஆலையை'ச் சேர்ந்த தொழிலாளர்கள், சம்பளம் மற்றும் போனஸ் பிரச்சினையில் நிர்வாகத்துடன் கைகோர்த்துக் கொண்ட சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., மற்றும் காங்கிரஸ் தொழிற்சங்கத் தலைவர்களை ஆலையினுள்ளே சூழ்ந்து கொண்டு நையப் புடைத்ததுடன், தொழிற்சங்க அலுவலகங்களையும் தரைமட்டமாக்கிவிட்டனர்; ''இனி நாங்கள் தனித்தே போராடப் போவதாகவும் '' அவர்கள் அறிவித்துள்ளனர். தங்களின் தலைமைக்கு எதிரான தொழிலாளர்களின் தன்னெழுச்சியான இப்போராட்டத்தை 'மார்க்சிஸ்டு'களின் தொழிலாளர் நல மந்திரி, 'ரௌடித்தனம்' என வசைமாரி பொழிந்துள்ளதுடன், 'விக்டோரியா மில்' நாளை மாநிலம் முழுவதற்கும் முன்னுதாரணம் ஆகக்கூடும் என்ற அச்சத்தையும் தெரிவித்துள்ளார்.

● பம்பாய் அந்தேரி புகைவண்டி நிலையத்திற்குப் பச்சை வர்ணம் பூசியதை ஆட்சேபித்து சிவசேனா குண்டர்கள் வர்ணத்தை மாற்றச் சொல்லி ஒப்பந்த நிறுவனத்தை மிரட்டியுள்ளனர். பால் தாக்கரே, பச்சை வர்ணம் தமக்குப் பாகிஸ்தானை நினைவூட்டுவதாக இதற்கு மதவெறி மற்றும் தேசியவெறி சாயம் ஊட்டினார். பம்பாயில் இயங்கும் ஏக்தா சமிதியினர், ''பச்சை பாகிஸ்தானை நினைவூட்டினால், காவி எங்களுக்கு மதக் கலவரங்களை நினைவூட்டுகிறது'' என தாக்கரேக்குப் பதிலடி கொடுத்தனர். தற்பொழுது அந்நிறுவனம் வர்ணத்தை மாற்ற ஒப்புக் கொண்டுவிட்டது.

● தற்பொழுது ஆசிய கண்டத்து நகரங்களில் சேரியிலும் சிதிலமடைந்த கட்டிடங்களிலும் வசித்துவரும் மக்கள் தொகையினரில் மூன்றில் ஒரு பகுதியினரின் எண்ணிக்கை, இந்த நூற்றாண்டின் இறுதியில் 60 சதவீதமாக வளர்ந்துவிடும் என ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இதற்கு ஆதாரமாகத் தற்பொழுது பம்பாயில் 50 சதவீத மக்கள் சேரியில் வசிப்பதைக் காரணம் காட்டியுள்ளது. பொருளாதார ஜாம்பவான்களாகக் கருதப்படும் தென்கொரியா'வும் ஹாங்ஹாங்கும் கூட இதிலிருந்து தப்ப முடியாது எனச் சுட்டிக்காட்டிகிறது அந்த ஆய்வறிக்கை. தாராளமயமாக்கலின் மையமான நகரங்களின் நிலையே இதுதானெனில், கிராமங்களைப் பற்றிக் கூறவே வேண்டாம்!

● கடந்த அக்டோபர் 26-ல் ஒரிசா மாநிலம் ஜகசிங்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் கிராமம் ஒன்றில் நடு இரவில் நுழைந்த போலீசார் கும்பல் ஒன்று, வீடுகளில் புகுந்து கொள்ளையடித்ததுடன், பத்துக்கும் அதிகமான பெண்களைக் கற்பழித்துள்ளது. வழக்கம்போல் அரசு இச்சம்பவத்தை மறுத்தாலும், பெண்களுக்கான தேசிய கமிஷனின் உறுப்பினர் திருமதி. பத்மா சேத் நேரடியாக விசாரணை செய்து இதனை உறுதிப்படுத்தியுள்ளார். இம்மாநிலத்தில் 1987 முதல் 93 வரை நடந்த 1688 கற்பழிப்பு வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்கள் 27 பேர் மட்டும் தான்; இது போன்று பம்பாயில் நடந்த 638 சம்பவங்களில் தண்டிக்கப்பட்டவர்கள் 14 பேர்தான். இதனிடையே தற்பொழுது உச்ச நீதிமன்றம் கர்நாடகாவில் நடந்த கற்பழிப்பு சம்பவத்தில் உயர் நீதிமன்றம் விதித்த ஏழு ஆண்டு தண்டனையை மூன்று ஆண்டாகக் குறைத்துள்ளது. இத்தீர்ப்பு குற்றவாளிகளுக்கு ஒரு முன்னுதாரணமாகிவிடும் எனப்பல்வேறு பெண்ணுரிமை அமைப்புகள் கண்டித்துள்ளன.

● பாபாவைக் கொல்ல முயன்றதாகக் கூறப்படும் வழக்கில் உண்மைகளை வெளியுலகுக்குத் தெரியாமல் மறைத்ததற்காக மத்திய அரசின் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார் மாயஜால வித்தைகளை விஞ்ஞானரீதியாக ஆராயும் கமிட்டியின் உறுப்பினர் பிரேமானந்த். பாபாவுக்கும் சந்திர சுவாமிக்கும் இடையே செய்திகளைப் பரிமாறிக் கொள்ள ஃபேக்ஸ் வசதி இருக்கும் பொழுது, தந்தி வந்ததாகக் கூறி கொலையாளிகள் பாபாவின் அறையினுள் நுழைந்ததாகக் கூறியிருப்பது; குற்றவாளிகளைச் சாதாரண கைத்துப்பாக்கியால் போலீசார் சுட்டதாகக் கூறும்பொழுது பிரேத பரிசோதனை அறிக்கை, 303 சுழல் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளனர் எனக் கூறுவது; கொலையாளிகள் குத்திக் கொன்றதாகக் கூறப்படும் இருவரின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பாதது - இம்மூன்றின் அடிப்படையில் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார் இவர்.

● கடந்த 1991 டிசம்பரில் கர்நாடகாவில் கன்னட வெறியர்களால் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை வெறியாட்டத்தை விசாரித்து வந்த கமிஷன் தனது தீர்ப்பில் ''எந்த அரசியல் கட்சியும் இக்கலவரத்திற்குப் பின்புலமாக இல்லை'' என ஓட்டுக் கட்சிகளின் தலையில் புனித நீரைத் தெளித்துள்ளது. பங்காரப்பாவின் அமைச்சரவை சகாக்கள் இக்கலவரத்தை முன்னின்று நடத்தியதற்கான சிறு ஆதாரம் கூட கிடையாதெனவும் இக்கமிஷன் உறுதியாகக் கூறிவிட்டது. கலவரம் நடக்கும் என முன் கூட்டியே அறிந்து நடவடிக்கை எடுக்காததுதான் பங்காரப்பா செய்த தவறாம். அதோடுகூட முக்கியமாகத் தமிழர்களால் தங்கள் இனம் பாதிக்கப்படும் என்ற கன்னட மக்களின் பயத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அறிவுரை வேறு!

● பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பு அதன் வளாகத்தினுள் இருந்த ராமர் கோயிலின் பூசாரியான லால்தாஸ் கடந்த நவம்பர் 16 அன்று படுகொலை செய்யப்பட்டுள்ளார். சொத்து பிரச்சனைதான் காரணமெனக் கூறப்பட்டாலும், இப்படுகொலையின் பின்னே அரசியல் காரணிகள் உள்ளன. இவர் ராமஜென்ம பூமி பிரச்சனையைப் பா.ஜ.க. கும்பல் அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்துகிறது என விமர்சித்தார். எனவே இவரை கல்யாண்சிங் அரசு பூசாரி பதவியில் இருந்து நீக்கியது. பின் அயோத்தியாவைச் சுற்றியிருந்த பல ராமர் கோவில்களை இந்து மத வெறியர்கள் இடித்ததை எதிர்த்துடன், டிசம்பர் 6-ன் பின் நடைபெற்று வரும் விசாரணையில் முக்கிய சாட்சியாகவும் இருந்தார். இது பா.ஜ.க. - வி.இ.ப. கும்பலுக்கு மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. ''தனது உயிருக்கு இக்கும்பலால் ஆபத்து; எனவே எனக்குப் பாதுகாப்பு வேண்டும்'' என பலமுறை அவர் விடுத்த வேண்டுகோளெல்லாம் காங்கிரசிற்கு 'செவிடன் காதில் ஊதிய சங்காய்'ப் போனது!

பாரதீய ஜனதா குண்டர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் அயோத்தி ராமன் கோயிலின் தலைமைப் பூசாரி லால்தாஸ்.



● 100 கோடி ரூபாய் போஃபார்ஸ் ஊழலைவிட பலமடங்கு அதிகமான ஊழலில் ராவ் அரசு சிக்கிக் கொண்டுள்ளது. 3500 கோடி ரூபாய மதிப்புள்ள 100 ஆல்பா ஜெட் ரக விமானங்களைப் பிரான்சிலிருந்து வாங்குவதற்கு வசதியாக 875 கோடி ரூபாய் அளவுக்குத் தரகுத் தொகையாகத் தர முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது மூடப்பட்டிருக்கும் இந்நிறுவனத்தைத் திறப்பதற்காக பிரான்சு இத்தொகைக்கு ஒத்துக் கொண்டுள்ளது. ராவ் அரசும் இந்த ஒப்பந்தத்திற்கு பச்சைக் கொடி காட்டிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# கோவை போலீசாரின் இந்து வெறியாட்டம்

## கோட்டைமேட்டுக்குச் செல்லும் வழிகளில் போலீசு செக் போஸ்ட் போட்டு முஸ்லீம்களை தாக்கியது.

கோவை போலீசு காவி உடை சூலாயுதம் ஏந்தாததுதான் பாக்கி; மற்றபடி ஆர். எஸ்.எஸ். குண்டர்கள் போலவே செயல்படுகிறார்கள். சிறுபான்மை முஸ்லீம்கள் கோவையில், போலீசாலும் ஆர்.எஸ்.எஸ். — இந்து முன்னணி குண்டர்களாலும் மாறி மாறி அடிக்கடி தாக்கப்படுகிற கொடுமை நிகழ்கிறது. ஆர்.எஸ்.எஸ்.-ன் சேத்துப்பட்டு அலுவலகக் குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு எப்படியாவது 'முஸ்லீம் தீவிரவாதிகள்தான்' காரணம் என தொடர்புபடுத்தி விடுவதற்காக வலிந்து முயற்சி செய்கிறார்கள். பழைய வழக்குகளில் கைதான முஸ்லிம்களை எல்லாம் தேடிப் பிடித்து புலனாய்வு மேற்கொண்டிருக்கிறது, சி.பி.ஐ. இந்த வேட்டையில் கைக்கு சிக்காதவர்கள் எனக்கூறி மூன்று முஸ்லீம் இளைஞர்களின் புகைப்படத்தை வெளியிட்டு ராஜீவ் கொலை வழக்கைப் போல் பரபரப்பூட்ட முயற்சித்துத் தோற்றார்கள். ஆர்.எஸ்.எஸ். கும்பல் கைகாட்டும் ஊர்களுக்கும் முகவரிகளுக்கும் வால்பிடித்துச் சென்று தேடுதல் வேட்டை - புலனாய்வு நடத்திய சி.பி.ஐ., கோவைக்கும் வந்தது.

கோவை இந்து முன்னணி பிரமுகர் வீரகணேஷ் கொலை வழக்கு, ராமகோபாலன் மற்றும் பா.ஜ.க. தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி கொலை முயற்சி வழக்கு தொடர்பாக சம்பந்தப்படுத்தப்பட்ட பாட்ஷாபாய் என்பவரை சுற்றி வட்டமிட்டார்கள். ஒருமுறை இவரை கைது செய்ய முயன்ற சி.பி.ஐ. போலீசு, பகுதி மக்கள் எதிர்ப்புக்குப் பின் திரும்பியது. பிறகு ஆர்.எஸ்.எஸ். வெறியரான கோவை போலீசு கமிசனர் கணேசனின் உதவியை நாடியது. இவர் அனைவரின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அண்மையில் கோவையில் நடந்த இந்து முன்னணி மாநாட்டிற்கு சகலவசதிகள் செய்து கொடுத்து இந்து வெறியர்களுக்கு விசுவாசமாக பாடுபட்டவர். சென்றமுறை முஸ்லீம்கள் மீது நடந்த தாக்குதலிலும் பங்கெடுத்தவர். சி.பி.ஐ. அணுகியது இவருக்கு 'அல்வா போல' ஆகிவிட்டது. தமது கும்பலுடன் சதித்திட்டம் தீட்டி மிகப்பெரிய தாக்குதலைத் தொடுத்தார்.

அன்று 16-ந் தேதி, தமிழக அரசின் 'பந்த்' முதல் நாள் இரவு கோவை கோட்டைமேடு பகுதியில் ரிசர்வ் போலீசு பட்டாளம் 2000 பேர் குவிக்கப்பட்டனர். கோட்டைமேட்டுக்கு வரும் 8 வழிகளும் போலீசால் அடைக்கப்பட்டன. அரசு நடத்தும் 'பந்த்'திற்கு அதுவும் கோட்டைமேட்டுக்கு மட்டும் இவ்வளவு பாதுகாப்பு ஏன் என்று மக்களுக்கு அப்பொழுது புரியவில்லை. பாட்ஷாபாய் கைது செய்யப்படலாம் என முன்பே பகுதி மக்கள், சி.பி.ஐ. நடவடிக்கை மூலம் அறிந்திருந்தாலும் அதற்காகத்தான் இந்த பந்தோபஸ்த்து ஏற்பாடு என யூகிக்க முடியாதவாறு 'பந்த்' நாளை தேர்ந்தெடுத்தது சதிகார கும்பல். அதிகாலை 3.30 மணிக்கு பாட்ஷாபாய் மற்றும் அவரது தம்பிகள் நவாப்கான், முஜிபூர் ரஹ்மான் முதலியோரைத் தாக்கி கைது செய்து இழுத்துப் போனது, போலீசு. விடிந்ததும் செய்தியறிந்து ஆத்திரமான பகுதி மக்கள் எதுவும் செய்ய முடியாவண்ணம் போலீசு வளையமிட்டு பகுதி முழுவதும் நின்றது. இதையும் மீறி 300 பேர் திரண்டு போலீசை கண்டித்து முழங்கியதால் போலீசால் கடுமையாக தாக்கப்பட்டனர்.

கோட்டைமேடுக்கு உள்ளே, வெளியே செல்பவர்கள் கடுமையாக சோதிக்கப்பட்டார்கள்; கையெழுத்து வாங்கப்பட்டார்கள். ஊரடங்கு உத்தரவு அறிவிக்காமலேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. கலவரப் பகுதியாக அறிவிக்காமலேயே முற்றுகையிடப்பட்டது. யாரும் வீதியில் நடமாடக்கூட அனுமதிக்கப்படவில்லை; வாகனங்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை. காலைக்கடன் முடிக்க செல்வது முதல் பள்ளிக்கும், பள்ளிவாசலுக்கும், கடைக்கும் செல்வது வரை மறுக்கப்பட்டு சாலையில் குழுமினாலே தாக்கப்பட்டார்கள். பேருந்து நிலையத்தில் நின்றவர்கள்கூட தாக்கி விரட்டியடித்தது போலீசு கும்பல். இத்தகைய சட்டவிரோத முற்றுகைக்குப் பின் உள்ளே புகுந்து போலீசு நடத்திய கொலைவெறித் தாக்குதல் அளவில்லாதது. வீடுவீடாகப் புகுந்து, வீட்டுக் கதவுகளை சாத்திக்கொண்டு இளைஞர்களையும்




பெண்களையும் வயதானவர்களையும் தாக்கியது காட்டுமிராண்டிக் கும்பல். ஆர்.எஸ். எஸ். வெறியன் கமிசனர் கணேசன் நேரடியாகவே தாக்குதலில் ஈடுபட்டார். இளைஞர்களையும் மாணவர்களையும் சிறுவர்களையும் தெருவில் இழுத்துப்போட்டும் அடித்தார்கள். முஸ்லீம்கள், இந்துக்கள் என்று வேறுபாடு இல்லாமல் இதில் பாதிக்கப்பட்டனர். நகரின் வெளிப்பகுதியிலிருந்து வேறு வேலையாக இங்கு வந்தவர்களும் தப்பவில்லை. இத்தகைய தாக்குதல் இரண்டு நாட்கள் நடந்தன. முதல்நாள் 94 பேரும் இரண்டாம் நாள் 154 பேரும் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர். பள்ளிவாசலில் தங்கியிருந்தவர்களும் அடித்து விரட்டப்பட்டு பூட்டு போடப்பட்டது.

கதீஜா என்ற விதவைப் பெண் மற்றும் பஷீர் வீட்டிற்குச் சென்ற போலீசு கும்பல் 35 பவுன் நகைகளையும் 6000 ரூபாய் பணத்தையும் சூறையாடியது. பாட்ஷாவின் வீட்டிலும் டி.வி., குளிர்பதனப் பெட்டி அனைத்தும் நொறுக்கப்பட்டு பணம் கொள்ளையடிக்கப்பட்டது. வின்சென்ட் சாலையில் உள்ள வீடுகளில் புகுந்த போலீசு பெண்களை நாகூசும் வார்த்தைகளால் திட்டி, கையையும் சேலையையும் பிடித்து இழுத்து வெறியாட்டம் போட்டது. இதற்குப் பின்னரே கொதித்தெழுந்த முஸ்லீம் இளைஞர்கள் திருப்பித் தாக்கத் தொடங்கினர். இதில் இந்துக்கள் மூவர் (ஜோதிமணி, நாகராஜ், செந்தில்) கத்தியால் குத்தப்பட்டனர். 4 பேருந்துகள் தாக்கப்பட்டன. இதற்குப் பின் போலீசு வெறிகொண்டு தாக்கி பலரை கைது செய்து கொண்டு போனது. போலீசின் காட்டுமிராண்டித் தாக்குதலுக்கு அஞ்சி 10 சதவிகிதம் மக்கள் கோட்டைமேட்டிலிருந்து பொள்ளாச்சி போன்ற பகுதிகளுக்கு போய்விட்டார்கள். தெருவிலும் யாரும் நடமாட முடியாத நிலை இருந்ததால் இப்பகுதியே சுடுகாடு போல் காட்சியளித்தது.

போலீசு நிலையத்தில் ஆண்கள் அனைவரையும் ஆடையை அவிழ்த்து 'சுன்னத்' செய்யப்பட்டவரா எனப் பார்த்து அடையாளம் கண்டு முஸ்லீம்கள் மீது மட்டும் வழக்கு போட்டு இந்துக்களை விடுவித்தனர். மூளை வளர்ச்சியில்லாத குழந்தைகள் மூவரும்கூட பிடித்து வைத்து பின்னர் விடுவிக்கப்பட்டனர். சிங்காநல்லூர் செல்ல பேருந்து நிலையத்தில் நின்றிருந்தவரை பிடித்து இழுத்து வந்து தாக்கியதில் அவரது கால்கள் 'யானைக்கால் வியாதியுடையவர்' போல் வீங்கியுள்ளன. லாட்டரி டிக்கெட் விற்பனையாளர் ஒருவர் 'பந்த்' அன்று கைது செய்து தாக்கப்பட்டதில் ''பி 7'' போலீசு நிலையத்தில் நினைவிழந்த நிலையில் இருந்தார். அதற்குப் பிறகு அவர் நிலை தெரியவில்லை.

என்.ஹெச். சாலையிலுள்ள ''மாஸ் ஹோட்டல்'' தாக்கி சூறையாடப்பட்டு முத



படிப்பகம்

www.padippakam.com

லாளியும் தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டனர். கோட்டைமேட்டில் உள்ள ''ரஹிமானியா ஹோட்டல்'' பாபர் மசூதி இடிப்பிலிருந்து இத்தோடு மூன்றாவது முறையாக தாக்கப்பட்டது. கோட்டைமேட்டில் நிறுத்தியிருந்த வாகனங்கள் அனைத்தும் நொறுக்கப்பட்டு சாக்கடையில் வீசப்பட்டன. சாயிபாபா காலனியில் ஐக்கிய ஜமாத் செயலாளரின் கடை சூறையாடப்பட்டது. இத்தாக்குதலில் போலீசோடு பகுதி ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி குண்டர்களும் கலந்து கொண்டனர். இவை அனைத்தும் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு திட்டமிட்டு தொடுக்கப்பட்ட தாக்குதல் என பின்னர் தெரியவந்தது. ஆத்துப்பாலம், போத்தனூர், கரும்புக்கடை போன்ற பகுதிகளிலும் முஸ்லீம்கள் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

கோட்டைமேட்டுக்குச் செல்லும் வழிகளில் போடப்பட்ட ''செக்போஸ்ட்'', இன்றும் நீடிக்கிறது. கூலி வேலைக்கு செல்வோர் பாதிக்கப்பட்டு அவதிப்படுகின்றனர். பத்திரிகைகள்கூட தணிக்கை செய்யப்பட்டு உள்ளே அனுப்பப்படுகின்றன. பத்திரிகையாளர்கள் கோட்டைமேட்டுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்படுகின்றனர். இப்பகுதியில் உள்ள தினகரன், மாலை முரசு அலுவலகங்களின் செய்தி தாள்கள், பரிசோதித்த பின்னே வெளியேறுகின்றன. பழனியில் முஸ்லீம் பெண் கற்பழிப்பு சம்பவம் தொடர்பாக 10 ஆண்டுகளுக்கு முன் தமிழகம் முழுவதும் இயக்கம் நடத்தப்பட்ட பொழுதுகூட கோட்டைமேடு பகுதியில் ''செக்போஸ்ட்'' போடப்படவில்லை.

எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் (காங். சட்டமன்ற தலைவர்), சி.கே.குப்புசாமி (எம்.பி.) ஆகியோர் மட்டுமே பகுதிக்கு வந்து பார்த்தனர்; ''செக்போஸ்டை'' அகற்றக் கோரி அறிக்கை விட்டனர். இதுவும்கூட பகுதி மக்கள் சிலர் பலமுறை வலியுறுத்திக் கூறி அழைத்து வந்துள்ளதால் நிகழ்ந்தது. வழக்கம்போலவே போலீசு முஸ்லீம் தலைவர்களை கூட்டி வைத்து அமைதிப் பேச்சு வார்த்தை என நாடகமாடியது. அதே சமயம் சமூக விரோதிகள் என்ற பெயரில் முஸ்லீம்களை கைது செய்வது தொடர்ந்தது.

சென்ற மாதம் காயல்பட்டினத்தில் முஸ்லீம்கள் மீது கொலைவெறித் தாக்குதல்; இம்மாதம் கோவை முஸ்லீம்கள் மீது தாக்குதலும் அறிவிக்கப்படாத ஊரடங்கு உத்திரவும்! பாசிச - பார்ப்பன ஜெயா ஆட்சியில் சிறுபான்மையினர் மீதான தாக்குதல் தொடர்கிறது. ஆர்.எஸ்.எஸ். கும்பல் அதன் பங்காளியாக, போலீசு துறைக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் முஸ்லீம்களைத் தாக்கி வெறியாட்டம் போடுகிறது! சிறுபான்மையினர் மட்டுமல்லாமல் பெரும்பான்மை சமூக மக்களும் ஒருங்கிணைந்து கிளர்ந்தெழுந்து இப்பாசிச - பார்ப்பன - இந்துவெறி கும்பலின் விஷப்பல்லை பிடுங்க வேண்டும்.

## ஏழை நாடுகளை விழுங்க அமெரிக்காவின் பொருளாதார வளையம்

உலகின் மிகப்பெரிய பொருளாதார வல்லரசுகளாக வளர்ந்துள்ள ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தின் (குறிப்பாக ஜெர்மனி) மற்றும் ஜப்பானின் ஆதிக்கத்தை முறியடிக்கவும் அதற்குப் போட்டியாகவும் அண்மையில் அமெரிக்கா ஒரு பொருளாதார வளையத்தை உருவாக்கியுள்ளது. அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய மூன்று நாடுகளையும் கொண்டதாக இப்பிராந்திய வளையம் அமையும். வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்பாடு (NAFTA) என்ற பெயரிலான இப்பொருளாதார வளையத்திற்கு அமெரிக்க நாடாளுமன்றம் அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, இம்மூன்று நாடுகளும் தங்களுக்குள் சுதந்திரமாக வர்த்தகம், தொழில், முதலீடு முதலானவற்றைச் செய்து கொள்ள முடியும். விசா உரிமையின்றி இம்மூன்று நாடுகளின் மக்கள் இப்பிராந்தியத்தில் பயணம் செய்யவும், குடியேறவும், தொழில் - வியாபாரத்தில் ஈடுபடவும் முடியும். இம்மூன்று நாடுகளும் தங்களுக்குள் பரஸ்பரம் பொருளாதார - வர்த்தகக் கூட்டுக்களை அமைத்துக் கொண்டு, அன்னிய நாடுகளின் இறக்குமதிக்குத் தடைவிதிக்கும்; அல்லது கடுமையான காப்புவரி - சுங்க வரிகளைத் திணிக்கும். இதன் மூலம் இம்மூன்று நாடுகளைக் கொண்ட பிராந்திய வளையமானது, மிகப்பெரிய பொருளாதார வல்லரசாக வளரும் என்று ஏகாதிபத்தியவாதிகள் மதிப்பிடுகின்றனர். சர்வதேசப் பொருளாதாரத்தின் தலைவனாக அமெரிக்கா வலம் வரும் என்று அதிபர் கிளிண்டன் பெருமிதம் கொள்கிறார்.

பெருகிவரும் பொருளாதார நெருக்கடி, வேலையின்மை முதலான உள்நாட்டுப் பிரச்சினைகளைச் சமாளிக்கவும், குறிப்பாக பிராந்தியத்திலேயே மறுமுதலீடு செய்து பொருளாதார ரீதியில் வளரவும், மேலாதிக்கம் செலுத்தவும் இப்போது ஏகாதிபத்தியங்கள் பிராந்திய வளையங்களை அமைத்து வருகின்றன. ஏற்கனவே மேற்கு ஐரோப்பிய நாடுகள் இவ்வாறு ஒரு வளையத்தை ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் (EEC) என்ற பெயரில் அமைத்து முன்னேறியுள்ளன. அதே வழியில் வட அமெரிக்க சுதந்திர வர்த்தக வளையத்தை நிறுவியுள்ள அமெரிக்கா, தென்கிழக்காசிய நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்த்து ஆசிய - பசிபிக் பொருளாதாரக் கூட்டுறவு (APEC) என்னும் மற்றொரு பொருளாதார வளையத்தை தனது ஆதிக்கத்தின் கீழ் நிறுவ முயற்சித்து வருகிறது.

இத்தகைய ஏகாதிபத்திய பொருளாதார வளையங்களால் ஏழை நாடுகள் நியாயமான முறையில் வர்த்தகம் செய்ய முடியாமல் ஓட்டாண்டி நாடுகளாகி விடும். ஏனெனில் ஏழை நாடுகளிலிருந்து ஏகாதிபத்தியங்களுக்கு இறக்குமதியாகும் பொருட்களுக்குக் கடுமையான காப்புவரி - சுங்கவரி விதிக்கப்படும் அபாயம் உள்ளதால், ஏழைநாடுகள் ஏற்றுமதியே செய்ய முடியாமல் மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொள்ளும்.

உதாரணமாக, ''காட்'' (GATT) எனப்படும் வர்த்தகம் மற்றும் சுங்க வரிக்கான பொது ஒப்பந்தம் இம்மாதம் 15-ந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வர உள்ளது. இதன்படி, ஜவுளித் துறையில் ஏகாதிபத்தியங்கள் 10 ஆண்டுகளுக்கு ஏகபோக ஆதிக்கம் செலுத்த பல்வகை நூலிழை ஒப்பந்தம் (MFA) வழிவகை செய்கிறது. ஆனால் ''காட்'' ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே அதைவிடக் கடுமையான விதிகளைக் கொண்டு, ஜவுளித்துறையில்



15 ஆண்டுகாலம் ஏகபோகம் செலுத்தும் வகையில் வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் அமைந்துள்ளது. மேலும் ''காட்'' ஒப்பந்தத்திற்கு எதிரான வகையில், வடஅமெரிக்க பிராந்தியத்தில் மட்டுமே சுதந்திர வர்த்தகத்தை அனுமதிக்கப் போவதாகக் கூறுகிறது.

இவை யாவும், ஏழை நாடுகளைக் கபளீகரம் செய்யவும், இதர வல்லரசுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு உலகை மேலாதிக்கம் செலுத்தவும் அமெரிக்கா முன்னிலும் தீவிரமாக இறங்கிவிட்டதையே நிரூபிக்கின்றன. இதன் விளைவாக, வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகியவை உலகின் மிகப் பெரிய பணக்கார வல்லரசுகளாக மாறப்போவதையும், இந்தியா உள்ளிட்டு தெற்காசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்க நாடுகள் வறுமையிலும் பட்டினியிலும் சிக்கித் தவிக்கப் போவதையுமே இப்புதிய நிலைமைகள் சுட்டிக் காட்டுகின்றன.

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM R.N. 49648/85 Regd.No. TN/MS(S) 344
www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

ஆச்சரியமாக இருக்கலாம்! இப்படத்தில் தாழ்த்தப்பட்ட ஒருவருக்கு முடி வெட்டி விடுபவர் சந்தேகத்துக்கு இடமின்றி பீகார் முதலமைச்சர் லல்லு பிரசாத் யாதவ்தான். மக்களைக் கவர மூதாட்டிகளைக் கட்டி பிடிப்பதிலிருந்து குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதுவரை அனைத்தும் அலுத்துப் போனதால்தான் இந்த அதிரடி நடவடிக்கை. எண்ணெய் காணாத சிக்குப் பிடித்த தலையும் அழுக்குப் படிந்த உடம்பும் கிழிந்த ஆடைகளும்தான் தாழ்த்தப்பட்டோர் தன்னைப் போல உயர்வதற்குத் தடையாயுள்ளவை என்பதுதான் அவரின் புதுக் கண்டுபிடிப்பு. முடிவெட்டி விடுவதற்கு 30 பேர்; குளிப்பதற்கு வசதியாகத் தண்ணீரைப் பீய்ச்சியடிக்க தீயணைப்பு வண்டிகள்; அழுக்குப் போக சோப்பு, ஷாம்பு; வாசனைக்கு முகப் பவுடர்; புது துணி!மணிகள், தின்பதற்கு லட்டு எனத் தடைகளைத் தகர்த்தெறிய 'தூய்மை நடவடிக்கை' எனும் இக்கோமாளி கூத்து 100 கிராமங்களில் ஐந்து லட்ச ரூபாய் செலவில் நடந்தேறியுள்ளது. இதோடு கிராம மக்களுக்குப் பல அன்புக் கட்டளைகளுடன் 30 கோடி செலவில் புதிய கவர்ச்சித் திட்டங்கள் என அந்த அப்பாவிகளைப் பரவசத்தில் ஆழ்த்தினார். லல்லு பிரசாத்தின் கள்ளத்தனம் அறியாத அவர்களோ "எங்கள் ஊருக்கு வந்த முதல் ராசா இவர்தான்" என்று பூரித்துப் போயினர்.

அதே பீகார் மாநிலத்தில் பாட்னா நகரில் ஆர்ப்பாட்டம் நடத்திய இந்திய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களைச் சூழ்ந்து கொண்டு லல்லு பிரசாத்தின் போலீசு குண்டர்கள் தாக்கும் காட்சியிது. அரசியல் சட்டப்படியே ஏற்றுக்கொண்ட நிலச் சீர்திருத்தத்தை விரைந்து அமுல் படுத்த வேண்டும் என்பதுதான் போராடுபவர்களின் கோரிக்கை; சட்டத்திற்குட்பட்ட அமைதியான முறையில்தான் அவர்கள் தங்கள் எதிர்ப்பையும் காட்டியுள்ளனர். இதே லல்லுபிரசாத்கூட நிலச்சீர்திருத்தத்திற்காக புதிய சட்டதிட்டங்களை அமுல்படுத்தப் போவதாக வாய்ச்சவடால் அடித்தவர்தான். சட்டங்களின் மூலமே சீர்திருத்தங்களைக் கொண்டு வரமுடியும் என லல்லு வழிக்கே திசை மாறிப் போனவர்கள்தான் போராடும் இந்த அமைப்பினரும்; அதோடு அவரின் ஆட்சியைக் கவிழ்க்க காங்கிரசு முயன்ற பொழுது கைகொடுத்த கூட்டாளிகள்தான். இருந்தாலும் ஆட்சியாளர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை; குண்டாந்தடியால் மண்டையைப் பிளந்து போட்டு விடும் மூர்க்கத்தனத்துடன் வெறிகொண்டு தாக்குகிறார்கள்.



தேர்தல்களில் ஓட்டுப் பொறுக்குவதற்கும் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் சீர்திருத்த வாக்குறுதிகளையும் கவர்ச்சித் திட்டங்களையும் அள்ளிவீச வேண்டியது; அதே பொழுதில் அவசியமான சீர்திருத்தங்களுக்காக மக்கள் போராடத் துணியும் பொழுது அடக்குமுறையை ஏவி ஒடுக்குவது; இதுதான் லல்லு போன்ற ஆட்சியாளர்களின் உண்மை முகம். இந்த ஏமாற்று - கபட நாடகங்களுக்கு நாம் முற்றுப்புள்ளி வைப்பது எப்போது?

படிப்பகம்